




# சித்த ஜாலம்






இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in










# சித்த



# ஞானம்



இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

Pustaka
Digital Media
http://www.pustaka.co.in

# சித்த ஜாலம்

# Sittha Jaalam

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarrajan

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

என்னுரை

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

## என்னுரை

"சித்த ஜாலம்" எனக்கு மிகமிக மனநிறைவை தந்த ஒரு தொடர் ஆகும். சித்த ஜாலம் தொடராக தினமலர் பக்தி மலரில் வந்து வாசகர்களின் ஏகோபித்த

பாராட்டுதலை பெற்றது. நானும் மிகுந்த கவனமுடன் பிரயாசையுடன் எழுதினேன். வாசியுங்கள். உங்களை நிறையவே யோசிக்க வைத்து விடும் இந்த நூலை நீங்கள் பலபேருக்கு பரிசாகத்தர வேண்டும் என்று உங்களுக்குள் ஒரு தூண்டுதலை இது ஏற்படுத்தும்.நன்றி!

பணிவன்புடன்

இந்திரா சௌந்தர்ராஜன்

13.4.08

மதுரை

# 1

**முன்னதாக...**

**வாசக உலகிற்கு என் வந்தனங்கள்!**

**உலகில் எத்தனையோ ஆயிரம் உயிரினங்கள். அதில் மனிதப் பிறப்புதான் ஆறறிவுடையது. ஆகாயம் நோக்கி உயரத்தில் வளர்வது. ஏழாகிய சப்தத்தால் மொழியை உருவாக்கி அதன் மூலமாக மனம் என்கிற சப்தம் சார்ந்த விஷயத்தை தன்னகத்தே கொண்டிருப்பதாகும்.**

மனதை உடையவன் என்பதே மருவி மனதன் என்றாகி பின் மனிதன் என்றானதாகக் கூறுவர். அதனாலேயே மனிதன் பிறப்பெடுக்கும்போதே சப்தமாகிய அழுகையுடன்தான் பிறப்பெடுக்கிறான்.

வேறு எந்த உயிரினமும் பிறந்த பிறகும் பெரிதாக அழுவதுமில்லை. சப்தமிடுவதுமில்லை!

இதனால்தானோ என்னவோ மானிடப் பிறப்பை அரிய பிறப்பென்று சான்றோர் பெருமக்கள் கூறிச் சென்றனர்.

'அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனினும் அரிது கூன், குருடு செவிடு நீங்கிப் பிறத்தல். என்று நன்கு நடமாட முடிந்த மனித இனத்தைப் பற்றி ஔவைக் கிழவி வெகு அழகாகக் குறிப்பிடுகின்றாள். அண்ட சராசரங்களிலும் மனிதப் பிறப்புக்கு இணையான ஒரு பிறப்பைப் காண முடியவில்லை. ஆயினும் இன்றைய உலகில் பலருக்கு எதற்காக மனிதப் பிறப்பெடுத்தோம் என்பதிலேயே குழப்பம் நிலவுகிறது!

'ஏன்தான் பிறந்தோமோ?' என்று வாழ்வில் துயரங்கள் குறுக்கிடும் போதெல்லாம் பிறந்ததற்காகவே வருந்துகிறோம். தான் ஒரு அரிய பிறப்பு என்பது தெரியாத மனிதர்களே இந்த மண்ணில் அதிகம். எத்தனை நற்கருமங்கள் செய்திருந்தால் மனிதப் பிறப்பு வாய்த்திருக்கும் என்பதை பலரால் உணர முடியவில்லை. நல்ல விதமாய் செல்வாக்கான சூழலில் பிறந்து சகல சுகபோகங்களுடன் வாழ்கின்றவர்களுக்கும் கூட மனிதப் பிறப்பென்பது ஒரு அற்புதம் என்றோ வரப் பிரசாதம் என்றோ தெரியவில்லை. மற்ற உயிரினங்களை எல்லாம் போல், பிறந்து விட்டதால் வாழ்கின்றவர்களாகவே நம்மில் பலரும் உள்ளோம். நாம் நம் பிரக்ஞையால் திட்டமிட்டு பெற்றதில்லை இந்த பிறப்பு. வினைகளின் தொகுப்பில் குறிப்பிட்ட கட்டங்களில் மனிதப் பிறப்பு நேரிடுகிறது. அப்படிப் பிறந்து விட்டதால் வளர்ந்து எழும்போது நாம் எங்கே எந்தத் தாயின் வயிற்றில் பிறந்தோமோ, அந்த

தாயின் வழி மூலமே நம் மூலமாகிறது. அவள் மொழியே நம் தாய் மொழியாகிறது. எங்கு பிறந்தோமோ, அதுவே நம் தாய் மண். அந்த மண்ணில் வாழ்கின்றவர்களே நமது சுற்றங்களாகின்றனர்.

இளமைப் பிராயத்தை கடக்கும் வரை இந்த வளையம் குறித்து கூட நமக்கொரு தெளிவில்லை. பசிக்கிறது, அதனால் சாப்பிடுகிறோம். தூக்கம் வருகிறது, அதனால் தூங்குகின்றோம். வலித்தால் அழுகிறோம். யாராவது நம் எதிரில் வழுக்கி விழுந்தால் நம்மையறியாமல் சிரித்து விடுகிறோம். இங்கே எங்கேயும் வாழ்க்கை 'தான்' என்கிற நம் வசத்தில் இல்லை.

எப்பொழுது நம்முள் நான் யார்?' என்கிற ஒரு கேள்வி தோன்றி அது விசுவரூபம் எடுக்கத் தொடங்குகிறதோ, அப்பொழுதுதான் முதன் முதலாக நாம் நமக்குள் இருந்தே விடுபட்டு உலகைப் பார்க்கின்றவர்களாக மாறுகிறோம்.

அதுவரை பார்த்த பார்வைக்கும், இப்பொழுது பார்க்கும் பார்வைக்கும் எவ்வளவோ வேறுபாடு. நான் யார்? என்கிற மூலமான கேள்வி அதன் பின் பல கிளைக் கேள்விகளையும் கேட்டுத் தள்ளுகிறது.

‘நான் யார்?

எதற்கு இந்தப் பிறப்பு?

பரந்த இந்த உலகில் இன்னார்க்கு மகனாய், மகளாய் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நான் பிறந்திட எது காரணம்? நான் இன்னும் எவ்வளவு காலம் உயிரோடு இருப்பேன்? இப்படி எல்லாம் கேள்விகளை எழுப்பும் என் மனம் இந்த உடம்புக்குள் எங்கே இருக்கிறது? இந்த

மனதிற்காகத்தான் இந்த உடம்பா? இல்லை இந்த உடம்புக்காக மனதா?

இப்படி கேள்விகள் பெருகிக் கொண்டே போகின்றன. இவைகளுக்கான விடைகளும் நமக்கு பலவாறாக கிடைக்கவே செய்கின்றன. அந்த விடைகளும்கூட நிலைத்த விடைகளாக இல்லாமல் மாறிக் கொண்டே இருக்கின்றன.

சில நேரங்களில் இந்த விடைகள் காரணமாகவே குழப்பம் மேலிடுகிறது. இப்படி, 'நான் யாரில்' சிக்கி கேள்விகளில் திளைக்கின்றவர்களுக்கு எதிரில், வாழ்க்கை வாழ்வதற்கே என்கிற ஒரு கோட்பாடுடன் மனம் போன போக்கெல்லாம் போய் வாழ்கின்றவர்களும் இருக்கவே செய்கின்றனர். இவர்கள் சித்தாந்தம், விசாரம், விடை தேடல் போன்றவைகளை ஒரு விதத்தில் பைத்தியக்காரத்தனமாக நினைப்பவர்கள். மனதை அடக்குவது, உடம்பை ஒடுக்குவது போன்ற செயல்பாடுகளை இவர்கள் அறவே வெறுப்பவர்கள்.

எப்படியெல்லாம் இருந்தால் உடம்பும், மனதும் இன்புறுமோ அதற்கே இந்த வாழ்க்கை. அப்படி மகிழ்வாக இருப்பதற்கு செல்வம் தேவைப்படுகிறது. அதனால் செல்வம் சேர்ப்பது என்பது இந்த இன்ப வாழ்வில் ஒரு பகுதி. செல்வம் சேர்த்திட புத்தி, உழைப்பு இரண்டும் தேவை. எனவே, இந்த இரண்டையும் அதற்காகப் பயன்படுத்துவோம்.மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு மரணமானது அதுவாக வரும்போது மடிந்து போவோம். இதை விட்டு விட்டு முன்னதாகவே நான் யார்?' என்கிற விசாரமும், உள்தேடலும் எதற்கு? அதனால்

ஆவது எதுவுமேயில்லை என்பது ‘வாழ்க்கை வாழ்வதற்கே` என்பவர் கருத்தாகும்.

இப்படி கூறுகின்றவர்களும் கூட தங்கள் கொள்கைப்படி மகிழ்ச்சியாகவே வாழ்ந்து களித்தார்களா என்றால், அதுதான் இல்லை.மகிழ்ச்சியாக வாழ முயன்ற அந்த முயற்சிக்குள்ளேயே இவர்களில் பலர் சிக்கிக் கொண்டும் விடுகின்றனர்.

கோடி கோடியாக ஒரு பக்கம் செல்வம், உடம்பிலோ சர்க்கரை, உப்பு என்று ஏராளமான வியாதிகள்! வேறு சிலருக்கோ உடல் நோயின்றி இருந்த போதிலும் விரும்பியது போல வாழ்வில் வெற்றிகளை அடைய முடியாது போனதால் மனதில் ஏமாற்றம், சோர்வு என்று மன வியாதிகள்.

இப்படி ஒரு நிலைப்பாட்டில்தான் இவர்களும் `நம் உடம்பே நம் பிடிக்குள் இல்லையே?’ என்ற கேள்விக்குள்ளும், மனச் சோர்வுற்றவர்களோ "மகிழ்ச்சி என்பது பொன், பொருள் என்ற செல்வத்தில் மட்டும் இல்லை!" என்ற யதார்த்தத்திலும் வந்து சேர்ந்து வானத்தைப் பார்த்து பலவித குழப்பங்களுடன் யோசிக்கத் தொடங்குகின்றனர்.

மொத்தத்தில் எப்படிப்பட்ட கொள்கை கொண்டவர்களாக இருந்த போதிலும் ஓர் உண்மையை அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர். அந்த உண்மையை உரித்துப் பார்த்தால் 'அது நமக்கெல்லாம் மேலே ஒரு சக்தி உள்ளது' என்கிற ஒரு விடையைத்தான் அளிக்கிறது. அந்த சக்தியை இறைசக்தி என்று கூறுபவர்கள் ஆன்மிகம் சார்த்தவர்களாகவும் இயற்கை சக்தி என்று

கூறுபவர்கள் விஞ்ஞானம் சார்ந்தவர்களாகவும் உள்ளனர்.

உலகம் தோன்றிய நாளில் இருந்தே மனித சமுதாயம் இந்த இரு பிரிவுக்குள்தான் இயங்கி வருகிறது. ஒன்று இறை சக்தி; அன்றேல் இயற்கை சக்தி இந்த இரண்டையும் கடந்து மூன்றாவதாக ஒரு விஷயமும் நம் தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றி நம்மிடையே வளைய வருவது தான் ஆச்சரியமான ஒரு விஷயம். அதுதான் சித்த சக்தி: இந்த சித்த சக்திக்குச் சான்றாக நம் முன்னே நூற்றுக்கணக்கில் சித்த புருஷர்கள் உலவியும் வருகின்றனர். இவர்கள் சராசரி மனிதர்களின் வாழ்க்கை வாழ்வதற்கே என்கிற கோட்பாட்டையும் சாராமல், வாழ்க்கை என்பது இறைவனை துதித்து முக்தி பெறுவதற்கே என்கிற ரகத்திலும் சேராமல் பிரத்யேகமான ஒரு மார்க்கத்தில் செல்பவர்கள்.

'இறைவனாகிய கடவுள் என்பவன் வெளியே எங்கேயோ இல்லை; அவன் நமக்குள்ளேயே இருக்கிறான். அந்த கடவுளை நாம் நமக்குள்ளேயே அறிதல் வேண்டும்' என்பதே இவர்கள் சித்தாந்தம். அப்படியே நம்முள் இறையை அறிந்திடத் தடையாக உள்ள புற உலகின் பலவித இயற்கை சக்திகளையும் நாம் ஆட்டுவித்து அதை நாய்க்குட்டி போல நம் காலடியில் கிடக்கும்படி செய்ய லாம்!" என்பதும் இவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கும் ஒரு நிஜம் நான் யார்? என்கிற கேள்விக்கு, இவர்களின் ஒரே பதில் நான் இந்த உலகின் ஒரு அங்கம் என்பதே. அதாவது நான் வேறு, இந்த உலகம் வேறு இல்லை. நான் வேறு இந்த உலகில் வாழும் நீ வேறு என்பதும் இல்லை

என்பதெல்லாம் இவர்கள் நமக்கு (உலகத்தவர்க்கு) உணர்த்தும் விஷயங்களாகும். -

மேலோட்டமாகப் பார்க்கும் போது குழப்பமாகத் தெரியும் இந்த சித்த விஷயம், கிட்டே நெருங்க நெருங்க பல அரிய செய்திகளை நமக்கு உணர்த்தும் ஒன்றாக மாறி விடுகிறது. இவர்கள், நான் யார்?' என்கிற கேள்விக்கு மட்டும் விடை கண்டவர்களில்லை. நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும் விடை கண்டவர்கள். இவர்கள் கூற்றுப்படி நாம் வாழ முற்படும் போது இயற்கை நாம் சொன்னபடி கேட்பதுதான் ஆச்சரியம். இயற்கை மட்டுமா? நம் உடம்பும் தான்.

இவர்கள் பாதையில் செல்லத் தொடங்கிவிட்ட பிறகும் மனம் என்கிற ஒன்றே அமைதிக்காக மட்டுமே என்பது தெளிவாகிறது. உடம்பும் நரை, திரை, மூப்புக் கெல்லாம் சவால் விடத்தொடங்கி விடுகிறது. நம்மைத் தொடர்ந்து வந்து நம் வாழ்வோடு விளையாடி நம்மை ஏற்ற இறக்கம் கொண்ட ஒரு வாழ்க்கைக்குள் பந்தாடும் கர்ம வினைகள் எல்லாம் பொடிப் பொடியாகிப் போய் விடுகின்றன.

இது என்ன மாயாஜாலமென்று மற்றவர்கள் வியக்கும் ஒரு வாழ்வாக நம் வாழ்வும் மாறி விடுவதுதான் ஆச்சரியம். அது மாயாஜாலமில்லை. சித்தஜாலம் என்பதே உண்மை. - அப்படிப்பட்ட சித்த ஜாலம் பற்றி பார்ப்பதே இத்தொடரின் நோக்கம். ஜாலத்தை ஒரு Illusion ஆக கருதினால் அது தவறு. சித்த ஜாலம் என்பது அனுபவித்து அறியவேண்டிய ஒரு விஞ்ஞான முறை என்றும் கூறலாம். ஆயினும் சித்த ஜாலத்தை இந்த உலகின் பிற கோட்பாடுகளை, தத்துவங்களை

விளக்குவது போல மொழி வழி விளக்குவது சற்று அசாத்தியம்.

அதனாலே சித்த ஜாலத்தை உணர முற்படுகிறவர்கள், `கண்டவர் விண்டில் - விண்டவர் கண்டிலர்' என்கிற இரு வரிகளை மட்டுமே கூறுவர். நானும் இங்கே சித்த வாழ்வு பற்றி சிந்திப்பதில் எவ்வளவு தூரம் நானறிந்த மொழி மூலமாக விளக்கப் போகிறேன் என்பது தெரியவில்லை.

சித்த தத்துவப்படி நான் விளக்க முனைவது என்பது 'விண்டவர் கண்டிலர் - அதாவது இதை விளக்க வந்த நான் சித்த ஜாலத்தை நூற்றுக்கு நூறு அறியாதவன் என்பதை உணர்த்துவதாகும். உண்மையும் அதுவே. நான் கூறப்போவதெல்லாம் சொற்பமே. ஒரு கை காட்டிமரம் ஊருக்கு வழிகாட்டுதல் போல ஒரு செயலே அந்த மரம் எப்படி கூடவே வராதோ, அது போல என் விளக்கங்கள் உங்களுக்கு காலமெல்லாம் துணை வராது. அது உங்களுக்குள் ஒரு சுய தேடலுக்கும், நீங்களாக அனுபவித்து அறிவதற்கும் காரணமாக வேண்டுமானால் இருக்கும். 'சித்தானுபவம்` என்பது இந்த உலகின் மகத்தான அனுபவமாகும். அந்த அனுபவத்தால் சித்தர்களாக மாறியவர்கள் பலப்பலர் அகத்தியர், சுந்தரானந்தர், திருமூலர், போகர், இடைக்காடர், காகபுஜண்டர், புலிப்பாணி, பாம்பாட்டி சித்தர், காலாங்கிநாதர், சட்டை முனி, கொங்கணவர், குதம்பைச் சித்தர், யாக்கோபு, சிவவாக்கியர், கருவூரார் என்று ஒரு நீண்ட பட்டியல் நம்மிடையே உள்ளது. இவர்கள் நம் தமிழ்ச் சமுதாயம் நன்கு அறிந்த அந்த நாளைய சித்தர் பெருமக்களாவர்!

இவர்கள் போக இன்னும் நம்மால் உணர முடியாத நிலையில் பல நூறு சித்த புருஷர்கள் நம்மிடையே உலா வந்து கொண்டுதான் இருக்கின்றனர். இத்தொடர் மூலம் அந்நாளைய சித்தர்களையும், இன்றும் வாழ்ந்து வரும் பல சித்தர்களையும் தரிசனம் செய்யப் போகிறோம். புறப்படுவோமா?

## 2

எவரோ சித்தர்?

எதுவோ அவர்களின் ஜாலம்?

அதனால் ஆவதுதான் என்ன? என்பது போன்ற கேள்விகளை எழுப்பி நமக்கு நாமே விவாதம் செய்வதை விட ஸ்தூல உடம்புடன் வாழ்ந்து விட்டு இன்றும் சூட்சும ரூபம் கொண்டு திரியும் எண்ணிறந்த சித்தர்கள் சிலரின் வாழ்க்கைக்குள் நாம் சஞ்சரித்து திரும்புவது நமக்குள்ளே பல அகக்கண்களை திறந்துவிடும் என்பது என் நம்பிக்கை அவர்களில் முதலாவதாக நாம் பார்க்கப் போவது பிண்ணாக்கீசரை!

பொதுவாகவே வாழ்ந்து மறைந்த பல சித்தர்களின் வரலாறுகள் செவி வழிச் செய்திகளாகவே உள்ளன. பேப்பரும், பேனாவும் தோன்றி அச்சு வசதி ஏற்பட்டு, இன்று அதையும் கடந்து கம்ப்யூட்டர் யுகத்தில் இருக்கிறோம். இதெல்லாமே அதிகபட்சமாக ஒரு நூறு முதல் நூற்றைம்பது ஆண்டுகளாகத்தான்!

அதற்கு முன் வரை பனை ஒலைகளே எழுதப் பயன்பட்டன. அவை கைக்கு அடக்கமாக இருந்தாலே அதில் எழுத்தாணி கொண்டு எழுத முடியும் என்பதால்

அவைகளும் கூட ஒண்ணரை அங்குல அகலமும், அதிக பட்சமாய் ஒர் அடி நீளமும் உடையதாகத் திகழ்ந்தன.

இதில் எழுத்தாணி கொண்டு எழுதுவது என்பதும் சாமான்யமான ஒன்றல்ல. அதற்கு தேர்ந்த பயிற்சியும், பொறுமையும் தேவைப்பட்டது. அது மாத்திரமல்ல அப்படி எழுதியதை தைலம் பூசி பாதுகாப்பதும் பெரும் பாடாக இருந்தது.

அப்படிசெய்யத் தவறினால் கரையான் பசிக்கு அது இரையாகும் ஒரு நிலை இருந்தது. எனவே, எழுத்தாணி கொண்டு எழுதுபவர் என்பவரே ஊருக்கு ஒரு சிலரே இருந்தனர். அவர்களையும் எழுத்தாணிகள் என்றே அழைத்தனர். சில இடங்களில் ஒலைக்காரர் என்றும் அழைத்தனர்.

இந்த ஒலைக்காரர்களுக்கும் எழுத்தாணிகளுக்கும் ஊர்ப் பஞ்சாயத்தின் வரவு-செலவு கணக்கு எழுதவும், சில புலவர்கள் தரும் கூலிக்காக அவர் கூறுவதை எழுதித் தரவும்தான் நேரம் சரியாக இருந்தது.

நீண்ட வரலாறுகளை, காதைகளை பாகம் பாகமாக எழுத முடியும் என்கிற எண்ணம் கூட பெரிய அளவில் இல்லாதவர்களாகவே இருந்தனர். இதனால் அந்தக் காலத்தில் 'பிரவசனம்' எனும் கதை சொல்லும் கலைதான் பிரபலமாக இருந்தது. இதிலும் கூட பல உட்பிரிவுகள் இருந்தன. சமஸ்கிருதம் மற்றும் மணிப்பிரவாள மொழியில் கதை சொல்பவர், ஹரிகதா போதகர் அல்லது சிவஞான சிரோன்மணி எனப்பட்டார். நாட்டுப்புறப் பாடல்களோடு கூத்து கட்டி கதை சொல்பவர் வையாளி என்றும் கூத்தாடி என்றும்

அழைக்கப்பட்டார். தெரு முனை, தேரடி, கோயில் மண்டபங்கள் இவர்களது கதை சொல்லும் இடங்களாகும். திருவிழாக்காலங்களும், விசேஷ நாட்களும் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. இவர்கள் சொல்லப் போகும் கதை பற்றி முதலில் தமுக்குப் போட்டு ஊர் முழுக்கச் சொல்லப்படும்.பின்னர் தீப்பந்த ஒளிக்கு நடுவிலே விடிய விடிய இவர்கள் கதை சொல்வார்கள். ஆயிரக்கணக்கான பேருக்கும் கேட்கும் படியாக உரக்கச் சப்தம் போட்டு ஏழரை கட்டை சுருதியில் சொல்வார்கள்.

இவர்களும் கூட ராமாயண மகாபாரதத்தையும், வள்ளித் திருமணம், நள தமயந்தி கதையையும், அரிச்சந்திரனின் மயான காண்டத்தையும்தான் அதிகமாகபேசி நடித்தனர். அதனால் அக்காலத்தில் வாழ்ந்து மறைந்த சித்த ஞானியர்கள் பற்றி முறையான பதிவுகளே இல்லாமல் போய் விட்டது. இருப்பினும் அங்கும் இங்குமாக கூறப்பட்டவைகளை என் போன்ற சிலர் ஒழுங்குபடுத்தி ஒரு வடிவப்படுத்தித் தந்ததையே இத்தொடரிலும் பார்க்கப் போகிறோம்.

அவ்வகையில் பிண்ணாக்கீசர் எனும் சித்தரைப் பற்றி சற்று சிந்திப்போம்.

இவர் பெயரே வினோதமாக இருக்கிறதல்லவா?

பெயரிலேயே பொருளும் ஒளிந்துள்ளது. இவரது இயற்பெயரை வையாபுரி என்றும் கேசவன் என்றும் சிலர் கூறுவர். ஆனால் தாய், தந்தை வைத்த பெயர்கள் சித்த புருஷர்கள் வரையில் பெரும்பாலும் நிலைத்ததில்லை. அவர்களது பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே இருந்து விடுகின்றன.

பிறக்கும்போதே இவரது நாக்கு பின்னப்பட்டு- இரு நாக்குகளோடு இருந்தது. அதாவது நாவின் கூரிய முனை வெட்டுப்பட்டது போல இருக்க. அதனால் இரு நாவுகளை இவர் கொண்டது போல இருந்தது.அதனால் பேசவோ, உண்ணவோ சிலருக்கு ஒரு தடையும் இல்லை. எனவே பின்னமடைந்த நாக்கை கொண்ட இவர் உலகின் ஒரே கடவுள் அந்த ஈசனே. அவன் வேறு அந்த திருமால் வேறல்ல! என்று உலகுக்கு உரத்த குரலில் கூறியதால் பின்ன நாக்கு கொண்ட இவரும் ஒரு ஈசரே என்னும் பொருளில் பின்னாளில் இவர் பெயர் பின்னாக்கீசர் ஆயிற்று. அதுவே திரிந்து பிண்ணாக்கீசர் என்றும் புண்ணாக்கீசர் என்றெல்லாமும் மருவிற்று.

எவனொருவன் சித்தன் ஆக வேண்டும் என்று விதியிருக்கின்றதோ, அவன் வாழ்வு குழந்தையாக இருக்கும் போதே வித்யாசமானதாக மாறிவிடுகிறது. எல்லா குழந்தைகளும் தெருவில் கூடி விளையாடும்போது பிண்ணாக்கீசர் மட்டும் கை கட்டிநின்று கொண்டு அந்த விளையாட்டை வேடிக்கை பார்ப்பார். அவரை அவரது சகபிள்ளைகள் விளையாட அழைத்தால், நீங்கள் விளையாடுங்கள், நான் பார்க்கிறேன்' என்று ஜாடையாகவே கூறிவிடுவார்.

இது அவரை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளவும் காரணமாயிற்று. 'வையாபுரிக்கு விளையாட பயம், அதுதான் வர மாட்டேங்கறான்' - என்று பேசிக் கொண்டனர்.

அவரது தாயிடமும், 'உன் பையன்கிட்ட ஏதோ கோளாறு இருக்கு என்னன்னு கவனி' என்றனர். தாயும் மிகவே கவலைப்பட்டாள். 'மகனே நீ ஏனடா இப்படி

இருக்கிறாய். ஏற்கனவே உன் நாக்கில் ஒரு கோளாறு. இப்போது மனதிலுமா?' என்று கேட்டு அழுதாள். ஆனால், சித்தரோ சிரித்தார் விளையாடும்போது என்ன நடக்கிறது என்று, தான் உணர்ந்ததையும் தாயிடம் பகிர்ந்து கொண்டார்.

"அம்மா. விளையாடத் தொடங்கின உடனேயே உடம்பும், மனசும் ஒண்ணாயிடுதும்மா...மற்ற நேரங்கள்ள அது அப்படி ஒண்ணாகறது கிடையாது. தூங்கும்போது, படிக்கும்போது, நடக்கும்போதெல்லாம் மனசு உடம்பை விட்டு எங்கேயோ போயிடுது. ஆனா, விளையாடும் போது மட்டும்தான் மனசு உடம்பை முழுமையாக கூட்டு சேர்த்துக்குது. அதே சமயம் இது இரண்டும் சேர்ந்துட்டாலே வெற்றி இல்லேன்னா தோல்வின்னு ஒண்ணு வந்துடுது. விளையாடத் தொடங்கிட்டாலே நாம சம நிலையை இழந்துடறோம். வெற்றி வந்தா தற்காலிகமா ஒரு சந்தோஷம். தோல்வி வந்தாலும் தற்காலிகமா ஒரு துக்கம்... இரண்டுமே நிலையில்லை. இந்த வெற்றியும் - தோல்வியும் மனசை ரொம்பவே பாதிக்குது. இதை சமமா எடுத்துக்கிட்டாதான் இந்த பாதிப்புல இருந்து தப்பிக்க முடியும். ஆனா, அது அவ்வளவு சுலபம் இல்லை.

என்னை கேட்டா சிறு வயசுல விளையாட்டுங்கற பேர்ல நாம வெற்றின்னா என்ன. தோல்வின்னா என்னன்னுதான் சொல்லிக் கொடுக்கறோம். வாழ்க்கைங்கறது என்ன? வெற்றியையும், தோல்வியையும் தெரிஞ்சுக்கற ஒண்ணா? சரி, அப்படியே அதுதான்னாலும் எந்த வெற்றி நிரந்தரமா ஒருத்தர்கிட்டயே இருந்திருக்கு. நிரந்தரமில்லாத

தற்காலிக சுகம் தர்ற ஒண்ணை தேடறதா வாழ்க்கையோட நோக்கம்? '

- இப்படி ஒரு சிறுவன் தன் தாயைப் பார்த்து கேட்டால் அது அந்த தாயை எப்படியெல்லாம் பாதித்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்!

இளம் வயதிலேயே இப்படி கேள்வி கேட்டு, தான் ஒரு சிந்தனையாளன். எவரும் என்னை மாற்ற முடியாது. ஆனால் என் சிந்தனைகள் கேள்விகளாகி எவரையும் மாற்றும் என்று உலகுக்கு உணர்த்தியவர் பிண்ணாக்கீசர்.

இப்படித் தொடங்கிய அவரது சிந்தனைகள் அவரை பெரும்பாலும் மவுனியாகவே வைத்திருந்தது. ஆகாயத்தைப் பார்த்தபடி அவர் யோசிக்கத் தொடங்கி விட்டால் நேரம் போவதே தெரியாது.

முதலில் அவரைப் பார்த்து ஏதோ கோளாறோ என்று பயந்த இவரது தாய் அதன் பின் அப்படி நினைப்பதே இல்லை.

இவன் கோளாறானவன் அல்ல. கோளறுப்பவன் (கோள்களின் பிடிகளில் இருந்து விடுபட்டவன்) என்பதை போகப் போகவே புரிந்து கொண்டாள்.

பிண்ணாக்கீசருக்கும் மனதுதான் முதலில் விழித்துக் கொண்டது. உடம்பு அவ்வளவு சுலபத்தில் வசப்பட வில்லை. அதன் பசி, தாகம், வியர்வை, மலம், மூத்திரமெல்லாம் உடம்பின் வசம்தான் இருந்தது. அது அவரையே அவ்வப்போது ஆட்டிப்படைத்தது.

ஒருமுறை வயிற்று வலி வந்தது. அது அவரை பாடாய் படுத்திவிட்டது. அதுவே அவரை உடம்பு குறித்து விழிப்படையவும் வைத்தது. இந்த வலி எங்கிருந்து வருகிறது? எதனால் வருகிறது? இது எப்படி வரலாம்? இதை வெல்லும் வழி எது?' என்று கேள்விகளால் வேள்வி நடத்தத் தொடங்கிவிட்டார். அவருடைய தாய் அவரை வைத்தியரிடம் அழைத்துச் சென்றார். வைத்தியரும் பரிசோதித்து விட்டு, உஷ்ணப் பதார்த்தங்களை உட்கொண்டதே காரணம்' என்றார். உடனே, பிண்ணாக்கீசர், 'நான் சாப்பிட்டே நான்கு நாட்களாகிவிட்டது. அப்படி இருக்க எனக்கு எப்படி வயிற்று வலி வரலாம்? என்று கேட்டார். அப்படியானால், வெறும் வயிற்றில் அதிகம் அமிலம் சுரந்து அதனால் புண் ஏற்பட்டு வலி ஏற்பட்டிருக்கும் என்றார்.

'இது என்ன கூத்து? சாப்பிட்டாலும் வலிக்கும், சாப்பிடாவிட்டாலும் வலிக்குமா?' என்று திருப்பிக் கேட்டார் பிண்ணாக்கீசர்!

'நிச்சயமாக... உடம்புக்கு ஏற்றதையே உண்ண வேண்டும். உண்ணாவிட்டாலும் அதனால் பாதிப்பு உண்டு. உடம்பைப் பேணுவது என்றால் சும்மாவா? என்று திருப்பிக் கேட்டார் வைத்தியர்.

வைத்தியரின் கேள்வி பிண்ணாக்கீசர் மனதில் ஒரு பெரும் போராட்டத்தையே துவக்கி விட்டது. வைத்தியர் கொடுத்த மருந்து கூட தற்காலிகமாகத்தான் வலியை நீக்கிற்று. திரும்பவும் வலிக்க ஆரம்பித்தது. அந்த வலி அவருக்கு உடம்பின் மேலேயே ஒரு கோபத்தை உருவாக்கிற்று. ஏற்கனவே அது தன் பிடியில் இல்லை என்கிற கோபம். இப்பொழுதோ அது வலிப்பதால்

ஏற்படுகிற வேதனை. எல்லாம் அவரிடம் ஒன்று திரண்டது!

இந்த உடம்பானது ஒரு மனிதனுக்கு வரமா இல்லை சாபமா என்கிற கேள்வி அவரைப் பிடித்துக்கொண்டு உலுக்கத் தொடங்கிவிட்டது.

மற்றவர்களாக இருந்தால் மருந்தை சாப்பிட்டோமா வலியிடம் இருந்து தப்பித்தோமா என்றுதான் இருப்பார்கள். இவரோ வலிக்கும் போதெல்லாம் மருந்து சாப்பிடாமல் அந்த வலிக்குள் மூழ்கினார்.

வலி உணர்ச்சி கண்டு ஏன் மனது நடுங்குகிறது?

அதனால் உடம்பில் என்னதான் நிகழ்கிறது? என்கிற கேள்விகளுடன் அந்த வலியை ஆராயத் தொடங்கி விட்டார். ஒரு கட்டத்தில் வலி நின்றவுடன், 'அடடா முழுவதுமாக புரிந்து கொள்ளுமுன், இந்த வலி நின்று விட்டதே... இது பெரிய மாயாவியாக இருக்கிறதே?' என்றெல்லாமும் எண்ணிக் கொண்டார்.

எத்தனை பேர் இப்படி வலியை காதலிப்போம்? வலிக்காக காத்திருப்போம். அதை அடித்துத் துரத்தாமல் ஆராயவும் செய்வோம்?

பிண்ணாக்கீசர் செய்தார்!

இப்படியெல்லாம் செயல்பட்டதால்தான் வையாபுரி பிண்ணாக்கீசராகவே ஆனார்... இப்படி எதையும் மாறுபட்ட கோணத்தில் பார்த்துத் தன்னுள் அமிழ்ந்து தனக்குத்தானே கேள்விகள் கேட்டு விடைகளை தேடிய சித்தர் இவர்.

இவரது வாழ்வில் பாம்பாட்டி சித்தரின் வருகைதான் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்திற்று. குண்டலினியை எழுப்பி உச்சந்தலைக்கு கொண்டு சென்று அதை அங்கேயே நிறுத்தி அப்படியே பேரானந்தத்தில் திளைப்பதில் வல்லவர் பாம்பாட்டி சித்தர்.

காட்டில் திரியும் பாம்புகளை எல்லாம் மகுடி ஊதிப் பிடித்து அதை ஆட்டி வைப்பவர் என்று பலர் தவறாக புரிந்து கொண்டுள்ளனர்.

உண்மை அதுவல்ல!

நமது உடலின் பின் பாகத்தில் முதுகுத் தண்டு வடத்துக்கு நேர் கீழே மலப்பைக்கு அருகில் அதன் அழுத்தத்தோடு கிடப்பதுதான் உருண்ட குண்டலினி. ஆண்டி முதல் அரசன் வரை மனிதப் பிறப்பெடுத்த அத்தனை பேருக்கும் இது உண்டு. உயிரின் மையப் புள்ளி அது. எப்படி ஒருவரின் உயரம் அவரது விரலிடைத் தூரமான ஒரு சாண் எனுமளவில் எட்டு சாண் அளவிற்கு இருக்குமோ அதே போல ஒருவரின் மொத்த உயரத்தின் மிகச் சரியான மையத்தில் குண்டலினியும் இருக்கும்.

இதனை எழுப்பி தண்டுவடம் வழியாகவே உருட்டிச் சென்று பின்கழுத்து வழியாக அப்படியே மேலேற்றி அதை உச்சந்தலை பாகத்திற்கு கொண்டு சென்று நிறுத்திடும்போது, ஒரு பெண்ணைப் புணருங்கால் விந்து வெளியேறும்போது ஏற்படும் பரவசத்தை விடவும் பல மடங்குப் பரவசம் உடம்பெங்கும் ஏற்படும். ஒரு முறை அந்த சுகத்தை அனுபவித்தவர் திரும்ப திரும்ப அதை அனுபவிக்கத் துடிப்பார்கள். அவர்கள்

முன்னால் இந்த உலகமும் அதில் உள்ள அத்தனை சுகங்களும் கூட தூசாகி விடும்.

ஆனால், குண்டலினியை இப்படி எழுப்புதல் அசாதாரணமான ஒன்று. இதற்காக உடம்பை மிகவே பக்குவப்படுத்த வேண்டும். அதற்கு பல ஆண்டுகள் கூட ஆகும். சிலர் வரையில் உடலமைப்பு அதற்கு இடமே தராது.

இப்படி குண்டலினியை எழுப்பி உச்சந்தலையில் நிறுத்தும்போது ஒரு பாம்பானது எழும்பி படம் விரித்து ஆடுகிறாற் போல இருக்கும். குண்டலினியும் ஒரு பாம்பு போன்றதே! அதையே ஆட்டிவைக்கத் தெரிந்தவர் எனும் பொருளில்தான் அவர் பாம்பாட்டி சித்தர் என்று அழைக்கப்பட்டார்.

அப்படிப்பட்ட பாம்பாட்டி சித்தரை பிண்ணாக்கீசர் சந்தித்ததும், அதன் பின் அவர் சிந்தித்ததும் ஒரு சுவையான ஒரு வரலாறாகும்.

## 3

பாம்பாட்டி சித்தர் நெடுங்காலம் வாழ்ந்ததும் வசித்ததும் கோவை அருகேயுள்ள மருதமலையில்தான். இப்பொழுதும் பயபக்தியோடு மருதமலைக்குச் செல்பவர்கள் முருகனை தரிசனம் செய்து விட்டு பக்கவாட்டில் உள்ள பாம்பாட்டி சித்தரின் ஜீவஸ்தானத்துக்கு செல்லும்போது சர்ப்பங்களைக் காணலாம். சில நொடிப் பொழுதுகள் மட்டும் அதுவும் கண்ணில் பட்டு விட்டு மறைந்துவிடும்.

அவைகள் உண்மையில் சர்ப்பங்களல்ல என்றும் சர்ப்ப வடிவில் சித்த புருஷர்கள் பாம்பாட்டி சித்தரின் ஜீவஸ்தானத்திற்கு வந்து செல்கிறார்கள் என்போரும் உண்டு. பொதுவாக குளிரான மலைப்பிரதேசத்தில் பெரும்பாலும் பாம்புகள் இருக்காது. இடையறாத மழை, அதனால் மலைச்சரிவில் ஏற்படும் தடமாற்றங்கள் இவையெல்லாம் பதுங்கி வாழும் ஒரு உயிரியான பாம்புகளுக்கு எதிரானவை. மலைப் பாம்பு மட்டும்தான் மலைகளில் வசிக்க இயலும். ஏனென்றால், அவைகளின் பசிக்குத், தேவைப்படும் பருத்த மிருகங்களான பன்றி, மலையாடு, மிளா மான் போன்றவை எல்லாம் மலைப்புதர்களில்தான் அவைகளுக்கு கிட்டும்.

எனவே, மருதமலையில் சர்ப்ப நடமாட்டம் என்பதை இயல்பான ஒன்றாகக் கருத முடியவில்லை... அவைகளை சித்த புருஷர்களாக சிலர் கருதுவதிலும் உண்மை இருக்குமோ என்றே கருதத் தோன்றுகிறது.

அது சரி. இங்கு வரும் சித்தர்கள் ஏன் உருமாறி வர வேண்டும்.அதுவும் சர்ப்பமாக ஏன் வரவேண்டும்போன்ற கேள்விகளெல்லாம் நாம் புத்தி பூர்வமாக முனைந்து கேட்பவை.

இவைகளுக்கெல்லாம் ஒரு பதில் நிச்சயம் உண்டு. ஆனால், அந்த பதில் ஒரு நேரான பதிலாக இருக்க வாய்ப்பு இல்லை. சித்தர்களை முழுவதுமாக விளங்கிக் கொள்ள நாம் முனையும்போது நமது அறிவுபூர்வமான கேள்விகளுக்கும் விடைகள் அங்கும் இங்குமாய் கிடைக்கலாம்.

சரி... பாம்பாட்டி சித்தரிடமே திரும்ப வருவோம். இந்த சித்தர் பாம்பு பிடிக்கும் இனத்தைச் சேர்ந்த ஒருவர். மகுடி ஊதி விஷப்பாம்புகளை பிடிப்பதை ஒரு பெரும் சாகசமாக கருதியவர். உயிரைத் துச்சமாகக் கருதி பாம்புகளைப் பிடித்து அவைகளைக் கொன்று அதன் தோலை உரித்து அதன் மூலமாக சில பொருட்களை செய்வதும், பாம்பு விஷத்தை மருந்துக்கு பயன்படுத்தும் சிலருக்கு கொடுப்பதும் இவருக்கு வெறுத்துப் போய் பாம்புகள் நாகமாணிக்கங்களை உமிழக் கூடியவை என்று சிலர் சொன்னதை நம்பி அந்த நாகமாணிக்கத்தை தேடி அலையோ அலை என்று அலைந்தவர்.

இவரை சித்தராக்கிய பெருமை சட்டை முனியையே சாரும். 'புற்றுப்பாம்புகளை பிடிப்பதை பெரிதாக கருதும் அற்ப மானிடனே. உன் உடம்புக்குள்ளேயே ஒரு பாம்பு சுருண்டு படுத்த நிலையில் கிடக்கிறது. அதைப் பிடிக்க கற்றுக் கொள் முதலில்!' என்று அவர்தான் குண்டலினியை எழுப்ப பாம்பாட்டிக்கே கற்றுத் தந்தவர்.

வைராக்ய சிந்தையோடு பன்னிரெண்டு வருட கடுந்தவத்தில் உடம்பை வருத்தி உள்ளொளி பெருக்கி பின் குண்டலினியையும் எழுப்பக் கற்றுக் கொண்ட பாம்பாட்டி சித்தருக்கு, அவரைப் போல ஒரு சிஷ்யர் அகப் படவேயில்லை. அதிலும் குண்டலினி பற்றி கேள்வி கேட்டு அதற்கான பயிற்சி பெற்று அந்த சுகத்தை அனுபவிக்கும் பொறுமை எவரிடமும் இல்லை. இதனால் பாம்பாட்டி சித்தரிடமும் ஒரு கேள்வி இருந்தது. கூடவே மதிப்புமிக்க குண்டலினி யோகம் பயில ஒருவருக்கு விதிப்பாடும் இருக்க வேண்டும் என்பதும் அவருக்கு நன்றாகவே

தெரிந்திருந்ததால் யாராவது அவரிடம் குண்டலினி பற்றி பேசினால் கூட உடனே பாம்பாட்டி சித்தர் அவர்களிடம் அது பற்றி விண்டுரைக்க மாட்டார். விடாமுயற்சி, அதற்காக எதையும் தியாகம் செய்யும் திடசித்தம் இதெல்லாம் இருக்கும் ஒருவருக்கே அவரும் குண்டலினி யோகம் குறித்தும் கற்பிக்க எண்ணம் கொண்டிருந்தார்.

இப்படி அழுத்தமான ஒரு மனோநிலையில் அவர் தேச சஞ்சாரம் செய்து கொண்டிருந்த சமயத்தில்தான் பிண்ணாக்கீசரும், பாம்பாட்டி சித்தரை சந்தித்தார். பாம்பாட்டி சித்தர் வருகிறார் என்றாலே கூட்டம் திரண்டு விடும். கை, கால், கழுத்து, இடுப்பு என்று உடம்பெல்லாம் பாம்புகளோடு அவர் வரும்போது அவர் அந்த இனத்தையே அடிமைப்படுத்தி விட்டதுபோல தோன்றும்.

ஆனால், பாம்பாட்டி சித்தருக்கோ இந்த பாம்புகளால் ஆவது ஒன்றுமில்லை. உனக்குள்ளேயே ஒரு பாம்பு இருக்கிறது அதை எழுப்ப முயற்சி செய் என்று சொல்லாமல் சொல்ல வேண்டும் என்பதே அவர் நோக்கம்.

இப்படி பாம்பாட்டி சித்தரும் உலா வருவதால் அவரை பார்க்கின்றவர்களும் எட்டவே நின்று விடுவார் கள். அப்படிப்பட்டவரை கிட்டச் சென்று அவர் காலைத் தொட்டு தைரியமாக வணங்கியவர் பிண்ணாக்கீசர்தான்!

'அடடே என் அருகே வர உனக்கு பயமாக இல்லையா?' என்று பாம்பாட்டி சித்தரும் பிண்ணாக் கீசரிடம் கேட்டார். பிண்ணாக்கீசரோ, உங்களுக்கு கட்டுப்பட்ட சர்ப்பங்கள் உங்களை வணங்குபவருக்குத்தானா

துன்பமளித்து விடப் போகிறது?' என்று எதிர்க் கேள்வி கேட்டார். அந்த முதல் பதிலே பாம்பாட்டி சித்தரைக் கவர்ந்து விட்டது. அதன் பின் அவர் பின்னாலேயே சென்றார் பிண்ணாக்கீசர். முதலில் பாம்பாட்டி சித்தரும் அதை பெரிதாய் கருதவில்லை. பாம்புகளை வேடிக்கை பார்ப்பதற்காக கூட வருவதாகத்தான் கருதினார். ஆனால் அதற்காக இல்லை என்பது போகப் போகவே அவருக்குப் புரிந்தது.

“ஏனப்பா எதற்காக இப்படி என் பின்னாலேயே வருகிறாய்?" என்று ஒரு நாள் கேட்டார். "சாமி. வெற்றியும் தோல்வியும் கலந்து கிடக்கும் இந்த வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை.இங்கே எதுவும் நிலையாகவே இல்லை. உடம்பு கூட நாளுக்கு நாள் வளர்ந்தும் தேய்ந்தும் மாறிக் கொண்டே இருக்கிறது. இந்த மாற்றங்களை வேடிக்கை பார்க்க மட்டுமே முடிகிறது. எதையும் தடுத்து நிறுத்த முடியவில்லை.எனவே, மாறாத இன்பம் தரும் ஒன்றை நீங்கள் எனக்குக் காட்டியருள வேண்டும்” என்றார். அப்போது மாடு மேய்க்கும் ஒரு சிறுவன் புல்லாங்குழல் இசைத்துக் கொண்டிருந்தான்.

அற்புதமான இசை…

காற்றில் மிதந்து வந்து மனதை லேசாக்கியது.

பாம்பாட்டி சித்தரும் பிண்ணாக்கீசருக்கு பதில் கூறாமல் அந்த சிறுவனின் இசையை ரசித்தார். அதுவே உன் கேள்விக்கு பதில் இசைதான் என்று சொல்லாமல் அவர் சொல்வது போல பட்டது.

‘சாமி... மாறாதது இசைதான்னு நீங்க சொல்லாம சொன்னதை புரிஞ்சுக்கிட்டேன். இசைமனதுக்கு மகிழ்ச்சி தரக் கூடியதுதான். ஆனா அதுக்காக பசி - தாகமின்றி இசையே வாழ்க்கைன்னு கிடக்க முடியுமா? உடம்புன்னு ஒண்ணு இருக்கே. அதுக்குள்ள பசின்னு ஒரு நெருப்பு எப்பவும் எரிஞ்சுக்கிட்டே இருக்கே? அதை ஜெயிக்க என்ன வழி?”

பிண்ணாக்கீசரின் கேள்விகளுக்கு முதலில் வார்த்தையில்தான் பதில் தர எண்ணினார் பாம்பாட்டி. ஆனால், பேச்சைவிடமவுனமாக குறிப்பால் கூறுவோம். இவனுக்கு விதி இருந்தால் பிடித்துக் கொள்ளட்டும். பேசினால் பேச்சுக்குப் பதில் பேச்சு, அந்த பதில் பேச்சுக்கு பதில் பேச்சு என்று காட்சிகள் விரியும். சப்தம் அதிகமானாலே சித்தம் குழம்பும் சித்தத்தின் சிறப்பே சப்தத்தை அடக்கி மனதை எண்ணங்களே இல்லாத சூன்ய வெளியாக்குவதுதானே..? என்று தனக்குள் எண்ணியவர் பிண்ணாக்கீசரின் கேள்விகளுக்கு பதிலாக தன் ஆட்காட்டி விரலால் தன் கண்ணிரண்டையும் சுட்டிக்காட்டினார். பின் அப்படியே கைகளை அசைத்துக் காட்டிவிட்டு காலிரண்டையும் காட்டினார்.

அது, ஒரு பாட்டுக்கு அவர் அபிநயம் பிடிக்கிற மாதிரி கூட இருந்தது. முதலில் பாம்பாட்டி சித்தரின் அந்த அபிநய விளக்கம் பிண்ணாக்கீசருக்கும் புரிய வில்லை.

“என்ன சாமி இது. என் கேள்விக்கு பதிலா கண்ணு, கை, காலுன்னு உடம்பு உறுப்புகளை காட்டினா என்ன அர்த்தம்' என்று கேட்டபடியே அவரைப் பார்த்த போது, ‘இனி இவன் எதிரில் இருந்தால் இவன் தொடர்ந்து கேள்விகளால் கணை தொடுப்பான்’ என்று கருதியோ என்னவோ அவர் மாயமாகி விட்டிருந்தார்.

பிண்ணாக்கீசருக்கு பெரிதும் ஏமாற்றமாகி விட்டிருந்தது. இந்த மனிதர் என்ன இப்படி நட்டாற்றில் விட்டு விட்டு போய் விட்டாரே என்றும் தோன்றிற்று. ஆனால், அவரது செய்கை அவர் மனதில் திரும்ப திரும்ப அதனுள் ஒரு ஆழ்ந்த தத்துவமே இருப்பதை அவருக்குள் மெல்ல உணர்த்தத் தொடங்கியது.

கண்ணை அவர் சுட்டிக் காட்டியதற்கு பொருள் நீ பார்ப்பதால்தான் இவ்வுலகம் தெரிகிறது. பார்க்காது உறக்கத்தில் இருக்கும்போது நீயும் சரி, உலகமும் சரி இருந்தும் இல்லாது போகிறது. எனவே, இந்த உலகம் இரு விதமானது. அது இருக்கிறது, இல்லாமலும் போகிறது. அடுத்து கைகள். கைகள் என்பதே இயங்குவதற்காகத்தான்.அதுவும் இரு விதமாக இடது, வலது என்றும் பத்து விரல்களோடும் அது உள்ளது. ஒரு கையை பார்த்தே அது இடதா, வலதா என்பதை கூறிவிட முடியும். அது இயக்கத்தின் சின்னம். அதைக் குவித்து மூடிவிட்டால் சக்தியை நாம் ஒருமைப்படுத்தி விட்டதாகப் பொருள்.

நீ பார்க்கும் உலகில் சக்தியை ஒருமைப்படுத்து என்பது இதன் அடிப்பொருள். மூன்றாவதாக அவர் காட்டியது கால்களை கால்களுக்கும் இரண்டு பணி. ஒன்று தாங்குவது; இன்னொன்று கடப்பது காலகள் இருப்பதாலேயே ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல முடிகிறது.

மொத்தத்தில் மூன்றையும் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்துப் பார்த்த போது, 'நீ பார்க்கும் உலகை இயங்கிக் கடக்க வேண்டும். பார்க்காத உலகை உன்னுள் அடக்கி ஒருமைப்படுத்தி இயங்காது ஒரு இடத்தில் நின்று காக்க வேண்டும்! என்று அவர் சொன்னதாகவே

பொருள் கொள்ள முடிந்தது அவரால். ஆனால் பாம்பாட்டி சித்தரின் இந்த பரிபாஷையை சிலர் நயன தீட்சை, ஸ்பரிச தீட்சை, திருவடி தீட்சை என்றும் வகைப்படுத்துவர். அதாவது பார்த்தும், தொட்டும், பணிந்தெழுந்ததால் திருவடிகளாலும் நீ அருளைப் பெற்றாய். நீ பெற்ற அருளே இனி உன்னை வழி நடத்திச் சென்று காத்து நிற்கும் என்றும் இதை பொருள் படுத்திக் கொள்வர். எப்பொழுதுமே சித்தர்கள் விஷயமே இப்படித்தான். அவர்கள் நேராக பொட்டிலடித்தாற் போல எதையும் கூற மாட்டார்கள். இப்படி பரிபாஷைகளில் பேசிச் சென்றதே ஏராளம். ஏராளம்...

சரி பிண்ணாக்கீசர் அதன் பின் என்ன செய்தார்? பாம்பாட்டி சித்தரின் உபதேசம் அவரை என்னவாக்கியது? அவரது தனிப் பெரும் சாதனை என்பதுதான் என்ன..? பிண்ணாக்கீசர் பற்றி மட்டுமல்ல. எண்ணிறந்த சித்தர் பெருமக்கள் தங்களையே அனுபவப் பொருளாக்கி வாழ்வின் மறுபக்க உண்மைகளைக் கண்டறிந்து வைத்துள்ளனர். காரிய சித்திக்கு மதுரை சுந்தரானந்தர், நோய் நிவாரணத்துக்கு திருபுவனத்தில் ஜீவ சமாதியான கோரக்கர், மனோ பாதிப்புகளை சீர்படுத்தும் நெரூர் பிரம்மானந்தர், குழந்தைப் பேற்றினைத் தரும் திருவழிச் சித்தர் (மதுரை ஆனைமலை), கல்வியில் மேலான உயர்வைத் தரும் திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள மச்சமுன் தீர்த்தம்... இது போக அழகர்கோயில் மலை மேல் அமைந்துள்ள கடுகவெளிச்சித்தர் தவமியற்றிய விருட்சம், இன்னும் நூற்றுக்கணக்கான சித்தர்கள் வந்து செல்லும் சேலம் அருகேயுள்ள சித்தர் கோயில், சித்தர்களின் தனிப்பெரும் உலகமாகவே திகழும் சதுரகிரி மலைத் தலமும் அதிலுள்ள தீர்த்தங்களும், வெளிகளும் யாரோ

சித்தர்? எதுவோ அவர் ஜாலங்கள் அதனால் மானுடம் எப்படி செழிக்கும் என்பதற்கெல்லாம் விடையாகத் திகழப் போகிறது.

## 4

பாம்பாட்டி சித்தரால் தூண்டப்பட்ட பிண்ணாக்கீசர் அதே சிந்தனையாகத்தான் கிடந்தார். அதன் பின் அவரை மவுனம் வெகுவாக ஆட்கொண்டுவிட்டது.

உள்பேச்சு அதிகரிக்கும்போது வெளிப்பேச்சு தானாக நின்று போகும்தானே? மவுனத்தில் விழுந்தவருக்கு அடைக்கலமாய் திகழ்ந்தது அந்த ஊர் கண்ணன் கோவில்தான்!

அந்த கோவிலில் மாலைவேளைகளில் கண்ணனின் பெருமைகளை கதைகளாகக் கூறுவார்கள்.

தேவகியின் வயிற்றில் பிறந்த கண்ணன் இடம் மாறி யசோதையை அடைந்தது. குழந்தையாக இருக்கும்போதே அவன் மாயங்கள் புரிந்தது. குறிப்பாக யாதவச் சிறுவர்களோடு மாடு மேய்த்து கோவர்த்தன கிரியையே தன் விரலால் தூக்கிக் குடைபோல் பிடித்தது, மடுவில் ஒளிந்திருந்து நீர் அருந்த வரும் ஆவினங்களை எல்லாம் பிடித்து உண்ட காளிங்கன் எனும் பாம்பினை பிடித்து அதன் ஐந்து தலைகளின் மேலேயே ஆடு ஆடு என்று கண்ணன் ஆடியது என்று கண்ணன் பற்றி கூறப்பட்ட கதைகள் பிண்ணாக்கீசர் மனதை பெரிதும் கவர்ந்து விட்டது.

இதனால் கண்ணனைப் போல மாந்தரோடு மாந்தராக கலந்து பழகி கருணை புரியும் ஒரு தெய்வமும் இருக்க

முடியுமா என்கிற கேள்வியும் அவருக்குள் எழும்பியது.

புராணக் கதை தானே… அவ்வளவும் மிகைப்படுத்தப் பட்ட கற்பனையாகவும் இருக்கலாமல்லவா? என்பன போன்ற கேள்விகளுக்கோ, சந்தேகங்களுக்கோ அவர் மனது இடம் கொடுக்கவேயில்லை.

கண்ணன் அவர் வரையில் பரிபூரணமாகவே தெரிந்தான். அவன் பிறந்த நொடி முதலே சாகசங்களும் தொடங்கிவிடுகிறது. வசுதேவர் ஒரு கூடையில் வைத்து கண்ணனை சுமந்து செல்லும்போது மழை கொட்டு கொட்டு என்று கொட்டினாலும் பாம்பொன்று குடை பிடித்தது போல கண்ணன் மேல் மழைத் துளிகள் பட்டுவிடாதபடி பின்தொடர்ந்து வந்ததும், இடையிட்ட நதியும் கூட விலகி வழிவிட்டதும் கிருஷ்ணாவதாரச் சிறப்புக்காக கூறப்பட்டிருப்பினும் பிண்ணாக்கீசர் அதன் உட்பொருளை வேறுவிதமாகப் பார்த்தார்.

'தெய்வாம்சமுடன் ஒருவன் பிறந்தால் இயற்கை அவனுக்கு கட்டுப்பட்டு சேவை செய்யும்.அவன் நினைத்தால் இயற்கையை ஆட்டுவிக்க முடியும்' என்பதே அவர் உணர்ந்து கொண்ட உட்பொருள்.

சொல்லப்போனால் கிருஷ்ண சாகசங்கள் அவருக்குள்ளும் சாகசங்கள் செய்யும் ஆவலைத் துண்டி விட்டன. அதே போல கிருஷ்ணனைப் போலவே பேதம் பாராமல் எல்லோருடனும் கலந்து உறவாட வேண்டும் என்கிற பெரிய மனதையும் அவருக்கு ஏற்படுத்தியது. அனைத்துக்கும் மேலாக கிருஷ்ணனின் கீதைப் பேருரை அவர் நெஞ்சையள்ளியது.

**‘என்ன கொண்டு வந்தாய்?**

**எதை கொண்டு செல்ல உன்னால் முடியும்?**

**இன்று உன்னுடையது -**

**நாளை இன்னொருவருடையது'**

போன்ற கிருஷ்ண தத்துவங்களில் சித்தாகம சிந்தனை மிகுந்து கிடப்பதாகவே அவரின் உள்ளுணர்வு எண்ணியது. ஒரு கட்டத்தில் அவர் கிருஷ்ணனை ஒரு சித்தனாகவே பார்க்கத் தொடங்கிவிட்டார்.

கண்ணனின் ஒவ்வொரு சாகசத்துக்குப் பின்னாலும் அவர் கண்டது அஷ்டமா சித்துக்களைத்தான். அதா வது அணிமா' என்னும் அணுவில் அணுவாய் சிறிதாகும் திறன் எட்டு சித்திகளில் முதல் சித்தியாகும். அது எப்படி ஆறடி உயரமுள்ள ஒரு மனிதன் அணுவிலும் அணுவாய் சிறிதாக முடியும் என்று உடனேயே புத்தி கேள்வியை எழுப்பலாம்.

உண்மையில் ஒரு துளி விந்துக்குள் இருந்து உருவானவர்கள்தான் நாம். நமது தொடக்கமே வளர்ந்து விட்ட ஒரு வடிவம் கிடையாது. ஒரு சிறு விதை பெரு மரமாவதைப் பார்க்கும்போதும் அணிமாவே அங்கே ஆதர்சமாய்த் திகழும். எந்த ஒரு விஷயத்துக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்றால் பெரிதாக முடியும் என்றால் அது ஒரு பக்கமே. அதனால் சிறிதாகவும் முடியும் என்பதே அதன் மறுபக்கம். ஆனால், எப்படி என்பதில்தான் சூட்சுமமே உள்ளது.

ஒரு சமயத்தில் கண்ணன் கோபிகைகள் பலருடன் காட்சியளித்ததும், இந்த சித்தியாலேயே. பல கோடி

அணுக்களாலான தன் மேனியை உதிர்த்து ஒரு சிறு அணுத்துகளாக மாறி அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் கர்ப்பத்துக்குள்ளேயே கண்ணன் புகுந்ததெல்லாம் அணிமா சித்தியால்தான்… அடுத்து மகிமா சித்தி… அணுவில் அணுவாய் மாறுவது போலவே வடிவில் பெரிதாய் மாறுவதும் ஒரு சித்திதான். கண்ணன் அர்ஜுனனுக்கு காட்டிய விஸ்வரூப தரிசனம் இந்த வகையைச் சேர்ந்ததே…

அடுத்து இலஹிமா என்னும் சித்தியானது காற்று போல லேசாவதை குறிக்கிறது… இப்படி சொல்லும் போதே இது எப்படி சாத்தியம் என்கிற கேள்வியும் எழத்தான் செய்யும்?

ஒரு இரும்பு விமானம் எத்தனை பெரியது? மிகுந்த எடை உடையதும் கூட…. அது வானில் மிதந்தபடி பறக்கும் என்று இருநூறு - முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் யாராவது கற்பனை செய்தாவது பார்த்திருப்பார்களா?

அப்படியே எண்ணிப் பார்த்திருந்தாலும் அதை ஒரு மாயமாகத்தான் எண்ணியிருப்பர். ஆனால் விண்வெளிக் காற்றை சமன் செய்துகொண்டு அது இன்று பறப்பதைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறதல்லவா?

இது போன்றதுதான் இலஹிமா ஆற்றலும்! உடலுக்குள் சென்று திரும்பும் காற்றுக்கும், உடம்புக்குமான தொடர்புக்குள் இதற்கான சூட்சுமம் இருக்கிறது. இது பிடிபட்டு விட்டால் நமது உடம்பும் எடையற்றுப் போய் நாம் நீரில் நடக்கலாம், வானில் மிதக்கலாம். ஆலிலைமேல் கண்ணன் மிதந்தது இந்த ஆற்றலால்தான் என்று உறுதி படக் கூறலாம்.

அடுத்து கரிமா சித்தி. அணுவாகிப் போவது, விஸ்வரூபமெடுப்பது, எடையற்றுப் போவது என்கிற போக்கில் பிறரால் அசைக்க முடியாதபடி கனப்பதுதான் கரிமா சித்தி.

இந்த சித்தி புரியும்போது ஒருவரைத் தூக்கி இன்னொரு இடத்தில் அமர்த்த முடியாது… பூதகி மார் மீது அமர்ந்து கண்ணன் அவளை வதைத்தபோது அவன் பிஞ்சு பாலகன். ஆனால் பூதகி தன் மேல் ஒரு மலையே அமர்ந்தது போல உணர்ந்தாள்.

இந்த ஆற்றலும் புவியின் ஈர்ப்பு விசை சார்ந்து காற்றோடு தொடர்புடைய ஒன்றே. இதை கைக்கொள்ள எண்ணுபவர்கள் ஈர்ப்பு விசை குறித்தும் காற்றின் சக்தி குறித்தும் துல்லியமான ஞானம் கொண்டிருக்க வேண்டும். அடுத்து பிராகாமியம் எனும் கூடுவிட்டு கூடு பாயும் சக்தி.

இந்த உடம்புக்கும், உலகுக்குமான தொடர்பு காற்றலானது. பஞ்ச பூத உடம்புக்குள் காற்று மட்டும் வெளிக்கும், உள்ளுக்குமாகவே தொடர்கிறது.

மனித வாழ்க்கை என்பது நாட்களால் ஆனதல்ல. எத்தனை லட்சம் முறை அவர்கள் சுவாசிக்கிறார்கள் என்பதாலேயே ஆன ஒன்றாகும்.

காற்றாகிய இந்த வாயுவும் நமது உடம்புக்குள் தச வாயுவாக அதாவது பத்து விதத்தில் பதுங்கிச் செயல் படுகிறது. அந்த பத்துக்கும் தனித் தனியே கூர்மன், நாகன் என்கிற ரீதியில் பெயர்களும் உண்டு. இவைகள் துடிக்கும் இடமே நாடியாகும். இந்த நாடிகள் அவ்வளவும் இதய பாகத்தில் மையம் கொண்டு

சூட்சமணா நாடி என்றழைக்கப்படுகிறது. இந்த நாடிகளில் ஒன்றன் வழியாக வெளியேற முடியும். உள் திரும்பவும் முடியும். உடம்பை விட்டு உயிர் பிரியும் போதும் இந்த நாடிகளில் ஒன்றின் வழியாக விடுபட்டே பிரிகிறது. விடுபட்ட அந்த நாடி வழியாக உள் நுழைந்து அந்த நாடியை துடிக்க வைத்து அப்படியே அங்கிருந்து மற்ற நாடிகளுக்குள் புகுந்து அவைகளை இயக்கியபடியே இதயபாகத்து சூட்சமணா நாடியையும் இயக்கிடும்போது இயங்காமல் கிடந்த ஒரு கெடிகார பெண்டுலமானது இயங்கத் தொடங்கி அதன் காரணமாக வினாடி முள் முதல் பெரிய முள் முதல் சிறிய முள் வரை ஒடுவதைப் போன்றது இச்செயல்.

கூடு விட்டு கூடு பாய எண்ணுபவர்களும் இப்படித்தான் தங்கள் ஆன்மக் காற்றை இறந்து கிடக்கும் உடல் எதுவாக இருப்பினும் அதனுள் புகுத்தி குறிப்பாக நாடியை கைப்பற்றி உள்ளே புகுந்து அந்த உடம்பில் இதயத்தையும் துடிக்க வைத்து, உறைந்து போன ரத்தத்தில் சூட்டை முதலில் உருவாக்கி, பின் அதில் ஓட்டத்தை உருவாக்கி, பின் உடல் முழுக்க ரத்தம் ஒடிய நிலையில் மூளைத் திசுக்களுக்குள் புகுந்து மனமெனும் எண்ணக் கூட்டத்தை எழுப்பி சாகசங்கள் செய்வர்.

இந்த சித்தியில் கண்ணனும் கை தேர்ந்தவன். அடுத்து வசித்வ சித்தி. அதாவது காண்பவர்களை மயக்கி தன் வசப்படுத்தி தம் கட்டளைக்கு ஏற்ப அவர்களை ஆட்டுவித்தல்.

இம்மட்டில் கண்ணனின் குழல் கூட வசித்வ சித்திக்கு மாபெரும் சான்று… குழலிசைக்கு மனிதன் மயங்குதல் இயல்பு… ஆனால், கண்ணனின் குழலிசை முன்னால்

ஆடு, மாடுகள் கூட மயங்கிக் கிடந்ததை கண்ணன் கதைவழி நாம் அறிவோம். ஏழாவது சித்திதான் பிராப்தி! அதாவது எண்ணியதை அடைவது... எவர் ஒருவருக்கு கேட்டதெல்லாம் கிடைக்கிறதோ, எண்ணியதெல்லாம் ஈடேறுகிறதோ அவர் நினைத்தபடியே எல்லாம் நடக்கிறதோ அவர் பிராப்தமுடையவர் என்றாகும்.

கண்ணன் நினைத்த எதுதான் நடக்கவில்லை.

அவன் கேட்டு எது கிடைக்கவில்லை? இறுதியாக வரும் எட்டாவது சித்தியே ஈசத்வம்! அதாவது மேலே விவரிக்கப் பெற்ற ஏழு சித்திகளையும் ஒருவன் அடைந்துவிட்டால், அதனாலேயே ஒருவன் பரிபூரணனாகி கடவுளாகவே அதாவது அந்த ஈசனாகவே ஆகிவிடுவான் என்பதே உட்பொருள்.

கண்ணனும் அப்படித்தானே கூறுகிறான்.

**'நான் வேறு இந்த உலகம் வேறில்லை...**

**நான்வேறு நீ வேறில்லை...**

**எங்கும் எதிலும் இருக்கிறேன்**

**அனைத்தும் என்னுள்ளே அடங்கிக் கிடக்கிறது'**

என்பதுதானே விஸ்வரூப தரிசனத்தின்போது அவன் உலகுக்கு சொன்னது...

எனவேதான் பிண்ணாக்கீசரும் அஷ்டமா சித்திகளுக்கு அணிகலனாக கண்ணனை எண்ணுகிறார். அவன் காலடியை பிடித்துக் கொண்டு விட்டால் தனக்கும் அதெல்லாம் சித்தியாகும் என்றும் நம்பும் அவர்

வார்த்தைக்கு வார்த்தை 'கிருஷ்ணா கிருஷ்ணா என்றே கூறவும் செய்கிறார்.

பாம்பாட்டி சித்தரின் உபதேசம் ஒரு புறம்.

கிருஷ்ண பக்தி மறுபுறம்.இத்துடன் பற்றற்ற யோக வாழ்க்கை.எல்லாம் சேர்ந்து அவர் வரையில் மண்ணைக் கூட பொன்னாக மாற்றும் வல்லமையை அவருக்குத் தந்துவிடுகிறது.

அதனாலேயே அவரோடு உலக மாயையும் மோத ஆரம்பிக்கிறது. பாவம் பிண்ணாக்கீசர் மாயை அவரை மிகவே படுத்தத் தொடங்கிவிடுகிறது. ஆசையுள்ள மக்கள் கூட்டத்துக்குள் புகும் அது, ஒரு பக்தன் வேடம் போட்டு தனது சக்தியைக் காட்டத் தொடங்குகிறது.

தனஞ்ஜெயன் என்று ஒரு பக்தன். பிண்ணாக்கீசருக்கு கால் பிடித்து விடுவதே அவனது வேலை. அவர் மறுத்தாலும் விடமாட்டான்.அவனைப் பார்த்தவர்களும் ஆஹா அற்புதமான சீடன் இவன் என்றே கருதினார்கள். ஒருநாள் இவனை சர்ப்பம் ஒன்று தீண்டிவிட்டது.வாயில் நுரை ததும்பியது. உடம்பெல்லாம் நீலம்பாரித்துப் போக ஒவ்வொரு நாடியாக அடங்கிக் கொண்டே போனது. அதைக் கண்ட பிண்ணாக்கீசரும் அவனுக்கு பாம்பு முறி மூலிகையைத் தந்து அவனைக் காப்பாற்றிட சித்தம் கொண்டார்.

அந்த மூலிகைகள் உள்ள வனமோ தொலைவில் இருந்தது. அங்கே போய் அந்த மூலிகையை எடுத்து வந்து அவனை உண்ணச் செய்வதற்குள் அவன் உயிர் போய் விடும் என்பதை அறிந்து கொண்ட பிண்ணாக்கீசர் தானறிந்த கூடுவிட்டு கூடு பாயும்

உத்தியால் அவனை வேகமாக பிழைக்க வைக்க எண்ணம் கொண்டு அப்படியே அவனருகில் தன் உடம்பைக் கிடத்தி தன் உடம்பில் இருந்து உயிர்க் காற்றையும் உரிய உபாயங்கள் மூலமாக பிரித்தெடுக்கத் தொடங்கினார்.

உலக மாயையும் அவர் செயலைப் பார்த்து மர்மமாகச் சிரித்துக் கொண்டேயிருந்தது!

## 5

மாயை ஒரு புறம் மர்மமாகச் சிரித்தபடி இருக்க, அதே மாயை பிண்ணாக்கீசரின் கண்களையும் நன்றாகவே கட்டிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

ஏன் என்றால் ஒரு சாதாரண மனிதன் கூட ஒரு செயலில் இறங்கும் முன் - அதனால் விளையும் நன்மை தீமைகளை நன்கு எண்ணிப் பார்த்த பிறகே களத்தில் இறங்க வேண்டும். அப்போதுதான் அதன் பாதக விளைவுகள் அவனை பாதிக்காது.

பிண்ணாக்கீசர் போன்ற காலத்தையே வெல்லப் பார்க்கும் சித்த புருஷர்களோ, 'கூடுமாறுதல்' போன்ற அபூர்வமான விஷயங்களில் இறங்கிடும்போது நிறையவே எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், மாயை யாரை விட்டது?

பிண்ணாக்கீசர் தனஞ்ஜெயனைக் காப்பாற்றிவிட வேண்டும் என்கிற துடிப்பில் பின்விளைவுகளைப் பற்றி துளியும் கவலையே படாமல் தனஞ்ஜெயன் உடல் கிடக்கும் இடத்திற்கு அருகிலேயே தன் உடம்பை கிடத்தி விட்டு உடம்பில் இருந்து ஆத்மக் காற்றை

விடுவித்து அதை அப்படியே தனஞ்ஜெயனின் உடம்புக்குள் மூக்கின் இரு துவாரங்கள் வழியாக புகுத்தி அப்படியே உள்ளே ஊடுருவிச் சென்று இன்னும் சில நொடிகளில் அடங்கிடப் போகும் ஒரு நாடியைப் பிடித்து அதன் வழியே ஒடி மற்ற நாடிகளையும் துடிக்கவைத்து பின் இதயபாகத்திற்கு வந்து அதையும் இயங்க வைத்து தடுமாற்றமுடன் எழுந்தும் அமர்ந்தார்.

அதாவது சாகக் கிடந்த தனஞ்ஜெயன் பிண்ணாக்கீசரால் பிழைக்கத் தொடங்கி விட்டான்! அப்படியே எழுந்து பாம்பு விஷத்தை முறிப்பதில் நிகரில்லாத மூலிகைகளான நஞ்சகத்தி மற்றும் சிரியா நங்கையுடன் மேலும் பல மூலிகைகளும் இலகுவாக கிடைக்கும் வனப்பகுதியை நோக்கித்தான் நடந்தது அவன் உடம்பு.

அதே சமயம் பிண்ணாக்கீசரின் சடலத்திற்கு ஒப்பான உடம்பு தரையில் கிடப்பதைப் பார்த்த பலர் முதலில் பிண்ணாக்கீசர் தூங்குவதாகவே கருதினர். பிறகே, தொட்டுப் பார்த்து உடம்பு சில்லிட்டுப் போயிருப்பதை வைத்து பிண்ணாக்கீசர் உயிர் பிரிந்துவிட்டது என்ற முடிவுக்கும் வந்தனர்.

விஷயம் ஊர் முழுக்கப் பரவிவிட்டது.

அவர் உடலை ஒருவருக்கு நான்கு பேர் தொட்டுத் தூக்கிக் கொண்டு வந்து ஊருக்கு பொதுவான கல் மண்டபத்தில் போட்டுவிட்டு ஈமக்கிரியைக்கும் ஏற்பாடு செய்யத் தொடங்கி விட்டனர்.

மூலிகை வனத்திலோ தனஞ்ஜெயன் உடம்புக்குள்' பிண்ணாக்கீசர் விஷமுறிவு மூலிகைகளைக் கண்டறிந்து அவைகளை உள்ளங்கையில் கசக்கிச்

சாறெடுத்து அதை உண்டு, பின் நிரம்பவே ஊற்று நீரைக் குடித்து உடம்பில் பாம்புக்கடியால் பரவிய விஷத்தை முற்றாக முறித்து பூரண நலத்தையும் பெற்றவராகத் திரும்பி வந்தார். வந்து பார்த்தவருக்கு பகீர் என்றது. அவரது உடம்பு ஊர் மக்களால் ஈமக்கிரியைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருப்பதை கண்டவர் முதலில் என்ன நடந்தது என்று கூறத்தான் எண்ணினார். பின் அடக்கிக் கொண்டு சித்த யோகிகளுக்கான ஈமக்கிரியை என்பது உடம்பை மண்ணில் கிடத்துவதோ இல்லை அக்னிக்கு இரையாக்குவதோ அன்று. அவர்கள் அமர்ந்த நிலையில் கல்லறை தட்டி சுற்றிச் சுவர் எழுப்பி மூடி விட வேண்டும் என்று தனஞ்ஜெயன் வடிவில் கூறி அவ்வாறே செய்வித்து உடம்பை தற்காலிகமாக மண்ணும், நெருப்பும் தின்று விடாதபடி தடுத்தார்.

பின் அன்று இரவே தனஞ்ஜெயன் உடம்பில் இருந்து வெளியேறி கல்லறைக்குள் அமர்ந்த நிலையில் இருக்கும் உடம்புக்குள் புகுந்து தனக்கான உடல் இயக்கத்தை உருவாக்கிக் கொண்ட பிண்ணாக்கீசர் அதன் பின் அந்த ஊரிலேயே இருக்கப் பிரியப்படவில்லை.

அங்கிருந்து யாருக்கும் தெரியாமல் கிளம்பி தேசாடனம் செய்யத் தொடங்கிவிட்டார். அப்படி அவர் தேசாடனம் செய்யும்போது துளியும் தனது சித்திகளை எவருக்கும் காட்டிட விரும்பவில்லை. அந்த அளவுக்கு தனஞ்ஜெயனை காப்பாற்ற முயன்ற அனுபவம் அவருக்கு பாடம் கற்றுக் கொடுத்திருந்தது.

அவர் துளி தாமதமாக வந்திருந்தாலும் திரு மூலருக்கு ஏற்பட்ட கதிதான் பிண்ணாக்கீசருக்கும் நேர்ந்திருக்கும்.

திருமூலச் சித்தருக்கு அப்படி என்னதான் ஏற்பட்டது என்பதையும் சற்றுப் பார்த்துவிடுவது நல்லது.

சித்த புருஷர்களில் திருமூலர் மிக விசேஷமானவர். எல்லா சித்தர்களும் இந்த பூமியில் பிறந்து இந்த பூமிக்கே உண்டான மாயைக்குள் அகப்பட்டுத்தான் தெளிந்தவர்கள். ஆனால், திருமூலர் தேவருலகைச் சேர்ந்தவர்.

தேவருலகைச் சேர்ந்தவர் என்றால் பெரிய கொம்பா முளைத்திருக்கும் என்று பலரும் கேட்கலாம். ஆனால், உண்மையில் தேவனாக ஒருவன் பிறப்பெடுக்க பல ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்திருக்க வேண்டும். பாவக் கணக்கே தன் வரையில் இல்லாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எவன் தவம் புரிகிறானோ அவனே தவன்! காலத்துக்குரிய வரத்தை பெற்றுக் கொண்ட பின் அவன் பெயருக்கு முன் இரட்டைச் சுழி கொம்பும் முளைத்து அவன் தேவனாகி விடுகிறான்.

எனவே, தேவர்கள் கொம்பு முளைத்தவர்கள் என்றால் அதில் மிகையில்லை. எல்லா வகையிலும் தேவர்களுக்கு எதிரானவர்கள் அசுரர்கள்.அதாவது சுரம் தப்பியவர்கள்! இசையில் சுரம் தப்பினால் அந்த இசை கேட்கத் தகுமா? வாழ்விலும் அதுபோல சுரம் தப்பினால் அந்த வாழ்க்கை பாவம் மிகுந்த வாழ்வாகிவிடும். சுரம் சிறந்தால் அது பாசுரமாகிறது. சுரம் தப்பினால் அது அசுரம் ஆகிறது.

அசுரர்களும் மது, மங்கை, மாமிசம் என்று கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்பவர்கள்தானே?

இப்படிப்பட்ட தேவ - அசுரப் பிரிவில் தவத்தால் தேவனாகப் பிறந்த சுந்தரர் என்கிற திருமூலருக்கு பூவுலகின் மாயை பற்றி எதுவுமே தெரியவில்லை.பூ உலக மனித வாழ்க்கை எப்படிப்பட்டது என்றும் அவர் உணர்ந்திராத நிலையில் அவருக்கு அதை உணர்த்தும் விதமாகவே அந்த ஈசன் அவரை பூ உலகுக்கு அனுப்பினான் என்பர்.

அப்படி அவர் பூ உலகிற்கு வான் வழி பயணித்து வரும்போது ஒரு ஊருக்கருகே உள்ள புல்வெளி ஒன்றில் மாடு, கன்றுகள் எல்லாம் ஒன்றுகூடி அழுது கொண்டிருப்பதைப் பார்க்கிறார். அதற்குக் காரணம் அந்த மாடு கன்றுகளை மேய்த்துக் கொண்டிருந்த மூலன் என்கிற பெயர் கொண்ட மாட்டுக்கார இடையன் ஒருவன் விதி வசத்தால் இறந்து விட்டிருந்தான். அவன் பிரிவைத் தாளாமலே மாடு, கன்றுகள் அழுது கொண்டிருந்தன. அந்தக் காட்சி சுந்தரர் நெஞ்சை உருக்கிவிட்டது. அவைகளை அதனதன் இருப்பிடத்திற்குக் கொண்டு சேர்க்கவும், அவைகளின் துக்கத்தைப் போக்கவும் அந்த நொடியே இறந்து கிடந்த மூலன் என்கிற அந்த இடையனின் உடம்புக்குள் கூடு விட்டு கூடு பாயும் உபாயம் மூலம் புகுந்தார். அதன்பின் ஆடு, மாடுகளை எல்லாம் திருப்தி செய்து அவைகளை அதனதன் உரிமையாளர் பட்டியிலும் அடைத்துவிட்டு திரும்பி வந்து பார்த்தவருக்கு பகீர் என்றது. அவரது தேவ உடலை ஒரு காட்டுப் புலி தனது உணவாக உண்டு முடித்திருந்தது.

அதன் பின் வேறு வழியின்றி மூலன் உடம்பிலேயே அடங்கிக் கிடந்து உலகின் மாயையையும் மெல்லப் புரிந்து கொண்டு பல பாடல்கள் எழுதி அதன்

காரணமாக திருமூலர் ஆனார் என்பார்கள். இவரது பாடல்கள் திருமந்திரமாகக் கருதப்படுகின்றன. அவைகளில்,

**`ஆசை அறுமின்... ஆசை அறுமின்...**

**ஈசனோடாயினும் ஆசை அறுமின்.”**

என்கிற பாடல் வரிகள் மிகவே சிந்திக்க வைப்பது. கடவுளை அடைய வேண்டும் என்கிற விருப்பம் கூட இவ்வுலக மாயைக்கு நடுவில் மிக ஆபத்தானது என்கிறார் திருமூலர்.இவரது பாடலில் அனைவரையும் மிகக் கவர்ந்த பாடல், -

**'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**

**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**

**தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்**

**கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே...'**

என்கிற பாடலாகும்.

திருமூலச்சித்தரின் வரலாற்றுக்குள் புகுந்தால் கூடு விட்டு கூடு பாய்ந்தால் அவர் மேலும் மேலும் பல வேளைகளில் அனுபவித்த இன்னல்களும், அந்த இன்னல்களே அனுபவங்களாகி அதனால் இந்த உலகிற்கு பல அரிய பாடல்கள் கிட்டியதையும் நாம் உணரலாம்.

சரி பிண்ணாக்கீசரை நாம் இனிப் பின் தொடர்வோமா?

தேசாடனம் போன பிண்ணாக்கீசரை, அதன் பின்பும் மாயை அவ்வளவு சுலமாக விட்டுவிடவில்லை. மாயை

அவரது கருணை மிகுந்த மனத்தையே தனக்கான ஆயுதமாக எடுத்துக் கொண்டது.

பனிரெண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையான ஒருவனுக்கு விஷப் புகை பட்டு கண்ணிரண்டும் போய் விட்டது. இதனால் அவன் செயலிழந்து போய் தன் மனைவி, மக்கள் அத்தனை பேருடன் ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் பார்த்தான்.

அவனுக்கு தீர்க்காயுள் என்பது விதி. எனவே, அந்த விதியும் அதற்கேற்ப வேலை செய்தது. மிகச் சரியாக அவனும், அவனது மனைவி மக்களும் உயிர்விடத் துணிந்த கிணற்றுப் பக்கமாக பிண்ணாக்கீசரும் வந்தபடி இருந் தார். அவர் அந்த குருட்டுத் தந்தையைப் பார்த்துவிட்டு மனம் இரங்கினார்.

விஷப்புகையால் பாழ்பட்ட அவன் கண்ணிரண்டிற்கும் ஒளி வழங்கிட தீர்மானித்த அவர், அதற்கான மூலிகைகள் பொதிகை மலைக் காட்டில் இருப்பதை அறிந்து அவைகளை பறித்து வந்து சாறு பிழிந்து அந்த குருடனின் கண்களில் விடவும் அக்குருடனுக்கு திரும்பவும் கண்ணொளி கிட்டியது.

பிண்ணாக்கீசரும் பனிரெண்டு பெண் குழந்தைகளையும் ஒரு சேர காப்பாற்றி விட்டதாகக் கருதினார். உண்மைதான்!

அதே சமயம் 'கண்ணொளி தந்த சித்தர்' என்கிற புகழ் வளையத்திலும் சிக்கினார். எங்கெங்கு இருந்தெல்லாமோ தங்களுக்கும் பார்வை வேண்டி அவரை நோக்கி பல குருடர்கள் வரத் தொடங்கினர். முடிந்த அளவுக்கு அவர்களுக்கெல்லாமும் பார்வை

தந்தார். இதனால் சித்த யோகி என்கிற நிலையில் இருந்து மாறி அவர் ஒரு மருத்துவர் என்கிற நிலைக்குப் போய்விட்டார்.

மருத்துவர் என்று மாறிய பின் கண் என்ன? காதென்ன..? எல்லாவித வைத்தியங்களையும் செய்தார். அதை ஒரு புண்ணியமாகவும் கருதினார். ஆனால், ஒரு நல்ல சித்தயோகி புண்ணியத்தைக் கூட சேர்க்கக் கூடாது என்பதுதான் நல்ல யோகலட்சணம். அப்படிச் சேர்ந்த புண்ணிய பலனானது அந்த யோகியைப் பின்தொடரும். ஒவ்வொரு புண்ணியமும் ஒவ்வொரு வித மகிழ்வைத் தருவதாக இருக்கும். எனவே அதற்கேற்ப ஒரு வாழ்க்கையை அந்த சித்த யோகி வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படும். புண்ணிய கர்மமும் சரி, பாவ கர்மமும் சரி... பின் தொடர்ந்து வந்து கணக்கு தீர்த்த பின்னரே விடும்.

இதற்கு வேறு விதமாகவும் பொருள் கொள்ளலாம். அதாவது மனிதப் பிறப்பை ஒரு உயிர் எடுப்பதற்கான காரணமே அதுவே இறுதிப் பிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஏன் என்றால் மனிதராகப் பிறந்தவர்க்கே ஆறாவது அறிவும், அதனால் ஏழாகிய பேசும் சக்தியும் அதனைக் கொண்டு அவர்கள் எட்டுவதே மீண்டும் பிறவா நிலை எனும் முக்தி நிலை என்பதாகும். ஆனால், எத்தனை பேர் தங்கள் பிறப்பாகிய மனிதப் பிறப்பில் இப்படி மீண்டும் பிறவாத முக்தி நிலைக்கு முயல்கிறோம் என்பது வேறு விஷயம். அப்படி ஒரு முயற்சியை ஒருவர் செய்யும் போது மாயை அவர்களை அவ்வளவு சுலபத்தில் விடவும் விடாது. அப்படிப்பட்ட மாயையை வெற்றி கொண்டு நற்கருமங்களே செய்வதும் கூட ஒரு

விதத்தில் திரும்பத் திரும்பப் பிறப்பைத் தந்திடும் ஒன்றாக மாறிவிடுகிறது.

பிண்ணாக்கீசருக்கோ மீண்டும் பிறவாமை என்பதே குறி. ஆனால், அவர் புரிந்த மருத்துவ தர்மம் அவருக்கான மீண்டும் பிறவாமையை தள்ளிப் போட்டதை அவர் உணரவில்லை. இருந்தும் அதை உணர்த்தும் விதமாய் அவர் வாழ்வில் ஒரு சம்பவம் நிகழத் தொடங்கியது.

பிண்ணாக்கீசரைத் தேடி அவரை ஆட்கொள்ளவும், அவருக்கு மாய விடுதலை தரவும் அந்தக் கண்ணனே முன் வந்தான்.

எப்படி?

## 6

அந்த மாயக்கண்ணன் பிண்ணாக்கீசரை ஆட்கொள்ள முடிவெடுத்துவிட்டான். எப்படி பிரதமரும், ஜனாதிபதியும் ஒரு இடத்திற்கு வருமுன் அங்கே பாதுகாப்பு முஸ்தீபுகள் தோன்றி குப்பை கூளங்கள் இருந்தாலும் அவைகள் நீக்கப்பட்டு அங்கே ஒரு தயார் நிலை தோன்றுமோ அதுபோலவே ஆட்கொள்ளப் படுகின்றவர்களின் வாழ்விலும் ஒரு முஸ்தீபு நிலை ஏற்படும்.

இந்த விஷயம் நல்லதற்கு மட்டுமல்ல… தீயதற்கும் கூட அப்படியே பொருந்தும்.

ஆம்! இதைத்தான் சகுனங்கள் என்கிறோம். இந்த சகுனங்களை ஆராய்ந்து பார்த்தால் அதற்குள்ளே

விஞ்ஞானபூர்வமாக விளங்கிக் கொள்ள முடிந்த விஷயங்களே அடங்கிக் கிடக்கும்.

உதாரணமாக மழை வரப்போகிறது என்றால் தூறல் விழும் வரை காத்திருந்துதான் அதை உணர வேண்டும் என்கிற அவசியம் இல்லை. திரண்டு வரும் கருமேகக் கூட்டமும், இடி மின்னலும் பலத்த காற்று வீசும் மழை பெய்யப் போவதை உறுதிப்படுத்திவிடும். இதெல்லாம் கூட சகுனம்தான். அதாவது நூறு சதம் நுட்பம் என்கிற ஒன்றின் தயவு தேவைப்படாமல் பார்த்த மாத்திரத்தில் ஒரு சராசரி அனுபவசாலியாக நாம் இருந்தாலே போதும். ஆனால், சில பெரியவர்கள் கொளுத்தும் வெயிலில் அதீதமாக உடல் வியர்க்கும்போது 'இன்றைக்கு மழை கொட்டப் போகிறது!' என்பார்கள். நமக்கு அதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கும். அப்போது வானமும் மேகங்களே இன்றிக் கழுவி விட்டது போல் இருக்கும்.

ஆனால், அவர்கள் சொன்னது போலவே அன்று மாலை அரை மணி நேரத்தில் வானிலை மாறி மழை கொட்டித் தீர்த்து விட்டுப் போகும் போதுதான் நாம் அதை எண்ணி ஆச்சரியப்படுவோம்.

மழை வரும் என்பதை அவர் ஒன்றும் மாயத்தில் கண்டறிந்து விடவில்லை.அவரது மதிநுட்பமும் காலத்தை பொழுதுகளை விளங்கிக் கொள்ள அவர்கள் தீவிரமாக இருந்ததுவே காரணமாகும்.

எப்படி என்றால் சாதாரணமாக உள்ள வெயில் புழுக்கத்தில் நீங்கள் விசிறிக் கொண்டால் காற்றின் ஈரப்பதம் மேலே பட்டு ஒருவித சில்லிப்பை நாம் உணர் வோம். அதுவே மழைக்குரிய வெய்யில்

புழுக்கத்தில் இந்த ஈரப்பதம் தற்காலிகமாக குறைந்து ஒருவித பிசுபிசுப்பும் மேனிமேல் உணரப்படும். காரணம் எட்டுத் திசைகளிலும் காற்று கட்டுப்படுத்தப்பட்டு உஷ்ணம் எல்லா திசைகளிலும் பரவிடாமல் வெப்பம் மண்டத் தொடங்கி விட்டது என்பதே அதன் உட்பொருள். இப்படி மண்டும் வெப்பம் எப்போதும் ஒரு குறிப்பிட்ட அளவு கடந்த நிலையில் வானை நோக்கித்தான் எழும்பும். எழும்பிய வேகத்தில் மேலே செல்லச் செல்ல வெளியில் விரிந்து அதனால் வெப்பம் இழந்து குளிர்ந்து மழையாகிக் கீழே பெய்யும்.

இவ்வளவுதான் விஷயம்!

இதை அவர்கள் அனுபவத்தால் விளங்கிக் கொண்டு தங்களுக்குரிய ஞானத்தோடு அதை சொல்லிடும்போது அது விஞ்ஞானம் ஆகிறது.ஆனால், அநேக விஷயங்களை இப்படி விளக்க முடியாது. சிலவற்றை உணர மட்டுமே முடியும். ஆர்வம் உள்ளவர்களுக்கு ஓரளவு வழிகாட்டி உணர்த்த முடியும். அவர்களும் அனுபவ வாயிலாக உணர மட்டுமே செய்வர். ஆனால், சகுனம் சார்ந்த பல விஷயங்கள் அதை உணரத் தயாராக இல்லாதவர்களால் மிக மிக மூடமாகப் பார்க்கப் படுகின்றன.

உண்மையில் சகுனங்களை மூடமாகப் பார்ப்பதே நல்லது! ஏனென்றால் சகுனங்கள் என்பவை நடக்கப் போகிற நல்லதையோ கெட்டதையோ மாற்றக் கூடியவை அல்ல. அவை அறிகுறிகள். ஒரு நல்ல விஷயத்துக்கான அறிகுறி மகிழ்ச்சி தரும். அந்த அறிகுறியை நாம் உணராவிட்டாலும் அந்த விஷயம் நடைபெறும்போது நாம் மகிழத்தான் போகிறோம். அதில் ஒரு மாற்றமும் இல்லை. அதுவே தீய

விஷயத்திற்கான ஒரு அறிகுறியை அதாவது சகுனத்தை முன்பே உணர்ந்திடும் போது மனது அப்போ திருந்தே கவலைப்பட ஆரம்பித்துவிடும். அந்த தீயது நடக்கத் தொடங்கும்போது 'அடடா, சகுனம் அப்படியே பலித்துவிட்டதே' என்று நமது கவலையும் இருமடங்காகி விடும்.

எனவே, சகுனங்கள் பற்றி சிந்திக்காமல் இருப்பதே மானுடத்திற்கு நல்லது என்பது பொதுமையான ஒரு கருத்தாகும். ஆனால், சகுனம் என்பது தரையில் கொட்டினால் நீர் சிதறுவதுபோல், பொருள் ஏதாவது கீழே விழுந்தால் சப்தம் எழும்புவது போல ஒட்டிக்கிடக்கும் ஒரு விஷயம்.

சகுனங்கள் பற்றி இவ்வளவு விஸ்தாரமாக பன்முகப் பார்வை பார்த்து சிந்திப்பதற்குக் காரணங்கள் உள்ளன. சித்தர்கள் சகுனங்களை உணர்வதிலே மிகுந்த திறமை சாலிகள். இன்றைய நடைமுறை பாஷையில் கூறப் போனால் ஜித்தர்கள்!

சித்தர்கள் மட்டுமல்ல. நல்ல தபோசக்தி படைத்த யோகிகள், உடம்பை விரதங்களாலும், சத்வமான குணம் கொண்ட உணவுப் பழக்கங்களாலும் கோயில் போல வைத்திருப்பவர்களும் கூட சகுனங்களை நுட்பமாக உணர முடிந்தவர்கள் ஆவர்.

ஒரு கூட்டத்தில் அடக்கமாட்டாத காமாந்தமக எண்ணங்களோடு இருக்கும் ஒருவன் இது போன்ற சித்த புருஷர்களை, யோகிகளை நெருங்கிடும் போது அவன் உடலிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் சித்த புருஷர் களின் உடல் கதிரியக்கத்தோடு ஒன்றுபடாமல்

கூட்டத்தில் ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொள்வதைப் போல ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதனால் அவர்கள் மனதிலும் ஒருமை ஆட்டம் கண்டு அவர்களும் அங்குள்ள பெண்களை சற்றே அழகுணர்வோடு பார்த்திடும் ஒரு நிலை தோன்றும். உடனேயே அவர்கள் சுதாரித்துக் கொண்டு மனதைக் கட்டுப்படுத்துவதோடு தாக்கத்தை ஏற்படுத்திய மனிதனையும் தவிர்க்க முற்படுவர்.

இதெல்லாம் நொடிக்கும் குறைவான கால கதியில் ஏற்பட்டுவிடும்.

கிடைப்பதையெல்லாம் சாப்பிட்டு, நினைப்பதை எல்லாம் பேசிக் கொண்டு மனம் போன போக்கில், திரியும் மனிதர்களுக்கு உடல் குறித்தோ அதன் கதிரியக்கம் குறித்தோ துளி ஞானமும் இருக்காது. எனவே, அவர்கள் நாம் அறிந்திராத ஒரு மொழியின் எழுத்துக்களை நாம் பார்க்கும்போது அதை எப்படி வளைகோடுகளாக மட்டும் பார்ப்போமோ அதுபோலவே இந்த விஷயங்களையும் புதிராக (அ) குழப்பமாக (அ) மூடமாக உணர்வர்.

அவர்களுக்கு வேறு வழியில்லை. அது அவர்கள் பிழையுமில்லை. இம்மட்டில் ஊடுருவிப் பார்த்து உணரும் ஆற்றல் என்பது அருள் சார்ந்தது. அருளோ தவம் சார்ந்தது. சித்தர்களும் தவசிகள்தானே?

சரி. சகுனங்கள் பற்றிய இந்த நெடிய கருத்துக்களோடு பிண்ணாக்கீசரிடம் வருவோம்.பிண்ணாக்கீசரும் கண்ணன் ஆட்கொள்ளப் போவதை பல விஷயங்களில் உணர்ந்து கொண்டார். அது எப்படி என்று பார்ப்போம்.

சர்வ சித்திகளோடும், மனித குலம் உய்வதற்காக மருத்துவ சேவையும் செய்து தொண்டாற்றி வரும் நிலையில் பிண்ணாக்கீசரை ஒருநாள் முதிய யோகி ஒருவர் சந்தித்தார்.

அதுவும் தீராத தலைவலி உடைய ஒரு யோகியாகத்தான் பிண்ணாக்கீசரை அவர் சந்தித்தார்.

"அப்பா பிண்ணாக்கீசா... உன் சேவை பற்றி நிறையவே கேள்விப்பட்டேன். வலி, துன்பம் என்று வருகின்ற அவ்வளவு பேரின் வலியையும், துன்பத்தையும் துரத்தியடிக்குமாறு உன்னிடம் மருத்துவ ஞானம் இருப்பதையும் உணர்ந்தே உன்னிடம் வந்திருக்கிறேன். எனக்கு தீராத தலைநோவு! அதை இதுவரை ஒருவரும் தீர்த்து வைத்த பாடில்லை. உன்னால் முடியுமா பார்." என்றார் அந்த யோகி. ஆனால், அவரது நாடியை பரிசோதித்துப் பார்த்தாலோ வலி இருப்பதற்கான அறிகுறியே இல்லை. பிண்ணாக்கீசர் குழம்பிப் போனார். அதே சமயம் அவரது நாடியைப் பிடித்துப் பரிசோதிக்கும் போது பிண்ணாக்கீசர் உடல் முழுவதும் ஒரு இனம் புரியாத பரவசம் பரவுவதையும் உணர்ந்தார். அவர் தன் வாழ்நாளில் சந்தித்திராத ஒரு மனிதராக அவர் இருப்பதையும் அவர் உள்ளுணர்வு கூறியது.

அதுமட்டுமல்ல... அவரது மருத்துவ சாலையில் உள்ள அவ்வளவு பூச்செடிகளிலும் பூக்கள் பூத்து மணம் வீசிக் கொண்டிருந்தன. தொழுவத்து பசுமாடு அடிக்கொரு முறை குரல் எழுப்பியது. அவரது மருத்துவ சாலையை சுற்றி உள்ள மரங்களின் மேல் எல்லாம் கிளிகளும் குயில்களும் எங்கிருந்தெல்லாமோ வந்து அமர்ந்து கொண்டு விட்டன.

அப்படி ஒரு சூழலை பிண்ணாக்கீசர் உணர்ந்ததே இல்லை. எனவே அந்த அவ்வளவு சகுனக் குறிப்பையும் வைத்தே வந்திருப்பது உண்மையில் யோகியல்ல. யோகி வடிவில் ஒரு தேவன் என்று எண்ணிய பிண்ணாக்கீசர்,

"ஐயா என்னை ஆழம் பார்க்காமல் தாங்கள் யார் என்று கூறுங்கள்” என்று நேராக விஷயத்துக்கு வந்து விட்டார்.

“நானும் உன்னைப் போல ஒரு யோகிதானப்பா. ஆனால் கர்மயோகி” - அந்த யோகி பயன்படுத்திய கர்மயோகி என்கிற வார்த்தை பிண்ணாக்கீசரை கிள்ளியது.

“கர்மயோகி என்றால்...”

“கர்மம் என்றால் செயல். செயல் என்று வந்தாலே நற்செயல் தீய செயல் என்று இரண்டு வந்துவிடும். அது இரண்டாக இருந்தாலே அதில் ஒன்றை நாம் தெளிவாக உணர முடியும். அப்படி தெளிவாக அதில் ஒன்றை உணரும்போது மற்றது எதிராக போட்டிக்கு நிற்கும். அப்படி நிற்பதை ஜெயித்து உணர்ந்ததை நிலைப்படுத்தி அதனுள் இருந்து அல்லது அதன் வழியாக மீண்டு வெளிச்செல்பவன் எவனோ அவனே கர்மயோகி...”

"குழப்பமான பதிலாக உள்ளதே...”

“சரி புரியும்படி கூறுகிறேன். இப்பொழுது உன்னையே எடுத்துக் கொள்வோம். நீ புலன்களை அடக்கி ஆளும் ஒரு யோகி என்றால் அப்படி அந்த யோக சக்திகளைக் கொண்டு அஷ்டமாசித்திகளையும் பெற்றாய். இப்போது அவைகளை அவ்வப்போது பயன்படுத்தி பலரது

கர்மவினைகளை நேர்செய்யும் ஒரு கருவியாக உள்ளாய். மனித சமுதாயத்தின் துன்பங்களில் ஒன்றான நோய்களைத் தீர்க்கும் நிவாரணியாகவும் உள்ளாய். அதாவது நீ அறப்பணி ஆற்றும் ஒரு யோகி. அதாவது உன் செயல்கள் நற்செயல்கள் எனும் வகையைச் சேர்ந்தவை. கை தட்டப்படும் போது சப்தம் எழும்புவது போல நற்செயல்கள் புரியும் போதும் சில விளைவுகள் ஏற்படும். உன்னால் துயர் நீங்கப் பெற்றவர், நீ பல்லாண்டு வாழ வாழ்த்தியிருப்பர். இது அதில் ஒரு விளைவு. எனவே, நீ பல்லாண்டு வாழும் ஒரு பலத்தை அடைவாய். இதையே மாற்றி வேறுவிதமாகவும் கூறுலாம். பல்லாண்டு வாழ்ந்திடும் ஒரு விதியமைப்பு உனக்கு இருந்தால், உன்னை ஒருவர் இப்படித்தான் வாழ்த்துவார் நீயும் வாழ்ந்தே தீர வேண்டும்…”

“நான் கர்மயோகிக்கு விளக்கம் கேட்டேன். அதாவது எது கர்மம் என்பதற்கு விளக்கம் கேட்டேன். நீங்களோ என் செயல்பாட்டிற்கான விளைவுகளைக் கூறி நான் நீண்ட காலம் வாழப்போவதாக கூறுகிறீர்கள். இது எப்படி எனக்கான பதிலாகும்"

“ஒரு செயல் நற்செயல், தீய செயல் என்று இரு கூறாகிறது. அதில் நற்செயல்கள் வாழ்த்துக்களை உருவாக்கி நலமாக இப்படி உலகில் வாழ்ந்திட வழிகாட்டுகின்றன. நீயும் வாழப்போகிறாய் என்று நான் கூறினேன்.”

"அப்படியானால் நீங்கள் என்போல் நற்கருமம் புரிந்து வாழ்வாங்கு வாழ்ந்திடும் ஒரு யோகி இல்லையா?”

“அது எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும்.!"

“என்ன அது?”

“நீ ஆசையுள்ள ஒரு யோகி. உனக்கு அவ்வளவு சுலபத்தில் முக்தி கிட்டாது.”

“நற்கருமங்கள் புரியும் எனக்கே முக்தி கிட்டாது என்றால் வேறு எவருக்கு அது கிட்டும்.”

"அப்பனே. நற்கருமங்கள் நோயற்ற வாழ்வு தரும், பதினாறு பேறுகளைத் தரும், பெயரைத் தரும், புகழைத் தரும். உலகையே கூட உன் காலின் கீழ் கொண்டு வந்து சேர்க்கும். ஆனால், முக்தியை மட்டும் அது தராது.”

"இது என்ன உளறல்"

"உளறல் இல்லை அப்பனே. நான் உணர்ந்து கொண்ட உண்மை இது... இல்லையில்லை சத்தியம் என்று கூடச் சொல்வேன். அந்த அளவு உணரப் போய்த்தான் மூளையை கசக்கிக் கொண்டதில் தீராத தலைவலியும் வந்துவிட்டது.”

அந்த யோகி ஆரம்பித்த இடத்துக்கே திரும்ப வந்துவிட்டார்.

பிண்ணாக்கீசரும் அவர் சொன்ன அந்த கருத்தை தீவிரமாக அசைபோடத் தொடங்கினார். யோகியாக வந்து நிற்கும் அந்த மனிதர் உதட்டிலோ மர்மப் புன்னகை! அவர் சொன்னது நமக்கெல்லாம் கூட ஆச்சரியமாக, சற்று அதிர்ச்சியாக கூட இருக்கும். ஆனால், சொன்னவர் ஒரு முதிய யோகி. பொருளில்லாமலா சொல்லியிருப்பார்?

பிண்ணாக்கீசரோடு சேர்ந்து நாமும்தான் யோசிப்போமே?

## 7

புண்ணியச் செயல்கள் நல்லன எல்லாம் தரும், ஆனால், முக்தியை மட்டும் தராது என்று கூறிய அந்த முதிய யோகி, பிண்ணாக்கீசரை மிகவே யோசிக்க வைத்து விட்டார்.

பிண்ணாக்கீசரும் யோசிக்கத் தொடங்கினார். முதியயோகி முகத்திலோ மாயப் புன்னகை.. ஒரு காரணம் கருதி பிண்ணாக்கீசரை ஆட்கொள்ள வந்த யோகியாயிற்றே.?

"என்னப்பா. யோகசித்தா என் கருத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையா. எதற்கு இத்தனை யோசனை" - அந்த யோகி பிண்ணாக்கீசரை கிளறி வேறு விட்டார்.

“உங்கள் கருத்தில் நியாயம் இருப்பது போலவும் இருக்கிறது, இல்லாதது போலவும் இருக்கிறது. அதுதான் இப்போது என் குழப்பமே.” என்றார் பிண்ணாக் கீசர்.

“அது இருக்கிறது.இல்லாமலும் இருக்கிறது என்று நீ கூறுவதைப் பார்த்தால் இந்த உலகில் சிலர் கடவுள் இருக்கிறார் என்றும் இல்லை என்றும் கூறுகிற ரகமாய் இருக்கிறதே...?”

"அப்படிக்கூட சொல்லலாம்.நல்லதைச் செய்தால் நல்லதே நடக்கும் என்பதே சான்றோர் வாக்கு. அப்படி இருக்க நல்வினைகளின் ஒட்டுமொத்த பலனாக முக்தி அமையாது என்று தாங்கள் கூறுவது எனக்கு

வியப்பையே தருகிறது. நீங்கள் கூறுகிறபடி பார்த்தால், இந்த உலகில் அறச்செயல்கள் செய்த எவரும் முக்தியை அடைந்திருக்க வாய்ப்பில்லாதது போலவும் ஆகிறது.”

“ஆம்.அதுதான் உண்மையும் கூட"

"சரி. என்ன செய்தால் முக்தி கிட்டும்?”

- பிண்ணாக்கீசர் மடக்கி விட்டது போல அவரைப் பார்த்தார்.

“அதற்குமுன் உன்னிடம் ஒரு கேள்வி. முக்தி என்றால் என்னவென்று முதலில் நீ எனக்கு சொல்.” என்றார் அந்த முதிய யோகி

-பிண்ணாக்கீசருக்கு இப்போது, தான் அகப்பட்டுக் கொண்டு விட்டது போல தோன்றியது.

"உம் கூறு… முக்தி என்றால் என்ன? "

"நானறிந்த வரையில் முக்தி என்றால் மீண்டும் பிறவாமை அழியாத பேரின்பம். இறைவனை அடைதல் இதுதான்.”

“அடேயப்பா. ஒரு கேள்விக்கு மூன்று விதமான பதில்களா..?

“சரி… இந்த உலகில் எந்த விதத்திலும் ஒரு புல் பூண்டாகக் கூட ஜென்மம் எடுத்து விடக் கூடாது என்கிற ரகமாய் நீ சொல்வதாகவே இருக்கட்டும். மீண்டும் பிறக்கக் கூடாது என்றால் நீ என்ன ஆக விரும்புகிறாய்…”

“என்னவாகவென்றால். என்னவென்று நான் சொல்ல.? அந்த இறைவனுடன் நான் கலந்து விட்டால் அது போதும் எனக்கு…? "

“சரி. இறைவனுடன் கலக்க ஏன் விரும்புகிறாய்?”

“இது என்ன கேள்வி ஸ்வாமி. அவனுடன் கலந்து விட்டால் அழியாத இன்பத்தை அடைந்தவர்களாக ஆவோம்…”

“ஓ… அப்படியானால் உன் வரையில் இறைவன் இன்பமயமானவரா?...” “நிச்சயமாக… இதில் என்ன சந்தேகம்?”

"அப்படியானால், நீ இறைவனைப் பார்த்து அவன் இன்பமயமானவன் என்பதை உணர்ந்திருக்கிறாயா?”

"அப்படி உணர்ந்திருந்தால் நான் இப்போது உங்கள் முன் இருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்…”

“பின் எப்படி இறைவன் என்பவன் இன்பமயமானவன், அவனோடு நாம் கலந்து விட்டால் நாமும் இன்பமயமாகிவிடுவோம் என்றாய்?”

அந்த முதிய யோகி போட்டுப் போட்டு வாங்குவதைப் பார்த்தால் அவ்வளவு சுலபத்தில் உன்னை நான் விட்டு விட மாட்டேன் என்பது போல்தான் இருந்தது. பிண்ணாக்கீசருக்கும் தான் அதுவரையில் உணர்ந்து வைத்திருப்பதெல்லாம் ஒரு விஷயமே அல்ல என்பது போன்ற ஒர் உணர்வும், அதன் காரணமாக மெலிதாக ஒரு அசூயையும் ஏற்படத் தொடங்கியது.

நாவல் மரத்தடியில் முருகனிடம் சிக்கிய அவ்வைப் பாட்டியின் நிலையில்தான் இருந்தார் பிண்ணாக்கீசர். இனி அறிந்து கொள்ள இந்த உலகில் எதுவுமே இல்லை எனும் செருக்கு மேலிட, 'வாழ்ந்தது போதும்' என்பது போன்ற ஓர் எண்ணத்துடன்தான் அன்று அந்த கிழவியும் இருந்தாள். அந்த சரவணனோ ஒரு ஆட்டிடையன் ரூபத்தில் வந்து, 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டபோது கூட அவளுக்கு அது ஒரு வீர்யமுள்ள கேள்வியாகத் தெரியவில்லை. `சுடாத பழமாகவே போடு` என்று கூறிவிட்டு, பின் மண்ணில் விழுந்த பழத்தை எடுத்து ஊதித் தின்ன முயன்றபோது 'என்ன பாட்டி சுட்ட பழமாக அது இருக்கிறதா` என்று கேட்கவும்தான் சுருக்கென்றது. பாட்டியும், `இப்படி ஒரு நுட்பமான கேள்வி கேட்ட நீ யாரப்பா` என்று அந்த வேலவனை வினவ, அதன் பின் அவனும் தன்னை உணர்த்திட அவ்வைப்பாட்டிக்கும் அன்றுதான், 'கற்றது வெறும் கை மண் அளவு` கூட இல்லை எனும் ஞானம் ஏற்பட்டது.

இன்று இந்த முதிய யோகி கேட்ட கேள்வி கூட அதேரகம்தான்! பிண்ணாக்கீசர் மேற்கொண்டு அவரிடம் விவாதிக்காமல், "ஸ்வாமி தாங்கள் யார்... உண்மையை கூறுங்கள்" என்று மிகுந்த பணிவன்போடுகேட்கவும் அந்த யோகியும் ஒரு சிரிப்பு சிரித்து விட்டு தொடர்ந்தார்.

"நான் யார் என்றே உனக்குத் தெரியவில்லை. நீ யார் என்பதிலும் குழப்பம். மனதைக் கட்டுப்படுத்தி, உடலை உறுதியாக்கிக் கொண்டிருக்கிறாய் அஷ்டமா சித்திகளும் கூட உனக்கு வசப்பட்டிருக்கிறது. அதில் எட்டாவது

அம்சமான ஈசத்வம் என்பதில்தான் நீ கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் விடை உள்ளது.

**'அணிமா எனும் அனுவாதல்**

**இலஹிமா எனும் இலேசாதல்**

**கரிமா எனும் கனத்தல்**

**மகிமா எனும் பெரிதாகுதல்**

**மற்றும் கூடுமாறுதல்**

**வசியம் புரிதல்**

**பிராப்தி எனும் வேண்டுவதை அடைதல்'**

என்கிற அத்தனை சக்திகளையும் துளியும் பயன்படுத்தாது துச்சமாக கருத முடிந்தாலே ஈசத்வம் எனும் இறை நிலை வாய்க்கும்...

முக்தி என்பது முடிவில்லாத இன்பத்தில் கிடைக்கும் என்பதல்ல.இன்பம் என்று ஒன்று வந்துவிட்டாலே அதை உணர துன்பம் வந்தே தீரும். முக்தி என்பது இன்பமானதுமன்று. துன்பமானதுமன்று. அது ஒரு பேரமைதி.

முக்திக்கு மிகச் சிறந்த உதாரணம் கர்ணன். கர்ணன் மிகச் சிறந்த தர்மவான். யார் எதைக் கேட்டாலும் வாரி வழங்குபவன். அப்படிப்பட்டவன் தர்மத்தால், தான் பெற்ற அத்தனை புண்ணியங்களையும் கூட தர்மம் செய்தானல்லவா? அதுவே முக்திக்கு உரிய செயல்.

புண்ணியத்தின் மேல் கூட பற்றுதல் இருக்கக் கூடாது. துளி எதிர்பார்ப்பும் இன்றி அனைத்து கடமைகளையும்

செய்ய வேண்டும். அதனாலேயே 'கடமையை செய் - பலனை எதிர்பாராதே' என்றான் கண்ணன்.

எதிர்பார்க்காதே என்பதில்தான் ஞான சூட்சுமம் ஒளிந்துள்ளது. எதிர்பார்ப்பு என்பது ஆசை சார்ந்தது. நன்கு கடமையைச் செய்தவன் இறுதியாக ஆசை வயப்பட்டால் அது திரும்பவும் அவனை மாயையிலேயே வைத்திருக்க முடியும். அதே சமயம் நன்கு கடமையை செய்தவர்கள் எதையும் எதிர்பார்க்கத் தேவையேயில்லை. ஏனென்றால், அவர்கள் எதிர்பார்க்கும் முன்பே அதற்கான பலன்கள் போய் சேர்ந்து விடும் என்பதே உண்மையான உட்பொருள்!

இந்த உலக வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு போன்றது. இதில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வரும்.வெற்றி பெற்றாலும் தோற்று விடக் கூடாது என்கிற அச்சம் நிலவும். தோற்று விட்டாலும் நாளை வெற்றி பெறுவோம் என்கிற எதிர்பார்ப்பு ஏற்படும். விளையாட நான் விரும்பவில்லை. வெற்றியும் வேண்டாம்.தோல்வியும் வேண்டாம் என்பதே துறவு.

துறவிக்கு எதுவும் பெரிது கிடையாது.பொன்னும், பொருளும் வேண்டாம் என்பது ஒரு விஷயமே அல்ல. முக்தி கூட எனக்கு வேண்டாம் என்று எண்ணுமளவு ஒரு பற்றற்ற மனம் வாய்க்க வேண்டும். உன் மனம் அப்படிப் பட்ட பற்றற்ற ஒரு மனம்தானா?"

-முதிய யோகியின் நீண்ட விளக்கமும், இறுதிக் கேள்வியும் பிண்ணாக்கீசரை ஆழ்ந்த மவுனத்திலும், சிந்தனையிலும் புதைத்திட, அந்த யோகியும் உண்மையில் தான் யார் என்று காட்டிட சித்தம் கொண்டபோது பிண்ணாக்கீசர் எதிரில் கிருஷ்ண

தரிசனம் நிகழ்ந்தது. பிண்ணாக்கீசரும் கண்கள் பனிக்க கைகளைக் கூப்பினார். அன்று பாரதப் போரில் அர்ஜுனனுக்கு உபதேசித்தது போலவே, இன்று பிண்ணாக்கீசருக்கும் அவன் உபதேசம் கிட்டியது.

அதன் பின் பிண்ணாக்கீசர் பிறர்க்கு வழி காட்டுதல், மருத்துவ சேவை புரிதல் போன்றவற்றை எந்தவித பற்றும் எதிர்பார்ப்புமின்றி செய்யத் தொடங்கினார். அவ்வளவு ஏன் முக்தியடைந்த பிறகே இறைவனைக் காண முடியும் என்ற கருத்தைப் புறந்தள்ளி இறைவன் இவ்வுலகில் எல்லோருக்குள்ளும் நீக்கமற நிரம்பி வழிகின்றான் என்பதால் அவர் அனைவருக்குள்ளும் இறைவனைக் கண்டார்.

பிண்ணாக்கீசரின் வாழ்க்கை பல அரிய செய்திகளையும் உலகுக்கு அளித்துள்ளது. மிகச் சிறந்த சித்த புருஷர்களை இறைவன் தேடி வந்து திருத்தம் செய்து ஆட்கொள்வான் என்பதே அது!

அடுத்து பிண்ணாக்கீசரை தொடரப் போகின்றவர் யார் தெரியுமா?

கடுவெளிச்சித்தர்!

இவர் பெயரும் காரணப் பெயர் தான். இவரை அறியுமுன் எது ‘கடுவெளி’ என்று நாம் உணர்ந்து கொள்ளுதல் நலம்!

ஒரு பானையை நாம் வாங்குவதாகக் கொள்வோம். உண்மையில் நாம் அதில் பொருளை இட்டு நிரப்புவது என்பது அதனுள் உள்ள காலியான இடத்தில்தான். அந்த இடத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளவே பானை பயன்படுகிறது. அதாவது நமக்கு அங்கு பயன்படுவது

வெளிதான். ஆனால், அதை வசப்படுத்திக் கொள்ளும் வழிதான் அந்த வெளியை சுற்றி உள்ள மண்ணால் ஆன வளைவு!

நாம் வசிக்கும் வீடு என்பது மட்டும் என்னவாம்? வீட்டுக்குள் உள்ள சுவர், கூரை இதையா நாம் பயன்படுத்துகிறோம். உள்ளே உள்ள வெளியில் ஓடியாடித்தானே வாழ்கிறோம்?

உண்மையில் 'வெளி' என்பது எல்லையில்லாதது... பரந்து விரிந்து கிடப்பது... அதை பயன்படுத்த முனையும் போதுதான் நீள, அகல, உயரங்கள், வட்டம், பருமன் போன்றவை எல்லாம் உருவாகின்றன.

இந்த வெளி தத்துவத்தில் ஒரு சீனத் தத்துவஞானி பேர் போனவர். அவர் பெயர் 'லாவோசே! ' இவரது தத்துவத்துக்கு 'தாவோ தத்துவம் என்று பெயர். உலகப் புகழ் பெற்ற தத்துவம் இவருடையது. இவர் எதையும் மாற்றி யோசிப்பவர் ஒரு சட்டை தைக்கப்பட வேண்டும் என்றால் அது கிழிக்கப்பட வேண்டும்.ஒருத்தரை சமப்படுத்தப்பட வேண்டும் என்றால் அது மேடு பள்ளமாக்கப்பட வேண்டும். ஒன்று தூய்மையாக வேண்டுமென்றால் அது அழுக்காக வேண்டும்' என்று இவர் கூறிய கருத்துக்களை நாம் யோசித்துப் பார்த்தால் சிரிக்கத் தோன்றும்.

ஆனால், ஆழ்ந்து சிந்தித்தாலே அதிலுள்ள உண்மை நமக்குப் புரியும். இவரது தத்துவத்தை அலசும் போதுதான் நமக்குப் பல உண்மைகள் விளங்கும். அதில் ஒன்று வெளி ஆங்கிலத்தில் Space என்பர். உடனே வானம் என்று ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கத்

தேவையில்லை.இந்த பூமியே கூட ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்கும் ஓர் உருண்டகோளம்தான்.

பூமிக்கு மேலான அவ்வளவும் வெளிதான்!

இந்த வெளி இருந்தாலே நாம் நடமாட முடியும். பயிர் பச்சைகள் வளர முடியும், காற்று உலாவர முடியும், மேகம் மிதக்க முடியும், மழை பொழிய முடியும், நதிகள் பாய முடியும், பறவைகள் பறக்க முடியும்.உண்மையில் பூமி நாம் நிற்க மட்டும்தான் பயன்படுகிறது. நம் நடமாட்டத்திற்கு பெரிதும் துணைபுரிவது வெளியாகிய வானம்தான். பஞ்சபூதங்களில் ஒன்றான இந்த வானம்தான் முழு முதல் பூதம். இதிலிருந்துதான் நீர், நிலம், நெருப்பு, காற்று ஆகியவை தோன்றியது.

வெளியே அனைத்திலும் பெரிது.

இதனுள்தான் எல்லாம் அடங்கிக் கிடக்கிறது.

இதைத்தான் சிதம்பரத்தில் ஆகாயத்துவமாகவும், சிதம்பர ரகசியமாகவும் சன்னதிக்குள் காட்டுகின்றனர்.

வெளி பற்றி இப்படி நாம் பேசிக்கொண்டே போகலாம். 'வெளி'யே பெரிது... அதுவே மற்ற பூதங்களை தன்னகத்தே கொண்டு எல்லையின்றி விரிந்தும் கிடக்கிறது... சரி, இதை பெரிது என்று உணர்வதாலோ இல்லை ஒப்புக் கொள்வதாலோ மனித வாழ்க்கைக்கு ஆவதென்ன?

கேள்வி எழுகிறதல்லவா?

இக்கேள்விக்கு நமக்கு பொட்டில் அடித்தார் போல பதில் தர வந்தவர்தான் கடுவெளிச்சித்தர் இவர் பாடிய

நுட்பமான பாடல்தான்

**'நந்தவனத்தில் ஓர் ஆண்டி!**

**அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி**

**கொண்டு வந்தான் ஒரு தோண்டி; அதை**

**கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி!"**

என்கிற பாடல்.மேம்போக்காக பார்த்தால் இந்த பாடலில் தெரிகின்ற பொருள் ஒன்றுதான். ஆனால், நுட்பமாகப் பார்த்தாலோ..?

## 8

கடுவெளிச் சித்தர் பாடிய `பாடல்தான் சித்தர் நந்தவனத்திலோர் ஆண்டி' பாடல்தான் சித்தர் பாடல்களிலேயே பாமரருக்கும் போய்ச் சேர்ந்த ஒரு பாடலாகும். இதற்கடுத்து 'காயமே இது பொய்யடா-வெறும் காற்றடைத்த பையடா' என்கிற பாடலைச் சொல்லலாம்.

சரி... நாம் நந்தவனத்திலோர் ஆண்டி பாடலைப் பார்ப்போம்!

**'நந்தவனத்திலோர் ஆண்டி அவன்**

**நாலாறு மாதமாய் குயவனை வேண்டி**

**கொண்டு வந்தான் ஒரு தோண்டி; அதை**

**கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி!'**

இந்தப் பாட்டை மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு பூங்காவுக்குள்ளே ஒரு ஆண்டி ஒரு பானையை கையில் பிடித்துக் கொண்டு குதி குதி என்று குதித்திட... அப்போது அவர் கை நழுவிட பானை கீழே விழுந்து உடைந்து விட்டது என்பது போல தோன்றும் அதுதான் இல்லை! சித்த புருஷர்கள் எவரும் அரிய கருத்துக்கள் எதையும் நேரில் பட்டவர்த்தனமாகச் சொன்னதேயில்லை. மரப் பேழைக்குள் பத்திரமாய் வைக்கப்படும் தங்க நகைகளைப் போலத்தான் அவர்கள் தாங்கள் சொல்ல நினைத்த கருத்துக்களையும் சில வேடிக்கை பாடல்களுக்குள்ளும், வினோதமான விஷயங்களுக்குள்ளும் மறைத்து வைத்துச் சொன்னார்கள்.

அப்படி ஏன் சொல்ல வேண்டும்?

நேராகச் சொன்னால்தானே எல்லோருக்கும் போய்ச் சேரும் என்பதெல்லாம் ஒரு கோணம். ஆனால், உண்மையில் பட்டவர்த்தனமான கருத்துக்களைப் பதிவு செய்த பல பாடல்களை கால வெள்ளம் கொண்டு சென்று விட்டது என்றுதான் கூற வேண்டும். அடுத்து கருத்துள்ள அந்த பாடல்கள் அவற்றைத் தேடுவோருக்கே என்றும் ஆகிவிட்டது.

யோசித்துப் பார்த்தால் அதுதான் உண்மையும் கூட 'இன்னா நாற்பது, இனியவை நாற்பது' என்று தொடங்கி எவ்வளவோ அற்புதமான கருத்துக்களை உள்ளடக்கமாய் கொண்ட பாடல்கள் தமிழ் படிக்கும் தமிழறிஞர்களுக்கு, அதிலும் மேடையேறி நிறைய உதாரணங்கள் காட்டிப் பேச வேண்டிய தமிழறிஞர்களுக்கு மட்டுமே என்றாகி விட்டது.

ஒரு கடமைக்காகப் பள்ளிகளில் அதைப் படித்த நாமும் பள்ளிப் பரீட்சைக்குப் பிறகு அதை நினைத்தோமா என்றால் இல்லை என்பதே பதிலாகும். அதே சமயம்,

**'மாட்டுக்கார வேலா - உன்**

**மாட்டைக் கொஞ்சம் பாத்துக்கடா…? '**

தொனியில் கிராமீயம் கலந்த பாடல்களையும் மேலே நாம் பார்த்த நந்தவனத்திலோர் ஆண்டிபாடலையும் நாம் அவ்வளவு சுலபத்தில் மறக்க நினைத்தாலும் முடியாது என்றுதான் கூற வேண்டும்.

அந்தப் பாடலை நாமாக நமக்கு தெரிந்த விதத்தில் அர்த்தப்படுத்திக்கொண்டு நம் பிள்ளைகளிடமும் கொண்டு செல்கிறோம். அவர்களும் அதையே செய்கிறார்கள். மொத்தத்தில் பாடலானது கால வெள்ளம் கொண்டு செல்லப்பட முடியாத நிலையில் காலம் கடந்து எல்லாத் தலைமுறையினர் மனங்களிலும் தங்கிவிட்ட ஒரு பாடலாக ஆகிவிடுகிறது.

சரி, கடுவெளியார் எந்த அர்த்தத்தில் பாடினார் என்று பார்ப்போமா?

நந்தவனத்திலோர் ஆண்டி இந்த ஆண்டி வேறு யாருமில்லை நாமெல்லோரும்தான். பூமிதான் கடுவெளியார் காட்டும் நத்தவனம்! இந்த நந்தவனத்து ஆண்டிகளாகிய நாம், நாலாறு மாதங்கள் அதாவது பத்து மாதங்கள் (அன்னை வயிற்றில் இருந்த பத்து மாதங்கள்) உள்ளே இருந்து குயவனாகிய இறைவனை வேண்டி அவனருளாலே இந்த உடம்பாகிய தோண்டியை கொண்டு வந்தவர்களாவோம்.!

இப்படி வேண்டிப் பெற்ற தொண்டியாகிய உடம்பை தவத்தாலும்,யோகத்தாலும் பேணிக் காத்திடாமல் இதை ஆசா, பாசங்களில் மூழ்கடித்து அதனால் மேலும் கீழுமாய் அல்லலுற்று இந்த உடம்பையும் நோய் நொடி மற்றும் முதுமைக்கு இரையாக்கி இதை அழித்து விடுகிறோம் - என்பதுதான் அந்தப் பாடலின் உட் பொருள்!

கடுவெளியார் நம்மை எல்லாம் ஏன் ஆண்டி என்று சொன்னார் என்று ஒரு கேள்வி எழலாம். ஆண்டியின் வசம்தான் எதுவுமே இல்லை. அவன் வேண்டுமென்றே தன்வசம் உள்ளதைத் துறந்தவனில்லை. பிறக்கும் போதே எதுவுமின்றிப் பிறந்தவன் அவன்! தன் வசம் உள்ள சொத்து சுகங்களை வலிந்து துறந்து இறைப் பாதையில் செல்பவர்களை இந்த உலகம் துறவி என்கிறது. அதே போல மூச்சடக்கி முனைந்து மந்திரம் கூறுபவன் முனிவன்.

தான் பிறக்கும் போதும் எதுவும் இல்லை, பிறந்த பிறகு தேடி அடையவும் வழியில்லாத நிலையில் சிலர் தங்களுக்கு அளித்துக் கொள்ளும் கோலம்தான் ஆண்டிக் கோலம்.

உண்மையில் இந்த உலகில் உள்ள எதுவும் நமக்கு சொந்தமில்லை.இன்று நம்முடையது, நாளை இன்னொருவருடையதாகிறது. எவ்வளவு பெரிய சீமானாக இருந்தாலும் அவர் கொண்டு செல்லப் போவது எதுவும் இல்லை.

எனவே, உண்மையில் உலகத்தவர்கள் யாவரும் பிரபஞ்ச விதிப்பாட்டின் முன்னால் ஆண்டிகளே என்பது கடுவெளியார் சொல்லாமல் சொல்லும் கருத்தாகும்.

இந்த உண்மையை நாம் நன்கு உணர்ந்திருந்தால் வாழ்க்கையில் சில செல்வங்களை அடையும்போது எகிறிக் குதிப்பதோ, இல்லை சில இழப்புகளை சந்திக்கும் போது பெரிய அளவில் வருத்தமோ அடைய மாட்டோம். சம நிலையில் நின்றுகொண்டு எல்லாவற்றையும் பார்க்கப் பழகிக் கொள்வோம்.

இப்படி ஒர் அரிய கருத்தைத்தான் கடுவெளியார் நந்தவனத்திலோர் ஆண்டி பாடலுக்குள் புதைத்து வைத்திருக்கிறார். அவர் ஒன்றும் ஆயிரக்கணக்கான பக்கங்களுக்கு பாடி வைக்கவில்லை.34.கண்ணிகள் கொண்ட 'ஆனந்தக் களிப்பு' என்கிற பாடல் வரிகளே அவருடையதாக நமக்குக் கிட்டியுள்ள பாடல்களாகும்.

இவரது காலம் 15-ம் நூற்றாண்டாகும். தஞ்சாவூர் பக்கமாக கடுவெளி எனும் கிராமத்தில் பிறந்தவர் இவர். அதனால் இவரை கடுவெளிச் சித்தர் என்று கூறுவார்கள்.

ஆனால், உண்மை அதுவல்ல!

கடுவெளி எனும் பஞ்ச பூதங்களில் ஒன்றான 'வானம்' குறித்து முற்றாய் சிந்தித்து 'வெளி'யே நம்மை ஆள்கிறது - வெளியில்தான் எல்லாம் உள்ளது. அந்த வெளியே மனித உடம்புக்குள் மனவெளி என்றாகி ஆட்சி செய்கிறது என்கிற சூட்சுமத்தை அறிந்து சொன்னவர் இவர். அதனாலேயே இவரைக் கடுவெளிச் சித்தர் என்றனர்.

இவரது வாழ்வில் இவர் உணர்ந்து கொண்ட வாழ்க்கை ரகசியங்கள் பலப்பல!

'சிவத்திச்சை (சிவத்தின் மேல் இச்சை வைப்பது எனும் பொருள்) வைத்தால் எமலோகம் பொல்லாதே!' என்பது உணர்ந்து சொன்ன பாடல் வரிகளாகும். இதற்கு பின்னாலே ஒரு சம்பவம் ஒளிந்திருக்கிறது.

ஊர் ஊராக ஒரு சன்னியாசியாகச் சுற்றி வந்த இவர் தனது அந்திமக்காலத்தை காஞ்சியிலேதான் கழித்தார். காஞ்சி கைலாசநாதர் கோவிலுக்கு போய் மனமுருக சிவ வழிபாடு செய்வது இவரது அன்றாடச் செயல்பாடுகளில் ஒன்றாகும்.

அந்த சிவன்தான் ஆகாயத் தத்துவத்தை உலகுக்கு அருளியவனுமாவான்.

அடி-முடி தேடி மாலும், பிரமனும் பயணம் செய்து அடி - முடியை காணாது திரும்பிய கதையை நாமறிவோம். அந்த கதையின் உட்பொருளே அந்த ஆதி நாயகன் ஆதியும், அந்தமும் அற்றவன் என்பதேயாகும். எனவே வெளித் தத்துவத்தை அவருக்கு உணர்த்திய அந்த ஈசனையே கடுவெளியாரும் முழுமுதற் கடவுளாகக் கொண்டு துதித்து வந்தார்.

கைலாசநாதர் ஆலயத்தில் இப்போதும் ஒரு வழக்கம் நடைமுறையில் உள்ளது. அங்கே ஒரு துவாரம் உள்ளது. அதன் வழி புகுந்து மறுபக்கம் ஒருவர் வந்து விட்டால் அவருக்கு நீண்ட ஆயுளும், மோட்சமும் உறுதி என்பதுதான் அது!

இன்றும் மெலிந்த தேகம் உடையவர்கள் சட்டென்று உள்புகுந்து வருவதையும், பருத்த தேகத்தவர்கள் அடடா இது நம்மால் முடியாதே என்று தேங்கி நிற்பதையும் அங்கு சென்றால் காணலாம். இது

இடைக்காலத்தில் ஏற்பட்ட உளவியல் ரீதியிலான ஒரு விஷயம்.

சிலர் அந்த துவாரம் முன் நின்று கொண்டு 'இந்த துவாரமா முக்தியைத் தீர்மானிக்கிறது... 'அட! புளுகுவதற்கும் ஒரு அளவு கிடையாதா?' என்று எதிர்க் கேள்வி கேட்டுவிட்டு, அந்த துவாரத்தை அலட்சியப்படுத்தி விட்டுப் போவதையும் காணலாம்.

மொத்தத்தில் அந்த 'துவாரவழி' என்பது எப்படிப் பட்ட மனப்பான்மையில் ஒருவர் இருக்கிறார் என்பதைக் காட்டிக் கொடுத்து விடும் ஒன்றாகவே இன்று வரை உள்ளது.

எவ்வளவு பாபங்கள் செய்திருந்தாலும், அந்த உறுத்தல் மனதில் இருக்கின்ற போதிலும் இதன் வழியே நாம் நுழைந்து வெளிவந்து விட்டால் கைலாசநாதன் அருளால் நமது பாவங்கள் நீங்க நாமும் புண்ணியர்களாகி விடுவோம் என்று ஒருவர் நம்புகிறார் என்றால் அந்த நம்பிக்கைதான் அங்கே முக்கியப் பங்காற்றுகிறது. அப்படி ஒரு பங்களிப்பை அது செய்ய வேண்டும் என்பதற்காகவே நமது ஆலயங்களில் இது போன்ற சில ஏற்பாடுகளையும் நம் முன்னோர்கள் செய்து வைத்துள்ளனர்.

இப்படி ஒரு நிலையில். காஞ்சியில் ஒரு தம்பதிக்குப் பிறக்கின்ற குழந்தைகள் எல்லாம் இறந்து விடுவது என்பது ஒரு வாடிக்கையாக இருந்தது.

ஏழு முறை கருத்தரித்து ஏழு முறையும் தான் பெற்ற பிள்ளைகளை அந்த தாயானவள் எமனுக்கு கொடுத்து வந்தாள். இதனால் அவள் கருக்கொள்ளவே அஞ்சினாள்.

பார்க்கின்றவர்களும் அந்த தம்பதியிடம் வந்து நீங்களும் உங்கள் மூதாதையர்களும் செய்த பாவமே இப்படி பிள்ளைகள் தங்காமல் போவதற்கு காரணம் என்று பேசினர்.

இதனால் மனமுடைந்த அந்த தாயும் எட்டாவது முறை கருவுற்ற போது இம்முறையும் குழந்தை இறந்தால் தானும் தற்கொலை செய்து கொண்டு விடுவது என்கிற முடிவிற்க்கு வந்தாள். பொதுவாக இப்படிப்பட்ட சிக்கலில் இருப்பவர்கள் அடுத்து தேடிப் போவது ஆலயத்தைத்தான்!

அங்கேதானே மனம் விட்டு அழுது பிரார்த்தித்து கொள்ளவும் முடியும். அப்படித்தான் அந்த தாயும் கர்ப்ப வயிற்றுடன் கைலாசநாதர் கோவிலுக்குச் சென்றாள். அன்று கடுவெளிச்சித்தரும் ஆலயத்துக்குள் இருந்தார்!

## 9

அந்த ஆலயத்தினுள் மோட்ச துவாரம் வழியாக நுழைந்து வெளியே வர பலரும் முயன்றபடி இருந்தனர். அன்றைய வழிபாட்டிற்காக கோவிலுக்கு வந்திருந்த கடுவெளியார் எட்டாவதாய் கருவுற்றிருக்கும் அந்தப் பெண்ணையும் பார்த்தார். அந்தப் பெண்ணும் சன்னதிக்குச் சென்று இறைவனை முதலில் வழிபடாமல் மோட்ச துவாரம் எங்கே இருக்கிறது? அதனுள் நுழைய என்ன வழி என்றே சிந்தித்தபடி இருந்தாள்.

தனக்கு முன் எதிர்ப்பட்ட கடுவெளியாரிடமும், அவள் அதையே கேட்டாள்.

"ஐயா... இங்கே மோட்ச துவாரம் என்று ஒன்று உண்டாமே..?"

"அதற்கென்ன தாயே!"

"நான் அதனுள் புகுந்து என் பாவங்களைத் தொலைக்க விரும்புகிறேன்."

"அதனுள் புகுந்தால் பாவங்கள் தொலையும் என்று உனக்கு யாராம்மா சொன்னது?"

"நான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவள். என் ஊருக்கு ஒரு வேதாந்தி வந்திருந்தார். அவர்தான் கூறினார்."

"அதை நம்பியா இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்"

"ஆம் ஐயா... நான் மிகப் பெரிய பாவி. எதிலும் அதிர்ஷ்டமில்லாதவள்..."

"ஒரு கர்ப்பவதி இப்படி பேசலாமா அம்மா?"

"என்ன செய்ய. இந்த கர்ப்பம்தான் இன்று எனக்கு பிரச்னையே."

"கர்ப்பம் என்பது ஒரு பெண்ணின் முழுமை தாயே. இது இறைவன் உனக்கு கொடுத்திருக்கும் வரம்..."

"இப்போது இது வரம்தான். ஆனால், பிள்ளை பிறந்த பின் புது இறந்து போனால் சாபம்தானே?"

"அடடே அப்படியானால் எத்தனை குழந்தைகளை நீ அப்படி எமனுக்குக் கொடுத்தாய்"

"ஏழு குழந்தைகளை!"

"அத்தனை குழந்தைகளை கொடுத்தும் உனக்கு கருத்தரிக்க எப்படி விருப்பம் ஏற்பட்டது? "

“எங்களுக்கென்று ஒரு பிள்ளை தங்காமலா போய் விடும் என்கிற நம்பிக்கையில்தான்…”

"அப்படி ஒரு நம்பிக்கை உனக்கிருக்கும் போது இங்கு எதற்கு வந்தாய்” கடுவெளியாரின் அந்த கேள்வி முன் அந்தப் பெண்ணும் சற்று சிக்கிக் கொண்டவள்போல தேங்கி நின்றாள்.

“சொல்லம்மா… அந்த நம்பிக்கை மேல், உனக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விட்டதா?”

"அப்படி இல்லை ஐயா.அத்துடன் என் பாவங்கள் நீங்கி விட்ட ஒரு நிலைப்பாடு மேலும் பலம் சேர்க்கும் என்றுதான் இங்கே வந்தேன்.”

"அப்படியானால் இந்த மோட்ச துவாரத்தில் நுழைந்து திரும்பினால் உன் பாவங்கள் முழுமையாக அகன்று விடும் என்று நீ உறுதியாக எண்ணுகிறாயா?”

“இது என்ன கேள்வி. என் போன்றவர்களை ரட்சிக்கத்தானே இப்படி ஒரு வழிமுறை இந்த ஆலயத்தில் இருக்கிறது"

“அது சரி. இப்படி ஒன்று இருப்பதாலேயே எவ்வளவு பாவம் செய்தாலும் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.இஷ்டத்திற்கும் பாவம் செய்து விட்டு ஒருநாள் இங்கே வந்து மோட்ச துவாரத்தினுள் புகுந்து வெளி வந்துவிட்டால் தீர்ந்தது என்றும் அனேகர் பாவம் செய்யலாம் அல்லவா?”

திரும்பவும் கடுவெளியார் கேள்விப் பொறிக்குள் அவள் சிக்கிக் கொண்டது போலத்தான் தோன்றியது. அவளிடம் ஒரு மவுனம்.அவருக்கு என்ன பதில் சொல்வது என்பது தெரியாத தவிப்பு. இருந்தும் அதிலிருந்து மீண்டு ஒரு கேள்வியைக் கேட்டாள்.

"அப்படியானால் இந்த துவாரம் எதற்கு. யாருக்காக? "

“இது அந்த ஈசன்மேல் பற்றில்லாதவர்களுக்கம்மா. ஆழமாகப் பற்று வைக்க முடியாதவர்களுக்கும் கூட…"

"குழப்பமாக இருக்கிறதே உங்கள் பதில்…”

“நானொரு சித்தனல்லவா… அதனால் உனக்கு அப்படித்தான் தோன்றும். தாயே உன்னைப் பார்க்க எனக்கு பரிதாபமாக இருக்கிறது. எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று நீ இருக்கிறாய். வழிபாடு, ஆராதனை, மோட்ச துவாரம் எல்லாம் உடலுக்கு அளிக்கும் உடற் பயிற்சி போல மனதுக்கு தரப்படும் விஷயங்களம்மா. இந்த விஷயங்கள் அவ்வளவும் ஒருநாரைப் போன்றது. இதனுள் இறைவன் என்னும் பூவைக் கட்டினால்தான் நாருக்கு மதிப்பு. வெறும் நார் எங்கேனும் பூவாகுமா?”

கடுவெளியார் அப்படிக் கேட்டும் அவளுக்குப் புரியவில்லை. அதற்கு மேல் அவரும் அவளிடம் வாதம் செய்ய விரும்பவில்லை. அவளை அழைத்துக் கொண்டு நேராக ஈசனின் திருச்சன்னதி முன் சென்று நின்றார். அப்படியே கை கூப்பித் தொழுவர், “இறைவா. இந்தத் தாயின் கருவில் உள்ள மழலை மரண பயமின்றி நூறாண்டு வாழ நீ அருள வேண்டும். உன் பேரால் நான் இப்பெண்ணுக்கு அதற்கான ஆசியினை

அளிக்கின்றேன். சித்தன் வாக்கு சிவன் வாக்கு. எல்லாம் ஒன்று என்றால் என் வாக்கிலேயும் நீயே இருக்கிறாய். நீயே அருளவும் செய்கிறாய்.

உன்னைப் பற்றிக்கொள்ளும் வழி தெரியாமல் சாரம் இல்லாத ஆசாரங்களில் இந்த மனிதர்கள் மூழ்கியுள்ளனர். மனம் முழுக்க சிவத்தைப் போட்டு நிரப்பி விட்டால் எந்த ஆசாரங்களும் தேவை இல்லை என்பதை இவர்கள் எப்பொழுதுதான் உணர்வார்களோ தெரியவில்லையே." என்று வருத்தமுடன் பிரார்த்தனையும் புரிந்து கொண்டார்.

கடுவெளியாரின் பிரார்த்தனைக்கு உடனேயே அந்த ஈசனும் செவி சாய்த்தது போல அங்கேயே அப்போதே அந்த பெண்ணுக்கு இடுப்பு வலி எடுத்தது. அவளை உடனே ஆலயத்து மடப்பள்ளிக்கு அழைத்துச் சென்றனர். அங்கே ஒரு அழகிய ஆண் குழந்தையும் பிறந்தது. கொவ்வை இதழ்களும், குமிழ்ச் சிரிப்புமாக பார்ப்பவர்கள் மனதையும் அது கொள்ளை கொண்டது. கடுவெளியாரே அக்குழந்தைக்கு அங்கேயே நமச்சிவாயம் என்று பெயரிட்டார்.

“தாயே நீ உன் மகனை அழைக்கும் போதெல்லாம் அந்த இறைவனையும் அழைத்தவளாவாய். அவன் பெயரைச் சொல்லச் சொல்ல இவனுக்கு ஒரு குறையும் வராது. சிவன் மேல் இச்சை வைத்தவர்களுக்கு எமனுலகம் பொல்லாதது. அன்று மார்க்கண்டேயனுக்கு அருளினான் இன்று உனக்கு அருளிவிட்டான்" என்று கூறிச் சென்றார்.

அவர் வாக்கும் பலித்து அந்த நமச்சிவாயமும் பல்லாண்டுகள் இந்த மண்ணில் வாழ்ந்து எல்லா

நலன்களையும் பெற்றுச் சிறந்தான்.

கடுவெளியாரின் வாக்கு வலிமையும் காஞ்சி முழுக்கப் பரவலாயிற்று.

சித்தர் பெருமக்களிலேயே கடுவெளியார் மிக வித்தியாசமாகவும் திகழ்ந்தார். மானுடர்களின் வாழ்க்கையில் நடைபெற்றிடும் சம்பவங்களை வைத்தே அதை நுட்பமாக ஆராய்ந்து அதன் மூலம் சமுதாயத்திற்கு அவர் பல அரிய கருத்துகளைக் கூறினார்.

அந்த நாளில் சித்தர்கள் என்றாலே அவர்கள் எவர் பேச்சையும் கேட்க மாட்டார்கள் என்றும், சதாசர்வ காலமும் கஞ்சா போன்ற புகைவஸ்துக்களை பயன்படுத்தி போதையில் இருப்பார்கள் என்றும் ஒரு எண்ணம் இருந்தது. அதை முற்றாக மறுத்தவர் கடுவெளியார்.

அனேக சித்தர்கள் சிவத்தைக் கூட பெரிதாகக் கருதாதவர்கள். குறிப்பாக உருவ வழிபாட்டையும், அர்ச்சனை, ஆராதனை போன்ற பூசனைகளையும் அறவே அவர்கள் வெறுத்தார்கள்.

பிரமை பிடித்தது போல திரிவதுதான் அவர்கள் இயல்பு. பிராந்தர் என்று ஒரு சித்தர்! இந்த பெயரும் காரணப் பெயர்தான். 'பிராந்தன்' என்றால் மலையாளத்தில், "பைத்தியக்காரன்" என்று பொருள். நாராணத்து பிராந்தன் என்றே மலையாளிகள் அவரை மரியாதையுடன் அழைத்தனர். அந்தப் பொருளிலேயே ஒரு சித்தரையும் அவர்கள் அழைத்தனர். அவர் செயல்களும் அப்படித்தான் இருக்கும். ஒரு பெரிய

கல்லை ஒரு குன்றை நோக்கி மிகவும் சிரமப்பட்டு உருட்டிச் செல்வார். பின் அங்கிருந்து கீழே உருட்டி விட்டு அதை வேடிக்கை பார்த்து கை கொட்டிச் சிரிப்பார்.

அதனைப் பார்ப்பவர்களுக்கும் அது ஒரு அர்த்தமில்லாத செயலாகத்தான் தெரிந்தது. ஆனால், அதன் உள்ளர்த்தம் வேறு. ஒரு காரியத்தை செய்வது மிக கடினமானது. அது மலை உச்சிக்கு கல்லை உருட்டிச் செல்வது போல் கடினமானது. அதை கெடுப்பது மிக எளிது. அது உருட்டி விடுவது போன்றது என்பதே அது!

எனவே, சித்தர் பெருமக்களை அவர்களது செயலை வைத்து மேலோட்டமாக எடையிடுதல் தவறானது.இருந்தும் அந்த தவறினை இன்னும் பலர் பல இடங்களில் செய்தபடிதான் உள்ளனர்.

இப்படித்தான் அன்று கடுவெளியாரையும் பலர் பல மாதிரி பார்த்தார்கள். அப்படிப்பட்டவர்களை எல்லாம் பார்த்து அவர் அவர்களுக்கெல்லாம் உறைக்கும்படி பாடிய பாடல்கள் பல. அதில் ஒன்றுதான்,

**"கஞ்சா புகை பிடியாதே - வெளி**

**காட்டி மயங்கியே குடியாதே!**

**அஞ்ச உயிர் மடியாதே - பத்தி**

**அற்றவஞ் ஞானத்தின் நூல் படியாதே!"**

என்கிற பாடலாகும். இதில் பக்தி இல்லாமல் சிந்தனைகள், கருத்துக்கள், பகுத்தறிவு வழிகாட்டல்கள் என்கிற பெயரில் எழுதப்படுகின்ற நூல்களை படிக்கவே

படிக்காதே என்கிறார். இதிலிருந்தே அவர் பக்தியை பெரிதாகக் கருதினார் என்பது தெளிவாகிறது. உடம்பு இயங்க சக்தி எப்படி தேவையோ, அதே போல மனதுக்கு பக்தி தேவை என்பது சான்றோர்கள் அறுதியிட்டு கூறிச் சென்ற ஒரு கருத்தாகும்.

இன்றைய நவீன உலகில், அதிலும் விஞ்ஞான மாயை சூழ்ந்த நிலையில் பக்தி என்பது பலரால் ஒரு பலவீனமாகவே பார்க்கப்படுகிறது. தன்னம்பிக்கை, மனத்தெளிவு இவையெல்லாம் இருந்தால் போதும் பக்தி என்பது கோழைத்தனத்தின் ஒருவித வெளிப்பாடு என்பது நாத்திகர்களின் கருத்து.

ஆனால், கடுவெளியார் அதை கடுமையாகச் சாடுகிறார். மனம் பண்படுவதே பக்தியால்தான் என்கிறார். அதற்கு உதாரணமாக அவரே பக்தியோடு திகழ்ந்தார்.

பக்தி, சக்தி, முக்தி என்கிற சொற்களில் அதன் முதல் எழுத்தில்தான் மாறுபாடு. பின்வரும் எழுத்துக்கள் மாறாததைக் காணலாம். இதில் சக்திக்கு பொருள் அது சாப்பிடுவதால் வருவதாகும். எனவே, அதன் முதல் எழுத்தை எடுத்துப் போட்டு அமைந்த சொல் அது பக்தி யில் 'ப'வுக்கு பொருள் நாம் நம் மனதால் பற்றிக் கொள்வதால் வருவது என்பதாகும். இந்த பக்தியும், சக்தியும் முடிவுறும் இடமே முக்தி என்று சொற்களை வைத்துக் கொண்டே சிலர் சூசகமாய் பொருள் கூறுவார்கள்.

கடுவெளியார் பக்தி மாத்திரம் செய்யச் சொல்ல வில்லை.

**"வேதவிதிப்படி நில்லு - நல்லோர்**

**மேவும் வழியினை வேண்டியே சொல்லு"**

- என்கிறார். வேதங்களை வாழ்க்கைக்கான வழி காட்டியாக அவர் உணர்ந்ததுதான் காரணம். கடுவெளியார் பிச்சை எடுப்பதையும் இகழ்கிறார்.

**'பிச்சையென்று ஒன்றும் கேளாதே!'**

என்கிறார்.

பிச்சை எடுத்து வாழ்வதற்கு இறந்து விடலாம் என்பது அவர் கருத்து. இதற்கு பின்னே ஆழமான ஒரு பொருளும் உள்ளது.

கல்லுக்குள் தேரைக்கும் படியளப்பவன் அந்த பரமன். அப்படிப்பட்டவனா இந்த உலகில் ஒரு மானிடனுக்கு சோறு இல்லாத ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்துவான்?

உண்மையில் பிச்சை எடுக்கும் நிலைக்கு ஒருவர் செல்லக் காரணமே அவரது கருமம்தான். தேவைக்கு அதிகமாய் பொருளை சேர்த்து வைத்துக் கொள்வது மாத்திரமல்ல, பிறர் பொருள் மேல் ஆசை வைத்து அதை திருடியாவது தன் வசப்படுத்தி கொள்பவர் யாராக இருப்பினும் அவர்கள் ஒரு நாள் பிச்சை கேட்டு பிறர் கருணையை மட்டுமே நம்பி வாழ்ந்திடும் நாள் வரும் என்பதே இதனுள் சூட்சுமமாய் ஒளிந்திருக்கும் பொருளாகும்.

பிச்சை எடுப்பவர் தர்மம் என்ற பெயரில் பிறரது உணவையோ அல்லது காசு பணத்தையோ மட்டும் கேட்டுப் பெறவில்லை. அவர்களது பாவ கர்மத்தையும் சேர்த்தே பெற்றுக் கொள்கிறார் என்பதே கடுவெளியார் கண்டறிந்த உண்மை.

அதனாலேயே "உன் முன் பிச்சை கேட்டு ஒரு கரம் நீளும்போது இல்லை என்று கூறி அதை மறுக்காதே. உன்னால் முடிந்ததை அளித்து அந்த கரத்தை நிரப்பு. நீ அப்போது உன் கருமத்தையும் சேர்த்து தருகிறாய்" என்கிற ரமண மகரிஷியின் கருத்தை இவ்வேளையில் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

அது மட்டுமல்ல. பிறர்க்குதான் நம்மால் கொடுக்க முடியும். நமக்கு நாமே ஒன்றை கொடுத்துக் கொள்ள முடியாது. எவனொருவன் பிறர்க்குக் கொடுக்கும் செயலே தனக்கு கொடுத்துக் கொள்ளும் வழியாகும் என்பதை அறிகிறானோ அவனே மேலான எண்ணம் உள்ளவன். இந்த உண்மையறிந்த எவர் கொடாது இருப்பர்? என்று ரமண மகரிஷியே கேள்வியும் எழுப்புகிறார்.

நாம் எதையும் யாசிக்காத நிலையில் ஒருவர் நமக்கு அளிப்பது தர்மமாகும். நாம் யாசித்துப் பெறுவது பிச்சையாகும். பிச்சை எடுத்து வயிறு வளர்ப்பவர்கள் மேலும் மேலும் கருமத்தில் சிக்குகிறார்கள் என்பது கடுவெளியார் கண்டறிந்த உண்மை. அதனாலோயே இல்லாத நிலை வரும்போது துணிவுடன் அதை எதிர்கொண்டு உயிரை விட்டுவிடுதல் என்பது தீய கர்மத்தின் முடிவான செயலாகி விடும் என்கிறார்.

எந்த ஒரு விஷயத்தையும் நாம் எங்கிருந்து பார்க்கிறோம், எப்படிப் பார்க்கிறோம் என்பதில்தான் அதன் பரிமாணம் நமக்குள் தெரிய வரும். கடுவெளியார் பார்த்த விதத்திற்கு ஏற்ப தன் கருத்தை பதிவு செய்துள்ளார். '**உள்ளாக நால்வகைக் கோட்டை - பகை**

**ஓடப் பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை**

**கள்ளப் புலனென்னுங் காட்டை - வெட்டிக்**

**கனலிட்டெரித்திட்டால் காணலாம் வீட்டை!'**

என்பது போல இவர் பாடிய பாடல்களுக்கு நாம் பலவிதமாக பொருள் கொள்ளலாம்.

15 - ம் நூற்றாண்டில் வாழ்ந்து முக்தியடைந்த இவரைப் பற்றி போகர் தன் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அந்த போகரைப் பற்றி நாம் இனிப் பார்ப்போம். பழனியம்பதி சார்ந்த போகருக்கு பூலோக கைலாசம் எனப்படும் சதுரகிரி மலையிலே ஒரு வாழ்க்கை முறை இருந்தது. அது மிக மிகச் சுவையானது!

## 10

**ச**துரகிரி!

இன்று இந்த மலைத்தலம் பற்றி பலரும் பேசிடக் கேட்கிறோம். அபூர்வமான இந்த மலைத்தலம் தமிழ் நாட்டின் தென்பகுதியில் உள்ளது. குறிப்பாக ராஜ பாளையத்திற்கு பக்கத்திலுள்ள 'வத்திராயிருப்பு' எனும் ஊருக்கு ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இதன் அடிவாரம் ஆரம்பமாகின்றது.

வத்திராயிருப்புக்கு 'குட்டிமலையாள நாடு' என்னும் ஒரு பெயர் உண்டு. அந்த அளவுக்கு தென்னையும்,செந்நெல்லும் தழைத்து வளர்ந்து கிடக்கும் ஊராகும்.

இந்த ஊரில் உள்ளவர்கள் பசி தாகத்தை வென்றவர்கள். வற்றாத இருப்பை உடையவர்கள் எனும் பொருளிலும் வத்திராயிருப்பு என்கிற பெயர் வந்ததாகக் கூறுவார்கள்.

இங்கிருந்துதான் சதுரகிரி எனும் தென் கைலாய மலைத்தலத்துக்கு செல்ல வேண்டும். சித்தஜாலத்திற்கும் இந்த மலைத்தலத்துக்கும் என்ன சம்பந்தம் என்கிற கேள்வி எழலாம்.

சம்பந்தம் நிறையவே உள்ளது.

இந்த உலகின் முதலும் முடிவுமான சித்தர்களின் பூமி தான் இந்த சதுரகிரி மலைத்தலம். இதன் பூகோளச் சிறப்பு மிகவே வியப்பைத் தருவதாகும். இதன் சிறப்பே கடல் மட்டத்திலிருந்து இது கொண்டிருக்கும் குறிப்பிட்ட அளவு உயரத்தால்தான் என்பது பலர் கருத்தாகும். சுனை, ஊற்று, ஓடை, மூலிகைச் செடிகள், விசேஷ குணம் கொண்டமர விருட்சங்கள், கனிமவளம் கொண்டபாறைகள் இதுபோக இங்கு வீசும் காற்று, இங்கு பெய்யும் மழை என்று எல்லாவற்றிலுமே உலகில் வேறு எங்கும் காண மாட்டாத காணவும் முடியாத சிறப்புக்கள் இங்கே இருப்பதை முதலில் கண்டறிந்தவர்கள் சித்தர் பெருமக்களே!

கண்டறிந்தது மாத்திரமல்ல. அவர்கள் இன்றளவும் இந்த மலையில் தவம் செய்தபடி வசித்தும் வருகிறார்கள் என்றால் அதை நம்ப முடியாதுதான். ஆனால், இன்றளவும் பல மெய்யன்பர்களுக்கு குறிப்பாக சித்தர் சீடர்களுக்கு இந்த மலைத்தலத்தில் கிட்டிவரும் அனுபவங்கள் சிலிர்ப்பினை ஊட்டக் கூடியதாகும்.

சுருக்கமாகக் கூறுவதானால் சித்தர் பெருமக்களின் கோட்டை இந்த சதுரகிரி மலை எனலாம். பதிவிரதை அனுசுயாவை சோதிக்கும் முகமாக மும்மூர்த்திகளும் பூலோகம் வந்தபோது அத்திரி மகரிஷியின் பத்தினியாக அனுசுயா பர்ணசாலை அமைத்து வாழ்ந்த இடம்தான் சதுரகிரி. தன் பர்ணசாலைக்கு முனிவர்கள் வேடமிட்டு வந்த அவர்களை சிறு பிள்ளைகளாக்கி அதன் தொடர்ச்சியாக முப்பெரும் தேவியர்களையும் வரவழைத்தாள் அனுசுயா. அவர்கள் வந்து கெஞ்சிய பிறகே மும்மூர்த்திகளுக்கும் பழைய ரூபம் கிட்டியது!

அது மாத்திரமல்ல. விதியை வென்று காட்டிய மார்க்கண்டேயனை சதி அனுசுயை பெற்றெடுத்ததும் இந்த மலைத்தலத்தில்தான். சிவசக்தி திருமணத்தின் போது தேவர்கள் அவ்வளவு பேரும் கைலாயம் சென்று விட்டநிலையில் பூமியில் பஞ்சபூத நிலைப்பாட்டில் ஒரு ஏற்றத் தாழ்வு ஏற்பட்டு விசைப்பாடே கெட்ட போது சமநிலை ஏற்படுத்தும் பொருட்டு பலநூறு தேவ சக்திகளின் தொகுப்பாக விளங்கும் அகத்திய மகரிஷியை இறைவன் சதுரகிரிக்கே அனுப்பிவைத்தான்.

அகத்தியர் இங்கு வரவும் விசைப்பாடு சீரானது. சம நிலையும் ஏற்பட்டது. கூடவே அகத்தியப் பெருமானார்க்கு இறைவனும், இறைவியும் மணக்கோலத்தில் இங்கேயே காட்சியும் தந்தார்கள்.

அது மட்டுமா?

கோரக்க சித்தரும், பிரம்ம சித்தரும் ஒரு புது உலகைப் படைத்திட விரும்பி மாபெரும் யாகவேள்வியை செய்தது கண்டு அஞ்சி நடுங்கிய இந்திராதி தேவர்கள்

அருள் மாயையும், இருள் மாயையும் இரு அழகிய தேவ கன்னிகைகளாக அனுப்புவித்து யாகத்தை தடுத்து நிறுத்திய இடமும் இதுவே...

இதெல்லாம் போதாதென்று இராம-ராவண யுத்தத்தின் போது இலக்குவன் இந்திரஜித்துவால் தாக்கப் பட்டு மூர்ச்சித்துப் போய்விட்ட நிலையில் அவனைப் பிழைக்க வைக்கும் வல்லமை கொண்ட சஞ்சீவி மூலிகை செழித்து வளர்ந்திருந்த மலைப்பாகமும் இதுவே! இங்கிருந்தே அனுமன் சஞ்ஜீவி மலையை தனியே பெயர்த்தெடுத்துச் சென்றான் என்பர். இல்லையில்லை. அது இமயத்திற்கு பக்கத்தில் உள்ளது. அதை சுமந்து வரும் போது சஞ்ஜீவி மூலிகைச் செடி இந்த சதுரகிரி மலைத் தலத்தில் விழுந்து இங்கேயும் சஞ்ஜீவி மூலிகை உற்பத்தி யாகத் தொடங்கியது என்றும் சிலர் கூறுவர்.

இதனாலேயோ இல்லை பஞ்சபூதக் கலவை இங்கே சமச்சீராக இருப்பதனாலேயோ சித்தர் பெருமக்களும் இங்கே வந்து தவம் செய்யத் தொடங்கினர்.

அவர்களது தவம் இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான் நம்மை பிரமிப்பிலாழ்த்தும் ஒரு விஷயமாகும்.

இந்த மலையின் உச்சியிலே அந்த ஈசன் மகாலிங்கமாக கோலம் கொண்டுள்ளான். இந்த ஈசனை அகத்தியரில் தொடங்கி அவ்வளவு சித்தர் பெருமக்களும் பூஜித்துள்ளனர். இவர்களைத் தொடர்ந்து அன்னை உமையும் தவம் செய்து மகாலிங்கத்தை பூஜித்துள்ளாள் சித்தர் பெருமக்கள் பூஜித்த லிங்கம் சுந்தரமகாலிங்கம் என்றும், அன்னை உமை

பூஜித்தலிங்கம் சந்தனமகாலிங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

மலையடிவாரத்தில் கருப்பண்ணசாமி காவல் தெய்வமாக இருந்து இந்த மலைக்கு தரிசனம் செய்ய வருபவர்களுக்கு வழிகாட்டுவதோடு துணையாகவும் வருவதுதான் ஆச்சரியம்.

இந்த கருப்பண்ணசாமியை இங்கே பிரதிஷ்டை செய்து கருப்புக்கு காவல் பணியை அளித்தவர் காலாங்கி நாதராவார்.

காலாங்கிநாதர் ஒரு சித்தர் பெருமகன் ஆவார். பின்னாளில் பலவிதமான கர்மம் புரிந்தவர்களும் இந்த சதுரகிரிமலைக்கு வந்திடும்போது அவர்கள் பரந்த மலை வனத்தில் திசைமாறிப் போய் மிருகங்களுக்கு இரையாகி விடக் கூடாது என்று கருதியே காலாங்கிநாதர் கருப்பண்ணசாமியை இங்கே பிரதிஷ்டை செய்தார் என்பர்.

இந்த கருப்பண்ணசாமி இந்த மலைத்தலத்தில் நாய் வடிவில் உலாவரும் அதிசயத்தை பலர் அனுபவித்துள்ளனர். நாய் என்பது பைரவ அம்சமாகும். சிவபெருமானின் காவல் தேவர்களில் ஒருவரும் கூட. இந்த உலகில் உள்ள சிவாலயங்களை இரவில் காவல் காப்பவர் பைரவரே என்பது சைவ ஆகமம் கூறும் கருத்தாகும்.

அப்படிப்பட்ட பைரவர் உதவியாலே போக மகரிஷியின் பக்தர் ஒருவருக்கு இந்த சதுரகிரி மலைத்தலத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னாலே சிலிர்ப்பூட்டும் அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

அந்த அனுபவத்தின் வாயிலாகவே போகரைப் பற்றியும், அவரது ஜாலங்களைப் பற்றியும் நாம் நிறையவே அறியலாம்.

போகர் என்றவுடன் பலருக்கும் பழனியின் நினைவும் அந்த தண்டாயுதபாணியின் நவபாஷாண உருவமும்தான் வேகமாக நினைவுக்கு வரும். போகர் மகாசமாதியானதும் பழனியம்பதியில்தான்.

இன்றும் மலை மேல் உள்ள அந்த தண்டாயுத பாணியை வணங்கி விட்டு வெளியே வருபவர்கள் வெளியே ஒரு மூலையில் அமைந்திருக்கும் அவரது ஜீவ சமாதிக்கும் சென்று வணங்கி விட்டு வருவதைப் பார்க்கலாம்.

அப்படி வணங்குபவர்களில் ஒருவர்தான் அந்த அன்பர். அவரது பெயர் ராமைய்யா! ராமைய்யாவின் மூதாதையர்கள் வைத்திய மரபு வழி வந்தவர்கள். சித்த வைத்தியம்தான் ராமைய்யாவின் குலத்தொழில். எனவே, ராமைய்யாவும் சித்த வைத்தியராகத்தான் தன் பணியை தொடர்ந்தார்.

ஆனால், சித்த வைத்தியப் பணியில் பெரிய வருவாய் கிட்டவில்லை. அதுமட்டுமல்ல அவரை நாடி வந்த பல குடும்பங்கள் காலப்போக்கில் ஆங்கில வைத்தியத்துக்கும் மாறி விட்டன. சித்த வைத்தியத்தின் சில பத்திய முறைகள், வலியை வேகமாக அடக்க முடியாத அதன் நிதானமான குணப்பாடு இதெல்லாம்தான் ஆங்கில வைத்தியம் நோக்கி பலரும் சென்றிட காரணமாக இருந்தது.

இதெல்லாமே ராமைய்யாவை பெரிதும் பாதித்தது. மகத்தான பல பெருமைக்கு சொந்தமான சித்த வைத்தியம் எங்கே நசிந்து ஒன்றுமேயில்லாமல் போய்விடுமோ என்றும் அஞ்சியவர் அடுத்து சென்று நின்றது அந்த முருகன் சன்னதிக்குத்தான்...

சன்னதி முன் நின்றவர் தன்னையும் மீறி தாரை தாரையாக கண்ணிர் வடித்தார். அவர் அப்படி கண்ணிர் விடும்போது முருக தரிசனத்துக்காக ஒரு ஆண்டியும் வந்திருந்தார். அவர் ராமைய்யா அழுவதைப் பார்த்து காரணத்தைக் கேட்டார். ராமைய்யாவும் நாளுக்கு நாள் சித்த வைத்தியம் நசிந்து வருவதைப் பார்த்தால் எனக்கு மிக வேதனையாக உள்ளது. நான் தொடர்ந்து எப்படி பிழைப்பது என்றே தெரியவில்லை' என்றார் ராமைய்யா.

அடுத்த நொடியே ராமைய்யாவின் கையை தரதர வென்று பிடித்து இழுத்துக் கொண்டு அந்த ஆண்டி போய் நின்ற இடம் போகரின் சன்னிதிதான். ராமைய்யா போகர் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால்,போகரின் ஜீவ சமாதிக்கெல்லாம் போனதில்லை...

அப்படிப் போய் நின்றவருக்கும் அடுத்தடுத்து ஆச்சரியங்கள் காத்திருந்தது. அவரை அங்கே அழைத்துச் சென்ற ஆண்டியை அதன் பின் அங்கே காணவில்லை. போகரின் சமாதியிலும் திடீரென்று விளக்கணைந்து போயிற்று. உடனேயே ராமைப்யா தன் வசம் உள்ள தீப்பெட்டியாலேயே அங்குள்ள ஒரு அகல் விளக்கையும் ஏற்றினார்.

ஏற்றியது மிகச் சிறிய விளக்குதான். ஆனாலும் அந்த சமாதியே பளபளவென்று ஜொலிப்பது போல

ராமைய்யாவிடம் ஒரு பிரமை. அவர் காதிலும் ஒரு அசரீரி ஒலி கேட்கத் தொடங்கியது.

'ராமைய்யா. சதுரகிரிமலைக்கு போ.அங்கே எனது போகர் சருக்கத்தில் உனக்கு எனது மருத்துவக்குறிப்புகள் கிடைக்கும்.' என்றது அந்த அசரீரி.

ராமைய்யாவுக்கு முதலில் தன் காதில் விழுந்த குரலின் மேல் பெரிய நம்பிக்கை வரவில்லை.அது அனேகமாக தனது மனப் பிராந்தியாகத்தான் இருக்க வேண்டும் என்றே கருதினார். அதனால் சதுரகிரி மலையகம் எங்கிருக்கிறது என்றோ அதற்கு செல்ல வேண்டும் என்றோ அவர் துளியும் முனையவில்லை!

அவருக்கென உள்ள வைத்தியசாலையில் உட்கார்ந்து கொண்டு ஒரு மூலிகை இலையை அரைத்துக் கொண்டிருந்தபோது மலையில் அவரை போகர் சன்னதிக்கு அழைத்துச் சென்ற அதே ஆண்டி திரும்பவும் வந்து ராமைய்யா முன்நின்றார்.

ராமைய்யாவுக்கு அவரை அவ்வளவாக அடையாளமும் தெரியவில்லை. வந்தவரோ தனது இடது கையை ராமைய்யா முன் நீட்டினார். கை முழுக்க குஷ்ட ரோகம் பரவியதுபோல ஒரு தோற்றம்.ராமைய்யாவுக்கும் புரிந்தது. "ஐயா. என்னிடம் பித்தம், கபம் இதற்கு மட்டுமே பஸ்பங்கள் உள்ளன. இது போன்ற பெரு வியாதிக்கெல்லாம் மருந்தில்லை' என்றார் அவர்.

அவருக்கு உடனேயே கோபம் வந்து விட்டது.

“இதற்கு தான் போக மகரிஷி உன்னை சதுரகிரி மலையில் உள்ள அவரது சருக்கத்து குகைக்கும் வரச் சொன்னார். ஆனால், நீ அதை மனப்பிராந்தியென்று எண்ணிக் கொண்டு போகாமலே இருக்கிறாய். கூப்பிட்டுக்கூட போகாத நீ எல்லாம் என்ன சிஷ்யன்” என்று கடிந்து கொண்ட ஆண்டி வந்து பேசிய வேகத்தில் திரும்பியும் சென்றுவிட்டார்.

ராமைய்யாவுக்கும் அப்போதுதான் அசரீரியை தான் தவறாகக் கருதிவிட்டது புரிந்தது. அதன்பின் அவர் தாமதிக்கவில்லை. உடனேயே கிளம்பிவிட்டார். ராமைய்யாவின் உறவினர்களில் சிலர் மதுரையிலே உள்ளனர்.

முதல் காரியமாக மதுரைக்கு வந்த ராமைய்யா அன்று இரவு தங்கியது அவரது தங்கை வீட்டில்தான்! ராமைய்யாவின் தங்கைக்கு சிகாமணி என்று ஒரு மகன் இருக்கிறான். சரியான தறுதலை அவன். மதுப்பழக்கம், சூதாட்டம் என்று திரிபவன். மதுரையில் அவன் தொடர்ந்து இருந்தால் முழுவதுமாக கெட்டுக் குட்டிச் சுவராகி விடுவான் என்பது ராமைய்யாவின் தங்கையின் கருத்தாகும்.எனவே அண்ணன் ராமைய்யாவிடம் அவளும் தன் மகனை எப்படியாவது பழனிக்கு அழைத்துச் சென்று அவரோடு வைத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டாள்.ராமைய்யாவும் சம்மதித்தார்.அந்த நொடியே அவர் சிகாமணியை தன் சிஷ்யனாகவும் கருதத் தொடங்கி விட்டார்.

சிகாமணியும் மாமா ராமைய்யாவுடன் சதுரகிரி மலைக்கு புறப்பட்டான். எதற்கு என்று கேட்டவனிடம் மூலிகை பறிப்பதற்காக என்று கூறியவர் அவனை தனக்கான ஒரு உறுதியான துணையாகக் கருதினார்.

அவனும் தாயின் பிடுங்கலுக்கு மாற்றாக இப்படி மூலிகை தேடி மலைப் பக்கம் செல்வது ஒரு மாறுதலாக இருக்கும் என்று கருதினான்.

ஒரு வழியாக ராமைய்யாவும், சிகாமணியும் தாணிப் பாறையை சென்றடைந்தார்கள்! சதுரகிரி மலைத் தலத்தின் அடிவாரத்துக்குத் தான் தாணிப் பாறை என்று பெயர்.

அங்கே கீழேதான் பிலாவடிக் கருப்பண்ணசாமிக்கு காலாங்கி நாதர் கட்டிய கோயிலும் இருக்கிறது. அந்த கருப்புக்கு அன்று யாரோ சாராயமும், சுருட்டும் வைத்து பூஜை செய்திருந்தனர்... அது சிகாமணியின் கண்ணை உறுத்திற்று.

துப்புரவாய் கூட்டம் இல்லாத நிலையில் சுருட்டும், சாராயமும் சிகாமணியை சுண்டி இழுத்தபடி இருந்தது. தாணிப்பாறையருகே ஒரு ஒடை ஓடி வந்தபடி இருக்கிறது. அதில் குளித்துவிட்டு துய்மையாகத்தான் மலை ஏற வேண்டும்!

எனவே, ராமைய்யா குளிப்பதற்காக அந்த ஒடைப் பக்கம் சென்றபோது சிகாமணி சாராயத்தையும், சுருட்டையும் ருசிக்கத் தொடங்கி விட்டான்.

மனதுக்குள் துளியும் தெய்வ பயமே இல்லை. அவன் வரையில் கடவுள் நம்பிக்கை என்பதும் ஒரு மூட விஷய மாகத்தான் இருந்தது.

என்ன செய்வது?

அவனது சேர்க்கையும், பழக்கவழக்கங்களும் அப்படி?

அவனது செயலை தூரத்தில் ஒரு மரத்தின் பின்னால் இருந்து கறுப்பு நிற நாய் ஒன்று பார்த்துக் கொண்டே இருந்தது!

## 11

சதுரகிரி மலையின் அடிவாரச் சருக்கத்தில் அபூர்வமான சில மூலிகைகளைத் தேடி வந்திருக்கும் அந்த சித்த வைத்தியருக்கு ராமைய்யா என்பது பெயராகும். ராமைய்யா பரம்பரைப் பெருமை குன்றிடாத படி சித்த வைத்தியம் செய்து வருபவர் மாத்திரமல்ல வைத்தியர்கள் கடவுளுக்கு இணையானவர்கள் என்கிற கருத்தினையும் கொண்டிருப்பவர்.

அது அவர் கருத்து என்று சாதாரணமாகவெல்லாம் கூறிவிட முடியாது.வேதங்களையும், நீதிநெறி சாஸ்திரங்களையும் நன்கு அறிந்த சான்றோர் பெருமக்கள் அந்த கருத்தை அப்படியே வழிமொழிகிறார்கள்.

யோசித்துப் பார்க்கையில் அதுதான் உண்மை என்பது நமது பட்டறிவிற்கும் புலனாகும். உலகில் தனக்கொரு துன்பம் வந்தால் எல்லோரும் செல்லுமிடம் இறை சன்னிதானம்தான். அதேபோல உடம்பால் துன்புறுபவர் செல்லுமிடம் மருத்துவரின் விடுதி.

இறைவன் மனதுக்கு அமைதி தந்து வலி நீக்கினால், மருத்துவன் உடம்புக்கு அமைதி தந்து வலி நீக்குகிறான்.

எனவே, ஒவ்வொரு மருத்துவனும் இறை வடிவானவனே. இதை மருத்துவர்களும் புரிந்து கொண்டு இதை பணம் பண்ணும் ஒரு தொழிலாக கருதாமல் புண்ணியம் செய்யக் கிடைத்த ஒரு வாய்ப்பாக கருதி செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் கடவுளே தவறு செய்தார் என்றாகிவிடும்.

ராமைய்யா தன்னை எப்பொழுது கடவுளின் தன்மைக்கு கொண்டு சென்றாரோ அப்போதே கருணையும், காருண்யமும் அவரிடம் நிரம்பி வழியத் தொடங்கி விட்டது.

சதுரகிரி மலைக்குகூட அவர் சில அபூர்வ மூலிகைகளைத் தேடிவர அழுத்தமான வேறு ஒரு காரணமும் இருந்தது.

ராமையாவின் நோயாளிகளில் ஒருவர் மிகப்பெரிய ஜமீன்தார். ஜமீன்தாராக இருக்கின்ற போதிலும் மிகச் சிறந்த பக்திமான். தான தருமங்களில் தலை சிறந்து விளங்கினார் அந்த ஜமீன்தார். அவரால் பல நூறு குடும்பங்கள் மகிழ்ச்சியோடு பிழைத்து வந்தன. அப்படிப் பட்டவரை பெருநோய் தாக்கியதுதான் கொடுமை. இதனால் அந்த ஜமீன்தார் ஒரு இருட்டு அறையை விட்டு வெளியே வராமல் அதனுள்ளேயே தேங்கிக் கிடந்தார். அது மட்டுமல்ல... காலகாலமாக செய்து வந்த பலவிதமான, தர்மங்களையும் கூட நிறுத்தி விட்டார்... எவ்வளவுதான் நல்ல மனிதனாக வாழ்ந்தாலும் அதனால் ஒரு பயனுமில்லை.விதிப்படி நடப்பது நடந்தே தீரும் என்றால் பாவம், புண்ணியம் என்பதிலெல்லாம் அர்த்தமேயில்லை என்று மனம் வெதும்பிப் பேசவும் தொடங்கி விட்டார்.

ஜமீன்தாரின் வியாதியை விட கொடியதாக இருந்தது அவரது மனமாற்றம். அது ராமைய்யாவை பெரிதும் பாதிக்கவும் செய்தது. அப்போதே அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

ஜமீன்தாரை எப்பாடு பட்டாவது குணப்படுத்தியே தீருவது என்பதுதான் அவர் முடிவு. அதற்காக அவர் பெரிதும் நம்பியது போகர் பிரானைத்தான்… ஏனென்றால் அவரது சித்த வைத்ய சாலைக்கு பெயரே போகர் சித்த வைத்ய சாலை என்பதுதான்.

போகர் எழுதிய பல நூல்கள் அவரது வைத்ய சாலையிலும் இருந்தது. அதில் போகர் 7000 எனும் நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். போகர் துவாதகாண்டம் என்று ஒரு நூலையும் எழுதியுள்ளார். இதில் 12,000 பாடல்கள் இருப்பதாக கூறுவர். ஆனால், இந்த துவாத காண்ட நூல் இன்று கிடைக்கவில்லை. போகர் 7000 என்னும் சப்த காண்ட நூல்தான் கிட்டியுள்ளது. இது போக44 வகை கற்பங்களைப் பற்றிய போகரின் நூலும் மிக முக்கியமானது. போகர் ஜெனைசாகரம் எனும் நூல் வாயிலாகவும் போகரின் சித்தயோக விலாசங்களை எல்லாம் அறியலாம்.

இதில் போகரின் ஞான சாகரம் எனும் நூல் சதுரகிரி மலைச் சிறப்பையும், அங்கே அவர் பெயரால் உள்ள சருக்கத்தைப் பற்றி கூறுவதோடல்லாமல், போகருக்கு முன்பு வாழ்ந்த கோரக்கர் பற்றியும் நிறையவே கூறியுள்ளது.

இதை எல்லாம் படித்திருந்த நிலையில்தான் சதுரகிரி மலைத்தலத்துக்கு மூலிகை தேடிக்கொண்டும், அங்கே சிரஞ்ஜீவியாக இறவா வாழ்க்கை வாழ்ந்து வரும்

போகர் பிரானையும் தரிசித்தே தீருவது என்றும் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு ராமைய்யாவும் கிளம்பிவிட்டார்.

துளியும் சுயநலமில்லாத ஒரு தன்மையோடும், நம்பிக்கையோடும் தாணிப்பாறை வந்தடைந்த அவரை பிலாவடிக்கருப்பரும் நாய் வடிவில் கவனித்துக் கொண்டுதான் இருந்தது.

சதுரகிரி மலையில் உள்ள சந்தன மகாலிங்கத்தையும், சுந்தரமகாலிங்கத்தையும் தரிசிக்க வருகின்றவர்களுக்கு வழித்துணையாக வருவது கருப்புதான். பாதை மாறிச் சென்று விடாதபடி தடுப்பது மட்டும் கருப்பசாமியின் நோக்கமல்ல. மலை முழுக்க எண்ணிறந்த சித்த புருஷர்கள் நிஷ்டையில் இருக்கிறார்கள். பாதை மாறிச் செல்பவர்களால் அவர்களது நிஷ்டைக்கு இடையூறு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதும் கருப்பச்சாமியின் அடிநோக்கமாகும்.

இதெல்லாம் மிக நுட்பமான உண்மைகள். இதை அனுபவத்தால் மட்டுமே அறிய முடியும்.

சதுரகிரி மலையில் சிறு கல்கூட ஒரு சித்தரின் ஜீவ உடலை தாங்கிக் கொண்டிருக்கும் வாய்ப்புகள் மிக அதிகம் நடந்து செல்லும் பாதையைத் தவிர்த்து ஏனைய இடங்களில் கவனமாகத்தான் செல்ல வேண்டும். இரைந்து பேசுவது, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்கிற எல்லாம் நம்மை அங்கே பாவத்தில் பிடித்து தள்ளிவிடும்.

குறிப்பாக சதுரகிரி மலையில் தாவரங்களாகிய செடி, கொடி மரங்களிடம் நாம் மிகுந்த பக்தியோடு நடந்து

கொள்ள வேண்டும். மரக்கிளையை ஒடிப்பது, இலைகளை பறித்துப் போடுவது, மரங்களின் மேல் ஏறி ஆடுவது போன்ற செயல்பாடுகள் எல்லாமே பெரும்பாவத்தில் ஆழ்த்தி விடும். ஏனென்றால், ஒவ்வொரு மரமுமே கூட அங்கே ஒரு சித்த புருஷரின் ஜீவ சமாதியில் தோன்றியிருக்கும் வாய்ப்புகள் அதிகம். அந்த நாளில் சித்த முக்திக்கு முயன்ற பலர் விதிவசத்தால் உயிர் இழக்கவும் அவர்களைப் புதைத்த இடத்தின் மேல் ஏதாவது ஒரு விருட்சத்தை நட்டு வைப்பார்கள். அவைகள் புதைக்கப் பட்ட திருமேனியையே எருவாகக் கொண்டு வளர்ந்துமிருக்கும். எனவே, சதுரகிரி மலைத்தலத்தில் நடக்கையில் மிகுந்த தன்னடக்கமும், பயமும், பக்தியும் பெரிதும் அவசியம்.

**நிலவும் பதினெண் சித்தரெனும் நீர்மைக் கும்பன் முதலாகக்**

**குலவும் பெருமைக் கோரக்கர் ஈறாக் குறிக்குன்**

**தவமுனிவர் உலவும் மேன்மை தனைக் கொண்டே உமைதன் பாகன்**

**கலவும் சதுரகிரிப் பெருமை கனிய உரைப்போம் காசினிக்கே!"**

என்கிற பாடலானது சதுரகிரிமலை என்பது எப்படிப்பட்ட பெருமையை உடையது என்பதைக் கூறுகிறது. சதுரகிரிக்கு இன்னொரு பொருள் சதுர் என்றால் நான்கு என்று பொருள். அதாவது நான்கு திசையிலும் நான்கு கிரிகள் அதாவது மலையுடன் உள்ள ஒரு தலம் என்பது

மட்டுமல்ல. நான்கு வேதங்களும் தான் இங்கே நான்கு மலைகளாகியுள்ளது என்றும் ஒரு பொருள் கூறுவர்.

உலகில் மிக உயர்ந்த சிகரம் என்று கருதப்படும் மேரு மலையை விடவும் இது உன்னதமான மலைத்தலம் என்றும் இதன் தல புராணத்தில் பார்க்கிறோம். சிவம். சக்தி, நாதம், விந்து ஆகிய நான்கும்கூட இங்கே நான்கு மலைக்குள் கருப்பொருளாய் பொதிந்து கிடக்கிறது என்பதும் பலர் கருத்து. குறிப்பாக இந்த உலகத்தில் உள்ள வனங்கள் அவ்வளவிலும் வேறு எங்கும் கிடைக்காத `அழுகணி, உதிர வேங்கை, கருநொச்சி, கருங்கொடி வேலி, சையாந்த கரை, கல்தாமரை, கானற்பலா, சாயா விருஷம், தில்லை விருஷம் சஞ்ஜீவி` என்கிற விருட்சங்கள் இங்கே மட்டும் தான் கிடைக்கும்.

இதற்கு இங்குள்ள மண்வாகு மட்டுமல்ல பூமிப் பந்தின் மேல் இது அமைந்துள்ள விதமும் இதன் மேல் சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்கும் விதமுமே காரணமாகும்.

விருட்சங்களோடு இங்குள்ள தீர்த்தங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். வெண்ணாவல் ஊற்று, காலாங்கிநாதர் அமைத்த தைலக்கிணறு, மாவூற்று, அத்தி ஊற்று என்று இங்கே நீர் நிலைகளுக்கும் பஞ்சமே இல்லை. இங்குள்ள ஒவ்வொரு நீர்நிலைக்கும் ஒரு குணம் இருக்கிறது. அதை அறிந்து கொண்டு அதற்கேற்ப அதை பயன்படுத்திக் கொள்வதில்தான் சிறப்பும் உள்ளது.

அந்த மலைத்தலத்தில் தாணிப்பாறையில் இருந்து நடக்கத் தொடங்கிவிட்ட ராமைய்யாவுக்கு சதுரகிரிமலை என்பது இறைவனின் கோட்டை

என்பதும் அது ஒரு சித்தர்களின் ராஜ்ஜியம் என்பதும் மட்டும்தான் தெரியும். வேறு சிறப்புகள் எதுவும் தெரியாது. இருந்தாலும் அதை தெரிந்து கொள்ளவும், போகரை தரிசனம் செய்துவிட வேண்டும் என்று எண்ணியுமே அவர் நடையை தொடர்ந்தார். ராமைய்யாவோடு வந்த அவரது சகோதரி மகன் குடித்துவிட்டு கிடந்ததால் அவர் அவனை அழைத்துக் கொண்டு தொடர்ந்து செல்ல விரும்பவில்லை. ராமைய்யாவுக்கு மட்டுமே நிறைய இறையனுபவம் ஏற்படவேண்டும் என்கிற விதியமைப்பு இருந்ததால் விதியே அந்த சிகாமணியை மேற்கொண்டு தொடர முடியாமல் செய்து விட்டது.

அவருக்கு கருப்பு நாயும் காவலாக செல்லத் தொடங்கியது. ராமைய்யாவுக்கு சோதனை வடிவில் அதிசயங்களும் காத்துக் கொண்டிருந்தன. போகிற வழியில் ஒரு மலைவாசி போல தோற்றமளித்த ஒருவர் ராமைய்யாவோடு தொற்றிக் கொண்டார். ராமைய்யாவுக்கும் ஒரு பேச்சுத் துணை கிட்டியதுபோல் இருந்தது. உண்மையில் அந்த மலைவாசிக்கு நோக்கம் வேறாக இருந்தது.

சாதாரணமாக சதுரகிரி மலைக்கு அமாவாசை, பவுர்ணமி போன்ற நாட்களில்தான் ஜனக்கூட்டம் அதிகம் வரும். மற்ற நாட்களில் மலைப்பளியர்கள்தான் அந்த பாதையில் நடந்து செல்வார்கள். மலையில் பிறந்து மலையிலேயே வளர்ந்து வரும் அவர்களுக்கு சித்தர்கள் பற்றி பெரிய ஞானமும் கிடையாது; அஞ்ஞானமும் கிடையாது.

அவர்கள் வரையில் சித்த புருஷர்களும் பெரும் கணிவோடும், நட்போடும்தான் நடந்து கொள்வார்கள்.

அவர்களிடம், அவர்களில் ஒருவராக பழகும் சித்தர்களும் உண்டு. எந்த நிலையிலும் இந்த உலகம் மூக்கின் மேல் விரலை வைக்கும் சாகஸங்களை செய்து காட்டுவது, வித்தைகள் புரிவது என்பதெல்லாம் கிடையவே கிடையாது.

எனவே, சித்தர்களை தேடி வரும் மனிதர்களை பளியர்கள் ஆச்சரியமாகவே பார்த்தார்கள்.

'சாமியப் பாக்கனுமாக்கும்... சாமிங்ககிட்ட என்ன இருக்குன்னு பாக்க வர்றீங்க.அவங்களும் எங்களை மாதிரிதான்!" என்பதே அவர்கள் பதில்

ராமைய்யாவுடன் நடக்கும் அந்த மலைவாசிப் பளியனுக்கும் அப்படித்தான் ஒரு எண்ணம் இருந்தது. தாணிப்பாறையில் இருந்து 15 மைல் தூரம் மலைப்பாதையிலேயே பயணிப்பது என்பதும் சாதாரண ஒரு விஷயம் இல்லை. ஆனாலும் சில பளியர்கள் அந்த தூரத்தை மூன்று மணிநேரத்தில் எல்லாம் கடந்து விடுவார்கள். சில வயோதிகர்களுக்கோ மூன்று நாட்கள் எல்லாம் ஆகும்.

அந்த பளியனிடமும் நிறையவே தெம்பு இருந்தது. அந்த அளவு தெம்பு ராமைய்யாவிடம் இல்லை என்றுதான் தோன்றியது.

"எட்டி நடங்க சாமி. இப்படி மொள்ள நடந்தா எப்பப் போய்ச் சேர்றதாம்.?" என்று தூண்டிவிட்ட அந்த, நபர் பேச்சு கொடுத்துக் கொண்டே நடையை தொடர்ந்:தான்.

"உனக்கென்னப்பா நீ இந்த மலையிலேயே பிறந்து வளர்ந்த நபர். இந்த மலைக் காத்துலயும் ஜீவசக்தி அதிகம். அதை சுவாசிக்கற உன் ரத்த ஓட்டத்துலையும்

பிராண சக்தி அதிமாகவே இருக்கும். நான் நகரத்தவன். இப்படித்தான் நடக்க முடியும்…” என்றார் ராமைய்யா.

“சரி சாமி. அமாவாசையும் இல்லாத பவுர்ணமியும் இல்லாத இந்த நடுநாள்ளயா சாமி கும்பிட வருவீங்க?"

"ஏம்ப்பாவரக் கூடாதா? "

"அதுக்கில்ல. நாலு பேர் வர்ற சமயத்துல வந்தா கடை கண்ணி இருக்கும். அன்னதானமெல்லாம்கூட பண்ணுவாங்க, பசியாறலாம். இப்ப வந்தா உங்களுக்கு என்ன கிடைக்கும்?”.

“நான் அதையெல்லாம் எதைப் பற்றியும் யோசிக்கலப்பா. போகர் சாமிய மனசுல நினைச்சுக்கிட்டு கிளம்பி வந்துட்டேன். அவர் பார்த்துப்பாருன்னு நம்பறேன்.”

"அடப் போங்க சாமி. இந்த மாதிரி எத்தினி பேர்தான் வருவீங்க?"

"ஏம்ப்பா அப்படிகேக்கறீங்க?"

“உங்களுக்கு ஊருக்குள்ள எதாச்சும் சிக்கல்னா இங்க கிளம்பி வந்துட்றதா. இங்க நீங்க நினைக்கிற மாதிரி எனக்கு தெரிஞ்சு ஒரு சாமியும் இல்லை"

"உனக்கு ரொம்ப தெரியுமோ?”

“எனக்கு தெரியாமத்தானா. நான்தான் இங்கேயே கிடக்கறவன் ஆச்சே?”

“முடிவா நீ என்னதான் சொல்றே?”

“பேசாம திரும்பிப் போங்க... அமாவாசை, பவுர்ணமில வாங்க. அப்பகூட தனியா வராதீங்க. நாலு பேரோட வாங்க ஒரு காலத்துல இங்க நிறைய சாமிங்க திரிஞ்சாங்க ஆனா இப்ப ஆசாமிங்கதான் இருக்காங்க முடிவெட்ட காசில்லாத கபோதியெல்லாம் சித்தன்னு சொல்லிக்கிட்டு அங்கங்க உக்காந்துகிட்டிருக்காங்க. சிக்குனா நல்லா ஏமாத்திடுவாங்க."

- அந்த மலைப்பளியன் பேச்சு ராமய்யாவை நிறையவே யோசிக்க வைத்தது. இவன் சொல்வதுதான் உண்மையோ என்கிற ஒரு எண்ணமும் உள் ஓடியது. ஆனால், முன்னே ஓடிக்கொண்டிருந்த அந்த கருப்பு நாய் ஒரு பாறை மேல் நின்று பார்த்துவிட்டு குரைக்கத் தொடங்கியது. அவர்கள் நடக்கத் தொடங்கியதில் இருந்தே முன் ஓடியபடிதான் இருந்தது. இப்போது அது குரைக்கவும் அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று ராமைய்யாவுக்கும் தோன்றியது.

அந்த நாய் ஏறி நின்றபடி இருக்கும் பாறை மேல் ராமைய்யாவும் ஏறி நின்றார். அங்கிருந்து அவருக்கு அபூர்வ காட்சி தென்பட்டது. வானில் மேகக் கூட்டங்களின் தோற்றமே லிங்க வடிவிலும் ஒரு லிங்க ரூபத்துக்கு பின்னாலே சூரியன் மறைந்த நிலையில் ஒளிப் பிழம்பாய் ஜொலித்துக் கொண்டிருந்தான். மேகச் சித்திரங்கள் இறை வடிவமாய் தெரிவது என்பது மிக அபூர்வமான ஒரு விஷயம்.

அதைக் காணக் கொடுத்து வைத்திருக்கவும் வேண்டும். ராமைய்யாவும் அதை பார்த்துப் பரவசப்பட்டவராக வணங்கித் திரும்பினார்.அந்த மலைப்பளியனைக் காணவில்லை. அவன் மாயமாக மறைந்து போனானா

இல்லை வேகமாக நடந்து கண்ணை விட்டே மறைந்து விட்டானா என்பது ராமைய்யாவுக்குப் புரியவில்லை.

மிகப் பெரிய அந்த மலை வெளியில் ராமைய்யாவும் அந்த நாயும் மட்டும்தான். பொழுதோ அந்தியை நோக்கி சரிந்து கொண்டிருந்தது. வெகு சீக்கிரம் இருட்டி விடும் சாத்தியமும் தெரிந்தது. ஆனால், அந்த நாயோ என் பின்னால் வா என்கிற மாதிரி திரும்பவும் அங்கிருந்து ஒட ஆரம்பித்தது. ராமைய்யாவும் மேகச் சித்திரத்தை பார்த்து திரும்ப வணங்கி விட்டு மீண்டும் மன உறுதியோடு அந்த நாயை பின்தொடரத் தொடங்கினார்.

## 12

சித்த வைத்தியர் ராமைய்யாவுக்கு சதுரகிரி எனும் அந்த மலைத்தலத்தில் நடக்கின்ற விஷயங்கள் பெரும் புதிராகத் தோன்றியது.

உடன் வந்த பளியனைக் காணவில்லை.

வானிலோ மேகலிங்க தரிசனம்!

நாய் ஒன்றோ, வா நான் வழி காட்டுகிறேன் என்பது போல முன் சென்றபடியே இருக்கிறது. ராமைய்யாவும் மனதில் தெம்பை வரவழைத்துக் கொண்டு அந்த நாயின் பின்னாலேயே செல்லத் தொடங்கினார்.

கரடு முரடான மலைப்பாதை - திண்டு திண்டான பாறைகள், இன்ன ஜாதி, இன்ன வகை என்று கண்டறிய முடியாதபடி முள்ளும் இலையுமாக தாவரங்கள், இண்டு இடுக்குகளில் புழு பூச்சிகள்... குறிப்பாக மலைப் பல்லிகளும், குட்டிச்சாரைகளும் நிறையவே கண்ணில் பட்டன பொழுதும் முடிந்து கொண்டிருந்தது.

அதிகபட்சம் பத்து பதினைந்து நிமிடங்களில் இருள் கவிழ்ந்து விடும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை மலைதான். ஒரு குடிசை கூட கண்ணில் படவில்லை. சுருக்கமாக சொல்வதானால் அந்த நெடிய மலைத்தலத்தில், தான் எங்கிருக்கிறோம் என்றே ராமைய்யாவால் அனுமானிக்க முடியவில்லை உணர்ச்சி வசப்பட்டும், அவசரப்பட்டும் அந்த மலைத்தலம் பற்றி சரியாக விளங்கிக் கொள்ளாமலும் ஒரு துணையும் இல்லாமலும் வந்தது தவறோ என்றும் அப்போதுதான் அவருக்கும் தோன்றிற்று.

இப்பொழுதில் என்ன தோன்றி என்ன பயன்? வந்த வழியே திரும்பிச் சென்றாலும் பல மைல் தூரம் செல்ல வேண்டும். அதற்கு வருவது வரட்டும் என்று முன்னோக்கி செல்வதுதான் சரி என்றும் தோன்றிற்று. முன் சென்றபடி இருந்த நாயும் கூட சீக்கிரமா என்னை பின் தொடர்ந்து வாய்யா. என்கிற மாதிரி பார்க்க அதை பின் தொடரத் தொடங்கினார்.

அவ்வேளையில் அந்த மலையிடமும் ஒரு பெரும் மாற்றம்.சிலுசிலுவென்ற பெருங்காற்றுடன் வானில் மேகக் கூட்டம் கிழக்கு திசையில் இருந்த அணி திரண்டு வந்து கொண்டிருந்தது. ஆயிரமாயிரம் யானைகள் ஒன்றின் மேல் ஒன்று உரசிக் கொண்டும் பிளிறிக் கொண்டும் வருவது போல் இருந்தது அக்காட்சி!

ஐயோ மழை வந்தால் எங்கே ஒதுங்குவது? ஒன்றுமே புரியவில்லை ராமைய்யாவுக்கு நாயோ குரைக்க ஆரம்பித்து விட்டது. குரைத்தபடியே இரு பெரும் பாறைகளுக்கு இடையில உள்ள ஒரு சிறு இடை வெளிக்குள் புகுந்தும் ஓடியது. அதன் உடம்புக்கு

அதனுள் புகுந்து ஒடுவது சாத்தியம். அது அந்தப் பக்கமாக எங்கே போகிறது என்றும் தெரியவில்லை. அப்படி இருக்க ராமைய்யாவும் அந்த பாறை இடைவெளியில் புகுந்து மறுபக்கம் செல்ல முயன்றார். முதலில் துளியும் சாத்தியமில்லை என்றுதான் தோன்றிற்று. ஆனால் ஒரு ஆச்சரியம் போல அந்த பெரும் பாறைகள் இரண்டுமே அவர் நுழைவதற்காக சற்று பின்னோக்கி அசைந்து கொடுத்தது போல அவரது அடுத்த முயற்சியில் அவரது உடம்பு உள் நுழைந்து விட்டது.உள் நுழைந்து மறுபக்கம் சென்ற பிறகு தான் அவருக்கே தான் அந்த துவாரத்துக்குள் நுழைந்தது ஒரு அதிசயச் செயலாகத் தோன்றிற்று.

அவருக்கு சில அடிதுரத்தில் நின்று கொண்டிருந்த அந்தநாய் ஒரு குகை வாசலில் நிற்பது நன்றாகத் தெரிந்தது. மேலே வானில் கூடத் தொடங்கி விட்ட மேகங்களும் நல்ல பருமனான துளிகளுடன் மழையை பெய்விக்கத் தொடங்கி விட்டது.

ராமைய்யா ஒடிச் சென்று அந்த குகைக்குள் புகுந்து கொண்டார். தலைக்கு மேல் குடை போல பாறை கீழேயும் பாறைச் சரிவு.அதில் அப்பி எடுக்கும் சிலுசிலுப்பு வேறு!

ஒரு ஆச்சரியம் போல அதுவரை வந்து வழி காட்டிய நாயை அதன் பின் அவரால் பார்க்க முடியவில்லை. அது அந்த துவாரம் வழியாக வெளியேறி விட்டதோ என்றுதான் கருதத் தோன்றியது.

மழையும் ராட்சஸமாக கொட்டு கொட்டு என்று கொட்டியதில் ஒரு பெரும் இடிச் சப்தம் வேறு! அந்த இடியும்கூட பாறைத் துவாரம் வழியாக பார்க்க முடிந்த

தூரத்தில் ஒரு மரத்தின் மேல் விழுந்து அந்த மரமே பற்றி எரியத் தொடங்கி விட்டது. மழை நீருக்கு நடுவில் அது அணையாமல் எரிவது ராமைய்யாவுக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

ஒரு வழியாக இரண்டு மணி நேரம் வரை பெய்த மழையும் மெல்ல அடங்கிற்று. குளிரில் ராமைய்யா புழு போல சுருண்டு விட்டிருந்தார். அந்த குகை மட்டும் இல்லாதிருந்தால் நிச்சயம் அந்த மழைக்கு அவருக்கு எது வேண்டுமானாலும் நிகழ்ந்திருக்கும். அவ்வேளையில் குகையை அடையாளம் காட்டிய அந்த நாயை அப்போது அவர் கடவுளாகத்தான் கருதினார்.

அப்போது ஒரு அதிசயக் காட்சியும் அவருக்கு தெரிய ஆரம்பித்தது. இடி விழுந்து பற்றி எரிந்து கொண்டிருந்த மரம் லேசான நெருப்புடன் புகைந்தபடியே இருக்க அந்த மரத்தை சுற்றி ஒரு ஐந்தாறு சித்த சன்னியாசிகள் உடம்பில் ஒட்டுத் துணியும் இன்றி கூடியிருந்தனர்.

கைகளை பரபரவென்று தேய்த்துக் கொண்டு எரிகின்ற தீயின் மேல் கைகளைக் கொண்டு சென்றும் அவர்கள் குளிர் காய்வதைப் பார்த்த ராமைய்யாவுக்கு இருண்ட அந்த வேளையில் மனிதத்துணை கிடைத்து விட்ட மகிழ்ச்சி ஒருபுறம், அவர்கள் சித்தர்களாக இருப்பது இன்னொரு புறம். உடனேயே எழுந்து அவர்களை அடையும் விருப்பமுடன் அந்த பாறை துவாரம் அருகே சென்றவர் எவ்வளவு முயன்றும் அது வழியாக மறுபக்கம் செல்ல முடியவில்லை.

`ஐயோ இது வழியாக உள்ளே வந்தேனே. இப்போது எதனால் வெளியேற முடியவில்லை. இது என்ன விந்தை?' என்று அவர் மனது கிடந்து துடித்தது.

ஒரு நூறு மீட்டர் தொலைவில் எரியும் மரத்தை சுற்றிச் சுற்றி வந்து குளிர் காய்ந்த சித்தர்களை நோக்கி ராமைய்யா கத்தவும் செய்தார்.

‘சாமி ஈஈ...! கொஞ்சம் இப்படி பாருங்க. சாமி ஈ ஈ.... கொஞ்சம் என்கிட்ட வாங்க... சாமிங்களா...'

- என்று அவர் எவ்வளவு கத்தியும் அவர்கள் திரும்பிக் கூட பார்க்கவில்லை. செவிடர்கள் போலவே அவர்கள் நடந்து கொண்டது ஏன் என்றும் ராமைய்யாவுக்கு புரியவில்லை. மனது வெறுத்துப் போய் வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்த்தால் குகை இருட்டில் எங்கே எது இருக்கிறது என்றே தெரியவில்லை.

அழுகையாகக் கூட வந்தது.

குளிரும் வாட்டி எடுத்தது. அவருக்குள் புறப்படும் போது இருந்த வைராக்கியமும், மன உறுதியும் கண்ணாடி நொறுங்கியது போல நொறுங்கி குலுங்கி குலுங்கி அழத் தொடங்கி விட்டார்.

சித்தர்கள் இந்த அளவுக்கா கருணையற்றவர்கள் என்கிற கேள்வியும் அவருக்குள் முதல் தடவையாக ஓடிட ஆரம்பித்தது. குகைச் சுவரின் ஒரு மூலையில் போய் ஒரு மரவட்டை புழு போல சுருண்டு படுத்து விட்டார்.

அந்த இரவு வேளையில் அங்கங்கே மிருகங்களின் அலறல் சப்தம். கூட்டம் சுட்டமாக யானைகள் வந்து கத்துவது போல, மிளாமான்கள் வாயைப் பிளந்து கொண்டு ஒரு தினுசாகக் கத்துவது போலவெல்லாம் சப்தம்!

ஒரு விஷயம் மட்டும் அவர் வரையில் உறுதியாக இருந்தது.அந்த குகைக்குள் எந்த விதமான மிருகமும் வந்து தன்னைத்துன்புறுத்தாது என்பதுதான் அது! இப்படியே இரவுப் பொழுது கழிந்து பொழுதும் விடிந்தது. சுளிர் என்கிற சூரிய கிரகணங்கள் குகை வாயிலில் விழுந்து உள்ளேயும் பட்டுத் தெறித்தது. கண்களை கசக்கிக் கொண்டு எழுந்த ராமைய்யா முதல் காரியமாக அங்கிருந்து வெளியேறத்தான் பெரிதும் முயன்றார்.திரும்பவும் அந்த துவாரம் அருகே சென்றவர் வெளியே செல்ல எவ்வளவோ முயன்றார். அவருக்கே நன்றாக தெரிந்தது. ஒரு கை மட்டும் நுழைய முடிந்த இடுக்குக்குள் ஒருவரால் எப்படி முழு உடம்பையும் உள் நுழைக்க முடியும்?

ஒரே பதைப்பாக இருந்தது.நல்ல வேளையாக எதிரே எரிந்து அடங்கியிருந்த மரத்தின் அருகே கறுப்பாக போர்வை சுற்றிக் கொண்டு சில மலைப் பளியர்கள் வந்து கை, கால்களை நீட்டி குளிர் காயத் தொடங்கியிருந்தனர்.

"ஏய்ய்...!" - அவர்களைக் கூவி அழைத்தார் ராமைய்யா. அவர்களும் திரும்பிப் பார்த்தனர். நெருங்கியும் வந்தனர். அவர்கள் உதடுகளில் சுரைத்தண்டு பீடி போல உட்கார்ந்திருந்தது விரல் பருமனுக்கு இருக்கும் சுரைக்கொடி காய்ந்துவிட்ட நிலையில் அதை ஒரு சிகரெட் அளவு நீளத்துக்கு ஒடித்து வைத்துக் கொண்டு சிகரெட் போலவே பற்றவும் வைத்துக் கொண்டு அதன் மூலம் புகை பிடிக்க முடியும். சற்று காரமான புகை அது. மிக ஜாக்கிரதையாக உறிஞ்சி வெளிவிடத் தெரியா விட்டால் மார்பெல்லாம் தீப்பட்டது போல எரியத் தொடங்கி கண்களிலும் எரிச்சல் ஏற்படும்.

அதன் பின் ஏற்படும் இருமல் அடங்கிட வெகுநேரம் ஆகும். அதையே நயமாக புகைத்தால் கபம் விட்டுப் போகும். சோம்பேறித் தனமாக இருந்தால் சுறுசுறுப்பாக உடம்பை முறுக்கேற்றி விடும்.

மலைவாசிகளுக்கு பீடியும், சிகரெட்டும் சுரைத்தண்டுதான். ராமைய்யாவை நெருங்கிய அவர்களிடம் இருந்தும் சுரைத்தண்டு புகை.அவர்கள் ஆச்சரியமாகவும், வேடிக்கையாகவும் இரு விதங்களிலும் ராமைய்யாவை பார்த்தனர்.

“ஐயா.. என்னய்யா பாக்கறிங்க? நான் வெளிய வரணும் கொஞ்சம் உதவி செய்யுங்கைய்யா.” என்றார் ராமைய்யாவும்.

"ஆமா எப்படி உள்ள போனிங்க. அதுவே எங்களுக்கு புரியலியே?’ என்றனர்.

“ஒரு நாய் இதுக்குள்ள நுழைஞ்சு வழி காட்டுச்சு. நானும் நுழைஞ்சு பார்த்தேன். இருட்டுல அப்ப எனக்கு பெருசா எதுவும் தெரியலை. ஆனா, இப்ப பகல் வெளிச்சத்துல எனக்கே நான் எப்படிநுழைஞ்சேங்கறது ஆச்சரியமாத்தான் இருக்கு...”

"நாய் வழிகாட்டி வந்தீங்களா.. அப்ப இது கருப்பச் சாமி வேலை.”

"கருப்பசாமியா?”

"ஆமாம் பிலாவடி கருப்புதான் உங்களுக்கு வழி காட்டியிருக்குது. அதுசரி தனியாவா வந்தீங்க?"

"ஆமாங்க..."

‘சாமி கும்புடனும்னா அமாவாசை பவுர்ணமிக்குல்ல வரணும்?”

"நான் சாமி கும்புட மட்டும் வரலை.நான் ஒரு சித்த வைத்தியன்.அதனால சித்தர் சாமிங்கள- குறிப்பா போகர் சாமிய எப்படியாவது பாத்துடனுங்கிற எண்ணத்துல வந்துட்டேன்.”

“சித்தர் சாமிங்கள பாக்கவா… நாங்க இதே மலைக் காட்டுல திரியறவங்க ஒரு சாமிங்களகூட பாத்ததில்ல. உங்கள மாதிரி இப்படி நிறைய பேர் ஏதோ ஒரு நம்பிக்கைல கிளம்பி வந்துடுறீங்க வேடிக்கைதான் சாமியோவ்.”

அவர்கள் சுரை பீடி பிடித்தபடி சிரிக்கவும் செய்தனர். அவர்கள் கேலி செய்வது போலவும் இருந்தது. ஆழம் பார்க்கிற மாதிரியும்கூட இருந்தது.

“நீங்க நெஜமாவா சொல்றீங்க?"

“உங்ககிட்ட நாங்க எதுக்கு பொய் சொல்லணும்?”

"அப்ப நான் ராத்திரி இந்த எரிஞ்சுக்கிட்டிருக்கற மரத்து கிட்ட நிர்வாணமா சில சித்தருங்கள பார்த்தேனே.”

“ஐய்ய அவங்க சித்தருங்களா இருக்க மாட்டாங்க. இந்த மலைல பிச்சைக்காரங்க ஜாஸ்தியா போயிட்டாங்க. அவங்கள்ள யாராச்சும் இருக்கும்.”

“சரிங்கைய்யா நான் வெளிய வர கொஞ்சம் உதவி செய்யுங்களேன்.”

“எப்படி செய்யறது. இந்த பாறைகள யானைங்க வந்தாலும் தள்ள முடியாது. நாங்க எந்த மூலைக்கு"

"ஐயா. ராத்திரி நான் இது வழியாதான் உள்ள வந்தேன்.அப்பபாறை எப்படி நகர்ந்ததுன்னே தெரியல."

"அப்ப அதே மாதிரி வரப் பாருங்க. இந்த மாதிரி அடிக்கடி பாக்கறோம். எங்களுக்கு தெரிஞ்சு ரொம்ப பேர் செத்துப் போய் இப்பவும் பல இடங்கள்ள எலும்புக் கூடுங்க கிடக்குது. உங்கள அந்த மகாலிங்கமா பாத்து காப்பாத்துனாதான் உண்டு..."

- அவர்கள் பேசிவிட்டு திரும்பிச் செல்லவும் தொடங்கி விட்டனர். ராமைய்யாவுக்குள் ஆத்திரமும், அழுகையும் ஒருசேர பீறிட்டது.அதே வேகத்துடன் அந்த துவாரத்துக்குள் தலையை நுழைக்கப் பார்த்து கன்னங்கள் சிராய்ப்பு கண்டதுதான் மிச்சம். பாறையை தள்ள முயன்று மூச்சும் வாங்கியது. பசியும், தாகமும் வேறு சேர்ந்து கொண்டது.

அந்த மலைப்பளியர்களும் அவர் கண்களைவிட்டே மறைந்தும் விட்டனர். என்ன செய்வதென்றே தெரியாத் குழப்பத்தோடு திரும்பவும் குகை நிழலில் போய் அமர்ந்தார். பளியன் ஒருவன், `இந்த மகாலிங்கமா பார்த்து காப்பாத்துனாதான் உண்டு` என்று கூறியது காதுகளில் ஒலிக்கவும் அவர் கையிரண்டும் கூம்பத் தொடங்கின. உதடுகள் இரண்டும் கூடிக் கூடி பிரிந்தபடி `சுந்தர மகா லிங்காய நமக... சந்தன மகாலிங்காய நமக...` என்று திரும்பத் திரும்ப உச்சரிக்கத் தொடங்கியது. அதே சமயம் வெளியே புறத்தில் நாய் குரைக்கும் சப்தம். ஒருவேளை முதல் நாள் வழிகாட்டி இந்த குகையில் சிக்க விட்ட நாயோ? ராமைய்யா வேகமாக எழுந்து பாறை இடுக்கு வழியாக வெளியே பார்த்தார் அதே நாய்தான்!

# 13

குகைக்கு வெளியே கேட்ட நாயின் குரைப்புச் சப்தம் ராமைய்யாவை ஒரு புதுத் தெம்புக்குள் பிடித்துத் தள்ளியது. பாறைத் துவாரம் வழியாக பார்த்த போது குரைத்துக் கொண்டு வருவது நாய் மட்டுமல்ல, கூடவே ஒரு சித்தரும் வந்தபடி இருந்தார்.

வெடவெடவென்று ஒல்லியான சரீரம்!

உடம்பின் எடைக்குச் சமமாக தலையில் சடை விழுந்துவிட்ட முடிக்கற்றை! உடம்பில் பொட்டுத் துணி இல்லை, ஆனாலும் நிர்வாணம் முழுவதாக தெரியாதபடி முகத்தாடியும் பின் சடையும் இடுப்பைக் கடந்து வளர்ந்திருந்தது.

அவர் நடையில் ஒரு அசாத்ய வேகம்.

காலில் செருப்பும் இல்லை - ஆனால் கல், முள் எதுவும் என்னை எதுவும் செய்ய முடியாது என்பது போல ஒரு உறுதியான தன்மை. வந்தவர் பாறை இடுக்கருகே வந்தார். கதவைத் தள்ளும் பாவனையில் பாறையைத் தொட்டு தள்ளவும் ஒரு அடி இடைவெளி அங்கே உருவாயிற்று. அதனுள் பாதி உடம்பை நுழைத்துக் கொண்டு திரும்பியவர், நாயைப் பார்த்து,"கருப்பா நீ போகலாம்!" என்றார். அதுவும் திரும்பிப் போகத் தொடங்கி விட்டது. அவ்வளவையும் பார்த்தபடி இருந்த ராமைய்யாவுக்குள் ஒரு பிரமிப்பு!

அவர் திரும்பவும் தான் நுழைந்த மலைப்பாறையை பார்த்த போது அதில் ஒரு கை மட்டுமே நுழைய முடிந்த அளவுக்கு பழைய அளவிலான இடைவெளி!

உள்ளே நுழைந்த சித்தரோ ராமைய்யாவை முறைத்துப் பார்த்தார். பின் ஆரம்பமானது பேச்சு

"ஆரப்பா நீ.. என் அரண்மனைல (குகையைத்தான் சொல்கிறார்) உனக்கென்ன வேலை?"

"சாமி என் பேர் ராமைய்யா. நான் ஒரு சித்த வைத்திய குடும்பத்துல இருந்து வந்துருக்கற ஒரு வைத்தியன். குஷ்டரோகத்துக்கு மருந்து தேடி இந்த மலைக்கு வந்துருக்கேன். அப்படியே எங்க குல தெய்வமா நாங்க கும்புட்டுக்கிட்டு வர்ற போக மகரிஷியை தரிசனம் செய்யணும்னும் ஒரு ஆசை"

“போகனையா?”

"ஆமாம் சாமி.”

“அவன் இந்த மலைல இருக்கறதா உனக்கு யார் சொன்னது?”

“என்ன சாமி அப்படி சொல்லிட்டீங்க. இந்த சதுரகிரி மலை போகர் மட்டுமில்ல பதினெட்டு சித்தருங்களுமே இப்பவும் இருக்கறதா சொல்லிக்கிறாங்களே..?”

"எவன் சொன்னான்.” - இப்படி அவர் கேட்கும் போது அதில் ஒரு கோபம்.

“இப்படி கேட்டா எப்படி சாமி.நான் காதுல விழுந்ததை சொன்னேன். இன்னார்னு சொல்ல முடியாது.”

“உனக்கு அறிவிருக்கா.போகன் காலத்துக்கும் இப்ப நடக்கற காலத்துக்கும் எவ்வளவு இடைவெளி.? கிட்டத் தட்ட அறுநூறு, எழுநூறு வருசம் ஒடிப்போச்சேப்பா...?”

‘சாமி. சித்த சன்யாசிங்களை காலத்தை ஜெயிச்சவங்கன்னு சொல்வாங்களே”

“இதையும் உனக்கு யார் சொன்னது?”

“காதுல விழுந்ததுதான் சாமி.”

“காதுல கண்ட கழுதயும் உழும்.நம்பிடுவியா? நான் கூடதான் ஒரு சித்தன். ஆயிரம் வருசமா இந்த காட்டுலையே கிடக்கேன்னா நம்புவியா?”

“நான் நம்புவேன் சாமி.”

“என்ன நான் நம்புவேன். ஒரு முட்டாப் பயகூட எப்படின்னு கேள்வி கேப்பான். நீ, நான் நம்புவேன்னு சொல்றியேப்பா…”

"சாமி. எதுக்கு சாமி இப்படி என்னை ஆழம் பார்க்கறீங்க. நான் சின்ன புள்ள சாமி! என்னை விட்றுங்க…"

"போடா பைத்யகாரா. நான் எங்கடா உன்னை பிடிச்சு வெச்சுக்கிட்டு இருக்கேன். நீதாண்டா என் அரண்மனைல இருக்கே. ஆமா நீ எப்படி இங்கே வந்தே?”

“மழை வந்துச்சு ஒதுங்க இடம் தேடுனேன். அப்ப உங்க கூட வந்த நாய்தான் இந்த இடத்தை காட்டுனுச்சி இருட்டுல எப்படியோ வந்துட்டேன். ஆனா எப்படி வெளியேறதுன்னுதான் தெரியல… "

“வரத் தெரிஞ்சவனுக்கு போகத் தெரியலியாக்கும்.”

"சாமி. நீங்களே சொல்லுங்க... ஒரு கை நுழைய முடிஞ்ச இடைவெளிக்குள்ள ஒரு உடம்பு எப்படி சாமி நுழைய முடியும்? "

“என்ன கேட்டா? இது வழியா உள்ள வந்தது நீதானே?”

- அந்த சித்த சன்யாசி அலட்சியமாகத்தான் கேட்டார்.

“அதான் சாமி எனக்கும் தெரியல. நான் எப்படி வந்தேன்னு எனக்கே தெரியல. இப்ப நீங்க வந்த மாதிரிதான் வந்தேன். அப்ப நான் உள்ள நுழைய முயற்சி செய்தப்ப அந்த பாறை விலகின மாதிரி தெரிஞ்சிச்சு... இப்ப நான் எவ்வளவு தள்ள முயற்சி செய்தாலும் அது நகர மாட்டேங்குது. "

“அது எப்படிப்பா. வரும்போது அசைஞ்சு கொடுத்த பாறைக்கு போகும் போது மட்டும் அசைஞ்சு கொடுக்க தெரியலியாக்கும்"

"சாமி. என்னை சோதிக்காதீங்க. நான் உள்ளதை உள்ளபடி பேசறவன். இங்க என்னை சுத்தி என்னவெல்லாமோ நடந்துக்கிட்டிருக்குது. ஆனா அதுல பல விஷயங்கள் அறிவுக்கு எட்டாததாவே இருக்கு.”

“சரி. சரி. பேசினது போதும்? இது என் அரண்மனை. நீ இடத்தை காலி பண்ணு”

"சாமி. நீங்க யாருன்னு சொல்லலியே சாமி.”

“என்ன பாத்தா தெரியலியாக்கும்?”

"ஐயோ சாமி. உங்கள பாத்தா நீங்களும் ஒரு சித்த சன்யாசின்னு தெரியுது. நான் உங்க பேரை கேட்டேன்.”

“எனக்கு பேரெல்லாம் கிடையாதுப்பா, பேருன்னு ஒண்ணு எனக்கு வேண்டவும் வேண்டாம். அப்புறம் என் பேரைச் சொல்லிகிட்டு நீ ஊருக்குள்ள கூத்தடிக்க ஆரம்பிச்சிடுவே. இப்ப ரொம்ப பேர் அப்படிதானே பண்ணிக்கிட்டிருக்காங்க?"

"சாமி… நீங்க பேசறது எனக்கு புரியல…”

“ரொம்ப சந்தோஷம். புரியாதவங்களா நாங்க இருக்கற வரைதான் எங்களுக்கெல்லாமும் நல்லது. புரிஞ்சா தொலைஞ்சோம்.”

“இப்படி பேசினா எப்படி சாமி… உங்களை எல்லாம் புரிஞ்சு உங்க வழி நடந்தாதானே நாடு முன்னேறும்.”

“அட போப்பா நீ வேற. இப்ப எதுல நாடு முன்னேறல. அதான் காரு, ரயிலு, பஸ்சுன்னு பறக்கறீங்களே. அப்புறம் டெலிபோனு, சினிமா, டிவி பெட்டின்னு எதுல குறைஞ்சு போயிட்டீங்க?"

‘இதெல்லாம் இருந்தும் யாரும் பெருசா சந்தோஷமா இல்ல சாமி எப்பவும் எதாவது ஒரு கவலை, இல்லை வியாதின்னு சீரழிஞ்சிக்கிட்டுதானே இருக்கோம். இப்ப நான் வந்திருக்கிறதே கூட பாருங்க ஒரு ஜமீன்தாருக்காகதான். அரண்மனை மாதிரி வீடு, கார், தோட்டம், எஸ்டேட் எல்லாம் இருக்கு. ஆனாலும் குஷ்டரோகம் வந்துடுச்சி. எவ்வளவு பணம் இருந்து என்ன பிரயோஜனம்? மனுஷன் தவியாதவிக்கறாரு.”

“விதை ஒண்ணு போட்டா சுரை ஒண்ணா முளைக்கும்?”

“என்ன சாமி சொல்றீங்க?"

“எப்பவும் விதைக்கறதுதாம்ப்பா முளைக்கும். அவன் கர்மத்தை அவன் அனுபவிக்கறான். நீ யார் இடைல பூந்து அதை மாத்தறதுக்கு? "

“இப்படி சொன்னா எப்படி சாமி. சித்த வைத்தியம்கறதே ஒரு நிவாரணத்துக்குதானே? நோயை நீக்கறதுதானே வைத்தியனோட கடமை?”

“என்ன பெரிய கடமை. காசு வாங்காமலா நீ வைத்தியம் பாக்கறே?”

“வாஸ்தவம்தான் சாமி... எனக்கும் வயிறுன்னு ஒண்ணு இருக்கே?”

“இந்த காட்டுல மரம், செடி, கொடி எல்லாம் கூட தான் இருக்கு அதுக்கும்தான் வயிறு இருக்குது. அது எவ்வளவு காய், பழம்னு தருது. அது என்ன காசு வாங்கிகிட்டா தருது? இல்ல அப்படி தராததால அது வளராம செத்தா போயிடுது. அதுக்கும் சோறை அந்த பரமன் கொடுக்கறான்தானே?"

- அவரின் கேள்வி நியாயம் முன்னால் ராமைய்யாவும் மடங்கித்தான் போனார். இருந்தும் மரமும், மனிதனும் ஒன்றா? என்று கேள்வி எழும்பியது அதற்கும் அவர் பதில் கூறினார்.

“என்ன. மரமும் மனுஷனும் ஒண்ணான்னு கேக்கறியா? ஒண்ணு கிடையாதுதான். நம்மை எல்லாம் விட மரமும், செடியும் ரொம்பவே பெருசு இந்த காட்டுல ஒரு பலாமரம் இருக்குது. அதுல ராமனும், லட்சுமணனுமே பழம் பறிச்சு சாப்பிட்டுருக்காங்க. அத்தனை ஆயிரம் வருஷமா அது இருக்குது. ஒரு கல்லால மரம் ஒண்ணும் இருக்கு. அதுக்கு

அம்பதாயிரம் வருசக்கணக்கு சொல்லலாம். ஆனா எனக்கு நூத்தம்பது வருசம் கூட ஆகலை. அதுக்குள்ள உடம்புல சுருக்கம் விழுந்துடுச்சு. மிஞ்சிப் போனா இன்னும் ஒரு நூத்தம்பது வருஷம் நான் தாக்குப் பிடிக்கலாம் அவ்வளவுதான்!"

"சாமி ஈ... ஈ..."

"என்ன வாயப் பொளந்துட்டே சரி சரி நேரமாகுது பார். நானும் கொஞ்சம் அக்கடான்னு சவயோகத்துல கிடக்கணும். இந்த தடவை ஒரு ஆறு மாசத்துக்காவது எழாம கிடக்கணும்கறது என் எண்ணம். நீ இடத்தை காலி பண்ணு."

"நானும் ஒண்ணும் இந்த இடத்தை பிடிச்சுவெச்சுக்கல சாமி. போகத்தான் விரும்பறேன். ஆனா வழிதான் தெரியல"

"சரி சரி வா. பாறையை நான் தள்ளிப் பிடிக்கறேன். அப்ப நீ பூந்து வெளிய போயிடு."

"சந்தோசம் சாமி... ஆனா?"

"என்ன ஆனா... ஆவன்னா?"

"எனக்கு உதவி செய்யுங்க சாமி. நான் போக மகரிஷியை பாக்கணும்."

"என்னமோ சினிமாவுக்கு கூட்டிக்கிட்டு போய் காட்டுங்கற மாதிரி கேக்கறியே. நான்தான் சொன்னேனேப்பா. அப்படி எல்லாம் யாரும் இந்த காட்டுல கிடையாது! என்னைப் போல வாழப் பிடிக்காத, சாகவும் பிடிக்காத கிறுக்குச் சாமிங்கதான் இருக்கோம்

எங்களால எங்களையே பாத்துக்க முடியல. ஆகையால நீ வந்த வழியே ஊர் போய்ச் சேரு.

அப்புறம் குஷ்டமெல்லாம் வந்தா வந்ததுதான்! அனுபவிச்சுதான் அதை தீர்க்க முடியும். இப்பல்லாம் மூலிகைன்னு பெருசா எதுவும் இல்லை. உலகத்துலேயே மோசமான இனம் மனுஷ இனம்தான். அது தான் நல்லா இருக்கறதுக்காக ஆறு, குளம், மரம், மட்டை ஒண்ணை விடலை இந்த மலையையும் விடலை.ஏதோ நாங்கல்லாம் தப்பிப் பிழைச்சு சுத்திக்கிட்டிருக்கோம். நீ கிளம்பு. கிளம்பு!"

- பேசியபடி போய் பாறை இடுக்கு அருகே நின்று கொஞ்சம் போல வலு சேர்த்து தள்ளவும் அந்த இடைவெளி பெரிதாயிற்று. ஆனால் ராமைய்யா அதன் வழியே வெளியேறாமல் அந்த சித்தரையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்.

"எலேய்... நான் எவ்வளவு நேரம் மூச்சுக் கட்றது? போ வெளிய. திரும்பிப் போயிடு போகன் அகத்தியன்னு போகாத ஊருக்கு வழி தேடாதே. சந்தனம் கடத்தறவங்க, அப்புறம் உன் உயிரையும் கடத்திடப் போறாங்க."

- பாறையை பிடித்தபடி அவர் திரும்பவும் கொஞ்சம் சத்தம் போடவும் ராமைய்யா அரை மனதாக அந்த இடை வெளி வழியாக வெளியே சென்று திரும்பிப் பார்த்தார். பாறை திரும்ப மூடிக் கொண்டது. முன்பு இருந்த கை நுழையும் அளவு இடைவெளி கூட இம்முறை இல்லை.

ராமைய்யாவுக்குள் குழப்பமும், வருத்தமும் ஒரு சேர திரண்டது. திரும்பிய நிலையில் சில அடி தூரம் நடந்திருப்பார். எதிரே காக்கி உடுப்பில் இரண்டு வன இலாகா போலீஸ்காரர்கள் கையில் துப்பாக்கியுடன் தென்பட்டனர். ராமைய்யாவை மேலும், கீழும் பார்த்தனர்.

“யாருய்யா நீ?”

“நா.நான் ஒரு சித்த வைத்தியனுங்க மூலிகை தேடி இந்த மலைப் பக்கம் வந்தேங்க…"

"டிபார்ட்மென்ட்டுக்கு உன்னை தெரியுமா. காட்டுக்குள்ள அலையறதுக்கு பர்மிஷன் வாங்கியிருக்கியா?"

“நீங்க சொல்றதெல்லாம் எனக்கு புதுசா இருக்குங்களே.”

“சரிதான்… போய் முதல்ல ஆபீசர்கிட்ட பர்மிஷன் வாங்கு அப்புறம் இப்படி தனியால்லாம் வராதே. குறைஞ்சது நாலு பேராச்சும் வேணும். அவங்க பளியங்களா இருந்தாதான் நரியும், கரடியும் வரும்போது அடிபடாம தப்பிக்க முடியும். சுத்த விபரமில்லாத ஆளா இருக்கியே. ஆமா, அந்த துணிப்பையில என்னவெச்சிருக்கே"

“ஒண்ணுமில்லீங்க. ஒரு வேட்டிதுண்டு… கொஞ்சம் புகையிலை"

"புகையிலையா கஞ்சாவா? பொய் சொல்லாதே.”

"ஐயோ அப்படி எல்லாம் இல்ல சார். நீங்க வேணா பாருங்க"

-ராமைய்யா தன் துணிப்பையை அவர்கள் எதிரில் நீட்ட அவர்களும் வாங்கி உள்ளே பார்த்தனர். உள்ளே ஒரு பெரிய பாலிதீன் பொட்டலம்.அதனுள் நிஜமாலுமே கஞ்சாத்துள்!

ராமைய்யாவுக்கு பகீரென்றது. அது பெரும் மாயமாகவும் பட்டது.

## 14

ராமைய்யாவுக்கு கஞ்சாவை பார்க்கவும் தூக்கி வாரிப் போட்டது. வன இலாகா போலீஸ்க்கோ ஒரு குற்றவாளி வசமாக மாட்டிக் கொண்டது போல் ஒரு உணர்ச்சி. அந்த நொடியே ராமைய்யாவை அவர்கள் பார்த்த பார்வையில் ராமைய்யா ஒரு புழு போல் தன்னை உணர்ந்தார்.

“சார். சத்தியமா சொல்றேன் சார். இத பத்தி எனக்கு எதுவுமே தெரியாது. இது எப்படி இந்த பைக்குள்ள வந்ததுன்னும் தெரியாது சார்…”

“உனக்கே தெரியாம இந்த கஞ்சா உன் பைக்குள்ள வந்துடுச்சா. ஆமா இதுக்கு கால், கையெல்லாம் இருக்கா? உனக்கு தெரியாம இந்த பைக்குள்ள பூந்து ஒளிஞ்சிக்கறதுக்கு?"

“சார் திரும்பவும் சொல்றேன். எனக்கு கஞ்சா பழக்கமெல்லாம் கொஞ்சம்கூட கிடையாது. என்னை நம்புங்க"

“என்னத்த நம்பறது? கையும் களவுமா மாட்டிக்கிட்டு இருக்கே. நம்புங்கன்னா எதை வெச்சு நம்பறது?”

“சார்..." - ராமைய்யாவின் கண்ணிரண்டும் கலங்கி விட்டது. ஆனால், அவர்கள் அசரவில்லை.

“இந்த மலைல கிடக்கற வேலை வெட்டி இல்லாத சாமிங்களுக்கெல்லாம் நீதான் கஞ்சா சப்ளை பண்றியா?”

"ஐயோ சார்... நான் சித்த மருத்துவன். என் வைத்தியத்துல ஒரு மருந்துக்குகூட இதை நான் பயன் படுத்தினது இல்லை...”

"சரி.வளவளன்னு எதுக்கு பேச்சு? இந்த கஞ்சாவை வெச்சு உன்னை நாங்க போலீஸ்ல ஒப்படைச்சா குறைஞ்ச பட்சம் மூணு வருஷம் அதிகபட்சம் ஏழு வருஷம் தண்டனை கிடைக்கும். எங்களுக்கு கேஸ் போட்ற பவர் கிடையாது. இப்ப என்ன சொல்றே நீ?”

- ஒரு அதிகாரி உள்ளங்கையை தேய்த்தபடி மிரட்டலாக பார்த்தார். ராமைய்யாவுக்கு வெளிறிவிட்டது.

"வாயைத் திறந்து பேசுய்யா... என்ன சொல்ற நீ"

“நான் எந்த தப்பும் பண்ணலிங்க. அப்படி இருக்க, நான் சொல்ல என்னங்க இருக்கு"

“சரி... நீ பேசுனதையே பேசிக்கிட்டு இருக்கே.நட"

“ஐயா... தயவு செய்து என்னை விட்ருங்க. நான் மூலிகை தேடி வந்தவன். எந்த நேரத்துல புறப்பட்டேனோ தெரியல. புறப்பட்டதுல இருந்தே சிக்கலா இருக்குது.”

“தப்பு பண்ணா சிக்கலாதான் இருக்கும்?”

“அட என்னங்க நீங்க. நான் தப்பு பண்ணலேங்ககறேன்.”

"அப்ப இந்த கஞ்சா?”

“அது எப்படி வந்திச்சுன்னுதான் தெரியலியே!”

“சரி. நீ சித்த வைத்தியன்தானே?”

"அப்ப ஒண்ணு பண்ணு. இங்க பக்கத்துல ஒரு பாம்பு புத்து இருக்கு. அதுக்குள்ள நான் ஒரு தப்பும் பண்ணாதவன்னு சொல்லி கையை விடு. உன் பேச்சு சத்தியமான உண்மைன்னா அந்த சித்தர் சாமிங்க வந்து உன்னைக் காப்பாத்தட்டும்.”

"ஐயா…"

“என்ன ஐயா…. கொய்யா? சட்டுன்னு ஒரு பதிலைச் சொல்.”

"இது என்னங்க சோதனை.”

“பின்ன. உன்னை வேற எப்படி நாங்க நம்பறது?”

“நான் வேணா இந்த மகாலிங்கமலை, சந்தன மகாலிங்கம் மேல சத்தியம் பண்றேங்க.”

“பொய் சத்தியம் பண்ண எவ்வளவு நேரமாகிடப் போகுது? உனக்கெல்லாம் இந்த மாதிரி பரிசோதனைதான் சரி.”

- அவர்கள் பேச்சில் உறுதியாக நின்றனர். ராமைய்யாவும் சிறிது நேரம் திருதிருவென்று விழித்தபடி நின்றார். பிறகு அரை மனதாக, “சரிங்கய்யா. வாங்கய்யா இனி எனக்கு அந்த சித்தருங்கதான்துணை நிக்கனும்" என்றபடி அவர்களுடன் நடக்கத் தயாரானார்.

அவர்கள் முகத்தில் சட்டென்று ஒரு வியப்பு, ஒரு சின்னச் சிரிப்பும்கூட

"என்னங்க சிரிக்கிறீங்க?"

"உன்னைப் பார்த்துச் சிரிக்காம என்ன பண்றது? நாங்க ஒண்ணும் உன்னை ஆழம் பாக்க இப்படி சொல்லலை. சத்தியமாவே சொல்றோம்."

"சரிங்க. நானும் நிஜமாத்தான் சொன்னேன்."

"நல்லா யோசிச்சிக்க... சித்தர் சாமிங்க லேசுப்பட்டவங்க இல்ல. நீ கும்பிட்டுக்கிட்டு புத்துக்குள்ள கைய விடும்போதே ஓடி வந்து தடுக்கறதுக்கு."

"என்னை என்னதான் பண்ணச் சொல்றீங்க?"

"பேசாம திரும்பிப் போயிடு. இனி, இந்த மலைப் பக்கமே வராதே. உன்னை நாங்க போனாப் போகுதுன்னு மன்னிச்சு விட்டுட்றோம்."

"அப்படின்னா..?

"இனி உன்னை நாங்க இந்த மலைல எந்த இடத் துலையும் பாக்கக் கூடாது."

"சார் இது ரொம்ப அநியாயம் சார். இந்த மலை பொதுவானது.நான் தரிசனம் பண்ண வந்திருக்கிறவன்."

"பாத்தியா விட்டா உடனே நியாயம் பேசறியே. சரி நீ வா. புத்துக்குள்ளேயே கைய விடு. அப்பதான் உனக்கும் புத்திவரும்."

"என் புத்தி நல்லாத்தான் சார் இருக்கு. இது ஏதோ சோதனை சார் நான் இதுல மடங்கிப் போக தயாரா

இல்லை. நான் அந்த சித்தர் சாமிங்கள மலை போல நம்பறேன்.”

“நாங்களும் இந்த காட்டுலதான் கிடக்கறோம்.நாங்க ஒரு சாமிய கூட பாத்ததில்ல. மீறி தன்னை சாமின்னு சொல்லிக்கற யாரும் எங்க வரையில சாமிங்களே இல்ல. அதனாலதான் சொல்றேன். உணர்ச்சிவசப்பட்டு உசுரை விட்டுவைக்காதே."

“களங்கப்பட்டு நிக்கறத்துக்கு செத்துடுறது மேல் சார் எனக்கும் இந்த கஞ்சா பொட்டலம் எப்படி வந்துச்சுன்னு தெரியணும்.”

- ராமைய்யா குரலில் மெல்ல மெல்ல உறுதி கூடிக் கொண்டே போனது. அவர்கள் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, “இந்த மலைல புத்து கிடையாது. புத்து இருந்தா கரையான் இருக்கணும் கரையான் இருக்கற இடம் உருப்படாது. ஆனா, இந்த மலையோ பூலோக கைலாசம். இதுல எப்படி கரையான் இருக்கமுடியும்?

"அப்ப எதுக்கு அப்படி சொன்னிங்க?"

"உன்னை சோதிக்கத்தான். உண்மையான சித்த வைத்தியன்னா, சித்தர்கள் மேல பக்தி உள்ளவன்னா நீ வருவே. இல்லேன்னா திரும்பிப் போயிடுன்னு சொன்னப்போ இதுதான் சாக்குன்னு தப்பி ஓடப் பாத்துருப்பே. ஆனா, நீ அப்படி எதுவும் செய்யல. உறுதியா நின்னே. உன்னை பாராட்றேன். நான் தெரியாமதான் கேக்கறேன் இந்த கஞ்சா எப்படி வந்ததுன்னு நிஜமாலுமே தெரி யாதா?”

“பாராட்டிட்டு இப்படி ஒரு கேள்வியா சார்?"

"அப்ப ஒரு கேள்வி. உன்கூட வேற யாராவது வந்தாங்களா?”

“ஆமா. நேத்து ஒருத்தர் என்கூட வந்தார். பாதி வழில போய்ட்டார்.”

"அப்ப இது அவன் வேலையாதான் இருக்கணும். எங்ககிட்ட மாட்டிக்காம இருக்க இப்படி பண்ணியிருப்பான்.”

- அவர்கள் எடுத்துக் கொடுக்கவும், ராமைய்யாவும் ஆமோதிப்போடு யோசிக்கத் தொடங்கினார். அவனோடு வந்தபோது ஒரு இடத்தில் ஒரு அரைமணி நேரம் அமர்ந்து ஓய்வெடுத்தது நினைவுக்கு வந்தது. அப்போது அவன் கஞ்சாவை பையில் வைத்திருக்க வாய்ப்பு இருப்பது போல தோன்றியது.

“அந்த நபர் பார்க்க மலைப்பளியன் போல இருந்துருப்பான். ஆனா, உண்மைல அவன் பளியன் இல்ல. இந்த சாமியார்ங்களோட எடுபிடி"

“சரியா சொன்னிங்க சார். இன்னிக்கு இப்பகூட கொஞ்சம் முந்தி அவனைப் பார்த்தேன்.”

"அப்ப அவனேதான். இனியாவது எச்சரிக்கையா இரு"

“சரிங்க சார் என்னை நம்பினதுக்கு ரொம்ப நன்றி சார்..."

"ஒகே.நீ போகலாம்!”

- அவர்கள் விடை கொடுக்க ராமைய்யாவும் கிளம்பினார். அப்பாடா என்று இருந்தது. ஆயாசமாகவும் இருந்தது. தொடர்ந்து எப்படி மேலேறி மருந்து கண்டு பிடிக்கப் போகிறோமோ என்றும் தோன்றியது. மெல்ல

அடிவயிற்றைச் சுருட்டி பசிக்கவும் ஆரம்பித்தது. மலைக் காற்றின் சிலுசிலுப்பையும் மீறி லேசாக வியர்க்க வேறு செய்தது.அந்த நொடி கண்ணுக்கு எட்டியது தூரம் முட்டுப் பாறையும் வெற்றிடமும்தான் தெரிந்தது.

திரும்பிப் பார்த்தபோது அந்த அதிகாரிகள் வேறு வழித் தடத்தில் வெகுதுரம் போய் விட்டிருந்தனர். ராமைய்யாவுக்கு தன்னந்தனியாக நிற்பதில் முதல் தடவையாக ஒரு அசூயையும் கொஞ்சம் பயமும்கூட ஏற்பட்டது. பசியை உணரத் தொடங்கி விட்டதில் களைப்பாகவும் இருந்தது. குடிக்க தண்ணிர் கிடைத்தால் அது கூட சற்று தெம்பாக இருக்கக் கூடும். ஆனால், கண்ணுக்கு எட்டிய தூரம் தண்ணிர் இருப்பதற்கான அறிகுறிகளும் தெரியவில்லை.

என்னதான் செய்வது?

தான் கிளம்பி வந்ததே தவறா..?

மனதில் திரும்பவும் அந்த கேள்வி. அப்படியே ஒரு பாறைத் திண்டின் மேல் அமர்ந்து விட்டார். நல்ல வேளையாக வானில், உச்சியை நோக்கி சென்று கொண்டிருந்த சூரியனை மேகக் கூட்டம் மூடிமறைத்ததில் மலை முழுக்க பந்தல் போட்டது போல ஒரு நிழல்!

அவ்வேளையில் மனதுக்குள அந்த சிவநாமத்தை சொல்வதைத் தவிர வேறு வழி இருப்பதாகவும் தெரியவில்லை.

"ஓம் நமசிவாய... சந்தன மகாலிங்கத்துக்கு அரோ கரா, சதுரகிரி லிங்கத்துக்கு அரோகரா.சுந்தரமகாலிங்கத்துக்கு

அரோகரா... சித்தர்கள் போற்றும் சீரிய லிங்கத்துக்கு அரோகரா... பூலோக கைலாசத்துக்கு அரோகரா. புண்ணிய மாமலைக்கு அரோகரா..." - ராமைய்யாவின் உதடிரண்டும் வரிசையாக அரோகரா சொல்லியபடி வானைப் பார்க்க ஆரம்பித்து விட்டது.

அப்போதுதான் திரும்பவும் வந்து நின்றது அந்த நாய் 'லொள் லொள்` என்ற குரைப்புடன் யாரோ துரத்துவது போல ஒடி வந்த அது ராமைய்யா எதிரில் வாஞ்சையாக பார்த்தபடி நிற்கவும் செய்தது.ராமைய்யாவுக்குள் லேசாக ஒரு புத்துணர்ச்சி! 'பிலாவடிக் கருப்பு நாயாக வந்துச்சாக்கும்? என்று குடிசைக்குள் அந்த சித்தர் கேட்டது ஞாபகத்துக்கு வந்தது.கருப்பசாமி எப்பொழுது தவறாக வழி காட்டியிருக்கிறது? ராமைய்யா கைகளை கூப்பிக் கொண்டு நாயைப் பார்த்தார்.

‘சாமி. சோதிச்சது போதும். பசி ஒரு பக்கம், பயம் ஒருபக்கம். நான் இப்ப நானா இல்லை. நல்ல வழிகாட்டு.”

- அவர் வாய் விட்டே அதனிடம் வேண்டி நின்றார். அதுவும் சரி கிளம்பு. என்பது போல அங்கிருந்து கிளம்பியது. ராமைய்யாவின் வாழ்விலும் அவர் வாழ்நாளில் மறக்க முடியாத அதிசயங்களும், அற்புதங்களும் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தன!

# 15

மீண்டும் நாயிடம் ஒரு முன்னோட்டம்!

அதை பின்தொடர்வதா? வேண்டாமா என்கிற குழப்பங்களை எல்லாம் புறந்தள்ளி விட்டு ராமைய்யா அதன் பின்னேயே வேகமா நடக்கத் தொடங்கினார்.

'அந்த மலைத்தலத்தில் அது எந்த திசையில் செல்கிறது? அந்த திசை வழி சென்றால் என்னவெல்லாம் வரும்?' என்கிற ஒரு கேள்விக்கும் விடை தெரியாமல் ராமைய்யாவும் அதைத் தொடர்ந்தார்.

நல்லவேளை அது சென்ற வழியில் இரு குழி முயல்களைப் பிடித்துக் கொண்டு ஒரு பளிங்கன் வந்தபடி இருந் தான். அவனது தோளில் தொங்கிய துணிப் பைக்குள் பப்பாளி, அறுத்தெடுத்த பலா, சிறு குடுவைக்குள் மலைத்தேன், அப்புறமாய் ஒரு பத்துப் பதினைந்து நெல்லிக் காய்கள் எல்லாம் இருந்தன.

அவனைப் பார்த்த ராமைய்யாவும் சற்று தேங்கி நின்றார்.அதே சமயம் ஃபாரெஸ்ட் ஆபீசர்களிடம் பட்ட அவஸ்தையை சற்று உத்தேசித்து அவனை சற்று பயத்துடனும் பார்த்தார்.

“என்ன சாமி. இந்தப் பக்கமா எங்க போறீங்க?" அவன்தான் ஆரம்பித்தான்.

“அது… அது…" அவருக்கு தெளிவான ஒரு பதிலை சொல்லத் தெரியவில்லை.

“கோயில் அந்த பக்கமில்ல இருக்கு. இது படி வெட்டிப்பாதைக்கு போற வழியில்ல" என்றான்.

"என்னமோப்பா. வழிகாட்ட யாருமில்லாததால நானும் கால் போன போக்குல போய்கிட்டிருக்கேன்.”

"அடடே பாத்து போங்க. ஆமா, கைல சோத்து மூட்டையை காணோமே.பசிச்சா என்ன பண்ணுவீங்க?"

"தெரியலப்பா.தெய்வம் விட்ட வழி"

"போகட்டும் கைல காசு இருக்கா?"

"எதுக்குப்பா?"

"என்கிட்ட பழங்க இருக்கு. எனக்கு தேவை காசு. நாங்க அடிவாரத்துக்கு போய் தேனையும், பாலாவையும் வித்து காசாக்கி அதுக்கு அரிசி பருப்பு வாங்கிட்டு வருவோம்."

சொல்லிக் கொண்டே அவன் தன் துணி மூட்டையை திறந்தான்.உள்ளே மஞ்சளாய்ப் பப்பாளிப் பழமும், பலாச்சுளைகளும் ராமைய்யாவின் நாவில் எச்சிலை ஊற விட்டன.

ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டவும் தேனைத் தவிர மற்ற அத்தனையையும் கொடுத்து விட்டான் அவன்.

"தேனு?"

"இதுக்கு நூறு ருவா சாமி."

"அப்ப அது எனக்கு இப்ப வேண்டாம்" என்ற ராமைய்யா அந்த பழங்களை அப்பொழுதே சாப்பிடத் தொடங்கிவிட்டார்.அவ்வளவு பசி!

"கொஞ்சதூரம் போங்க.`கவுண்டி ஒடை`ன்னு ஒரு ஒடை வரும். அங்க தண்ணிய குடிச்சிக்குங்க. அப்படியே திரும்பற வழிய பாருங்க. தாண்டிப் போகப் பாக்காதீங்க.

போனவங்கள்ள பெரும்பாலோர் திரும்பி வந்ததே இல்லை.” என்று லேசாக பயமுறுத்தி விட்டுப் போனான்.

ராமைய்யாவுக்கும் ஒரளவு பசி அடங்கியது. கவுண்டி ஒடை என்று அவன் குறிப்பிட்டது கவுண்டின்ய நதியின் ஒரு பிரிவாகத்தான் இருக்க வேண்டும் என்றும் அவருக்குத் தோன்றிற்று.

சிறிது தூரத்திலேயே அங்கு ஒடையும் வந்து விட்டது. சலசலவென்று நீரோட்டம்! கண்ணாடிக் குழம்பு நீராக ஒடிக்கொண்டிருப்பது போல அப்படி ஒரு தூய்மை, பாதை வளைவுகளில் அந்த நீர் நுரைத்துக் கொண்டு பாயும்போது அது ஒரு தனி அழகாக இருந்தது. நீரை அள்ளி அள்ளிக் குடித்தார். ஏகாந்தமாக இருந்தது. ஒரு புது தெம்பும் உடம்பு முழுக்க ஊறத் தொடங்கிவிட்டது. இனி எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடக்கலாம் என்று அவர் முடிவு செய்தபோது, 'யார் சாமி அது?` என்று ஒரு பெண் குரல். குரல் வந்த திசையில் பார்த்தார். ஒடையின் போக்கில் ஒரு வளைவில் மார்பளவு நீருக்குள் ஒரு மலை சாதிப் பெண் உட்கார்ந்தபடி இருந்தாள். முன் கை இரண்டும் அவள் மார்பு மேல் மூடியபடி இருந்தது. அவள் முகத்திலும் ஒரு வித படபடப்பும், சலனமும் தெரிந்தது.

‘சாமி ஏதாவது துணி இருந்தா போடுங்க சாமி.என் சேலை குளிக்கைல தண்ணியோட போயிடிச்சு' என்றாள்.

-ராமைய்யாவுக்கு கொஞ்சம் சுருக்கென்றது.முதலில் திருதிருவென்று விழித்தார்.

“என்ன சாமி யோசிக்கிறீங்க. தெரியாம போதைப் பாலை குடிச்சுபிட்டேன். அதான் தெளியறதுக்காக தண்ணில வந்து விழுந்தேன். அந்த நேரத்துல உடுப்பு கழண்டதே தெரியல சாமி.”

“அதுக்கு என்ன என்னம்மா பண்ணச் சொல்றே, என்கிட்ட வேற வேட்டிதுண்டே இல்லையே.”

"சாமி உங்க உடுப்பையாவது கொஞ்சம் கழட்டிக் கொடுங்க சாமி…` அவள் கெஞ்சஆரம்பித்துவிட்டாள்

"அப்புறம் நான் என்னம்மா பண்றது?”

‘சாமி… நீங்க கோவணத்தோட கூட போக முடியும். ஆனா, பொட்டச்சியால அப்படி போக முடியுங்களா?”

“என்னம்மா நீ… என்னை இப்படிசோதிக்கறே?”

“நான் என்ன சாமி பண்ணுவேன். குளிர் வேற என்னை குடையுது. இன்னும் கொஞ்ச நேரம் நான் இப்படியே தண்ணிக்குள் கிடந்தா ஜன்னி வந்தே செத்துப் போயிருவேன். பெரிய மனசு பண்ணுங்க சாமி.”

அந்தப் பெண்ணின் குரலில் பரிதாபமும், விசும்பலும் கலந்து ஒலித்தது.

ராமைய்யாவுக்கு அப்போதுதான் தர்ம சங்கடம் என்பதற்கான அர்த்தம் நூறு சதம் கன பரிமாணமுடன் விளங்கியது.

அந்த மலைப் பிராந்தியத்தில் கால் வைத்த நொடி முதல்தான் எத்தனை எத்தனை விதமான அனுபவங்கள்.

தயங்கியபடி நின்றவர் காதுகளில் அவருக்கு முன்னாலே ஒடியபடி இருந்த நாயின் குரைப்பு சத்தம் கேட்டது.

“என்ன பண்ணிகிட்டிருக்கே. சீக்கிரமா வா. என்று திரும்பவும் அது அழைப்பது போல உணர்ந்தவர் மளமள வென்று வேட்டியை அவிழ்த்து அந்த பெண்ணை நோக்கி வீசினார். மேலே ஜிப்பாவும் கீழே பட்டா பட்டி அண்டர்வேர் மட்டும்தான் இப்பொழுது அவருடைய உடை! கையில், தான் கொண்டு வந்திருந்த அந்த மஞ்சள் பையுடன் அதற்கு மேல் நின்று நேரத்தை கடத்தாமல் நடக்கத் தொடங்கினார்.

நாய் அவருக்கு முன் ஒடி குடிசை ஒன்றின் முன் போய் நின்றிருந்தது. அந்த குடிசைக்கு வெளியே ஒரு சிவலிங்கம்! யாரோ பூஜித்தது போல மலர்கள் துவப் பட்ட நிலையில். சிறிய அகல் ஒன்றும் எரிந்து கொண்டு இருந்தது.

ராமைய்யா முதல் காரியமாக தன்னை மறந்து அதை வணங்கி நின்றார். அப்போது “வாப்பா வா..” என்று ஒரு குரல். திரும்பியவர் எதிரில் குடிசைக்குள் இருந்து வெளிப்பட்ட நிலையில் மூன்றடி உயரம் கூட இல்லாதபடி ஒரு நபர்.

கட்டை குட்டையான உருவம். பாதாங்காயை கல்லால் அடித்து சிதைத்தது போல கண்டு கண்டாய் தலை முடி, உதடே தெரியாதபடி புதர் போல தாடியும் மீசையும். ஆனால், கண்களில் ஒரு அசாத்ய பளபளப்பு.

ராமைய்யாவுக்கு முதலில் அவரைப் பார்த்தபோது யாரோ ஒரு ஆதிவாசியை பார்க்கிற மாதிரிதான்

இருந்தது. பிறகுதான் அவர் ஒரு சித்த புருஷர் என்கிற ஒரு மமகாரமே மனதில் ஏற்படத் தொடங்கியது.

“என்ன பாக்கறே... என்னைப் பார்த்தா வினோதமா இருக்கா?”

“சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல சாமி.”

“பொய் சொல்லாதே... மனசுல பட்டதை பேசணும். இங்க பொய், போலித்தனம், பேராசை, சந்தேக புத்தி இதுக்கெல்லாம் இடமே கிடையாது.”

“மன்னிச்சிக்குங்க சாமி. முதன் முதலாக உங்கள பாக்கவும் எனக்குள்ள ஒரு ஆதிவாசி நினைப்புதான் வந்தது..."

“அதுவும் சரிதான்... நானும் ஆதிவாசிதான்! இது எத்தனை வருஷத்து உடம்பு தெரியுமா?”

"சாமி ஈ...ஈ..."

“என்ன வழியெல்லாம் ஒரே சோதனையோ?”

“ஆமாம் சாமி. பல சமயங்கள்ள திரும்பிப் போயிடக் கூட நினைச்சேன். அப்புறம்தான் வைராக்யமா நடந்தேன்...”

"ஆமா. இந்த மலைக்காட்டுல யாரைத் தேடி இப்படி அலையறே?”

“எனக்கு போகர் சாமியை தரிசனம் பண்ணனும் அவ்வளவுதான் சாமி...”

“போகனோட காலமே வேற. அவன் இங்க இப்பவும் இருக்கான்னு உனக்கு யார் சொன்னது?”

“என் மனசு நம்புது சாமி. சித்த சாமிங்களுக்கு மரணம் கிடையாதுங்கறது என் நம்பிக்கை"

"நீ என்ன பெரிய ஸ்திரப் பிரக்ஞன்? உன் நம்பிக்கையை ஒரு கணக்குல எடுத்துக்கறதுக்கு"

"சாமி என்ன சொல்ாங்கன்னு புரியலிங்களே.”

“ஸ்திரப் பிரக்ஞன்னா அசையாத இரும்பு மாதிரி மனசு கொண்டவன்னு ஒரு அர்த்தம் உண்டு. அப்படிப் பட்டவன் ஒரு விஷயத்தை நம்பினாதான் அது நம்பிக்கை இல்லாட்டி அது ஆசை மூட்டை ஆசை மூட்டையெல்லாம் நம்பிக்கைன்னு சொல்லக் கூடாது. அது தப்பு.”

"அப்ப போகர் சாமி இப்பவும் இருக்கார்னு நான் நம்பறது வெறும் ஆசை மூட்டையா சாமி"

“பின்ன… இந்த மலைக்காட்டுல 120 வருஷமா நான் இருக்கேன். நீ நம்பற அந்த போகன் உண்மைல இருந்திருந்தா நான் பார்த்திருப்பேனே.”

"சாமி. உங்க பேரை நான் தெரிஞ்சிக்கலாங்களா?”

"ஆதிவாசின்னு வெச்சுக்கேயேன்…”

"ஐயோ சாமி… என்ன சோதிக்காதீங்க…”

“அட போடா. சரி போகன் இருக்கான்னே வெச்சுப்போம் பாத்து என்ன பண்ணுவே?”

“முதல்ல கால்ல விழுந்து கும்புடுவேன் சாமி.”

“நீ கும்புடலேன்னுதான் அவர் அழுதுகிட்டிருக்காராக்கும்?”

“இப்படி பேசினா எப்படி சாமி. அவர் எவ்வளவு பெரியவர்.அவரை கும்பிடறதுதானே முறை?”

“கும்பிட்டபிறகு என்ன பண்ணுவே?”

“மனசு விட்டு பேசுவேன் சாமி.”

“எதைப் பத்தி?”

“நான் ஒரு நாட்டு வைத்தியன். இன்னிக்கு உலகத்துல புதுசு புதுசா வியாதிங்க. அதுங்களப் பத்தி சொல்லி, அதுக்கு மருந்து கேப்பேன்.”

"ஆக கூடி இப்படி சில சமாச்சாரங்களை எதிர் பார்த்துதான் அவரைப் பார்க்க விரும்பறே. அப்படித் தானே?”

"ஆமாம் சாமி... ஐயோ இல்ல சாமி...”

“என்ன தடுமாறுறே?”

"அது..-என்ன சாமி நீங்க எப்படி பேசினாலும் அதுல தப்பு கண்டுப்பிடிக்கறீங்களே?”

“நான் எங்க தப்பு கண்டுபிடிச்சேன்? நீ உன் மனசுல இருக்கறத சொன்னே. நானும், அதைக் கேள்வியா கேட்டேன்.”

"சாமி உங்க கேள்வி சரிதான் சாமி. நான் எதிர் பார்த்துதான் வந்திருக்கேன். எதையும் எதிர்பார்க்காம இருக்க இந்த மனசுக்கு தெரியலை சாமி. ஆனா, என் எதிர்பார்ப்புல சுயநலமில்லை சாமி. நான் இந்த ஜன சமூகத்துக்கு வியாதியை விரட்ட சொல்லித் தர விரும்பறேன்.”

“இப்பதான் நீ சரியா பேச ஆரம்பிச்சிருக்கே போகட்டும். போகர் சாமியை எல்லாம் பாக்கறதுங்கறது சாதாரணமான விஷயமில்ல. அதுக்கு முந்தி நீ இந்த காட்டுல வாழக் கத்துக்கணும்.ஒரு நல்ல சிஷ்யனா தினசரி சிவ பூஜை பண்ணி மனசை எப்பவும் ஒரு கட்டுக்குள் வெச்சிக்கிடணும். முக்கியமா வாயைக் கட்டி பட்டினி கிடக்கணும். உன் பெண்டாட்டி பிள்ளைகளை பத்தியெல்லாம் கனவுலகட நினைச்சு பார்க்கக் கூடாது இதெல்லாம் உனக்கு சாத்தியப்படுமா?”

அந்தக் குட்டைச் சாமி முதல் தடவையாக போகர் சாமி இருப்பதை ஒப்புக் கொள்வது போல பேசினார் அதைக் கேட்கவும் ராமைய்யாவுக்கும் சற்று உற்சாகம் ஏற்படத் தொடங்கிற்று.

“சரி சாமி.” என்றார் சற்று தயக்கத்துடன்!

“என்ன. குரல்ல ஒரு சக்தியே இல்லையே.”

“அது இல்ல சாமி. நான் நீங்க விரும்பற மாதிரியே இருந்துடுவேன். ஆனா, எனக்கு இங்க யாரையும் தெரியாது. எங்க தங்கறது எப்படி ஏதுன்னு...”

அதைக் கேட்டு சிரித்த அந்த குட்டை சித்தர். "நீ இங்கயே என் கூடவே தங்கிக்கலாம். முதல்ல அந்த மேல் உடுப்பை கழட்டி எறி. மார்புல மலைக்காத்து படனும். அதுதான் நல்ல சிஷ்ய லட்சணம்'

“சரிங்க சாமி.” என்றவராக ராமைய்யா ஜிப்பா, பனியன், அதன் பின் அண்டர்வேர் என்று சகலத்தையும் கழட்டி விட்டு தோளில் கிடந்த துண்டை மட்டும் ஒரு தினுசாக மடித்து கோவணமாக கட்டிக் கொண்டார்.

“போ.போய் அந்த சிவத்தோட கால்ல விழுந்துட்டு வா..."

அதே போல சிவலிங்கம் அருகே சென்று மண்தரை மேல் திறந்த மேனி மண்ணில் பட விழுந்து எழுந்தார். அப்படியே திரும்பியவருக்கு தூக்கிவாரிப் போட்டது. அந்த குட்டைச் சாமி நின்று கொண்டிருந்த இடத்தில்...

## 16

ராமைய்யா திரும்பிப் பார்த்தபோது, அங்கே அவருக்கு ஆனந்த அதிர்ச்சி காத்திருந்தது. கட்டை, குடடையாய் சற்று விகாரமாக திப்பித் திப்பியாய் சடைபிடித்த குட்டை முனிவர் இருந்த இடத்தில் பளிச்சென்று துடைத்த பொன் விளக்கு போல, கொக்குச் சிறகு போன்ற தாடியுடனும், தலை முடியுடனும் அங்கே போகரே காட்சி தந்து கொண்டிருந்தார்!

ராமைய்யாவின் கண்களில் ஆனந்தக் கண்ணிர் பெருகி வழியத் தொடங்கிற்று.

"சாமி. போகர்சாமி.”

"பரவாயில்லையே. நான்தான் போகன்னு பார்த்த உடனேயே உனக்கு தெரிந்து போச்சா?”

"உங்க தேஜஸ்தான் சாமி காரணம். நான் ஒவ்வொரு துன்பமா அனுபவிச்சப்பல்லாம் ஒவ்வொரு படியா ஏறி உங்களை நெருங்கற மாதிரிதான் என் உள் மனசுல நினைச்சேன். அதனாலதான் உங்க தரிசனம் கிடைச்ச நொடி என் உள்மனசு நீங்கதான் நான் தேடிவந்த போகர் சாமின்னு சொன்னிச்சு”

“பலே… உனக்கு அறிவு மட்டுமில்ல. ஞானமும் நிறையவே இருக்கு கூடவே விதியும் இருக்கு அதனால தான் என் பிரசன்னம் உனக்கு நிகழ்ந்திருக்கு…”

"சாமி, பேச்செல்லாம் பிறகு. முதல்ல நான் உங்க பாதம் தொட்டு வணங்கிட்றேன். எந்த நிமிஷம் வேணா நீங்க மறைஞ்சு போயிடலாம் இல்லையா?”

-ராமைய்யா பேசியபடியே நெடுஞ்சாண்கிடையாக கீழே விழுந்தார். போக முனிவரின் பவழ நகங்களின் மேல் தன் கை விரல்கள் பட்ட நிலையில் அப்படியே தன் சென்னியை (தலையை) அந்த பாதங்களின் மேல் வைத்தார்.

சில செயல்களுக்கு விலை மதிப்பே கிடையாது. அதேபோல சில செயல்களுக்கு உலகையே புரட்டிப் போட்டு விடும் ஆற்றல் உண்டு. அதில் ஒன்று, ஞானியர் திருவடி தீட்சையாகும்.

ராமைய்யாவுக்கு உடம்பெல்லாம் மின்சாரம் பாய்ந்த மாதிரி இருந்தது. மெல்ல எழுந்து நின்றார். போக முனிவரும் புன்னகை பூத்தார். அருகில் அமரத் தோதாக இரண்டு பாறைகள். அதில் ஒன்றில் அவர் அமர்ந்து கொண்டார். எதிரே உள்ள பாறையில் ராமைய்யாவை அமரச் சொன்னார். ஆனால், ராமைய்யா சமதையாக அமர விரும்பவில்லை. கையை கட்டிக்கொண்டு ஒரு சீடனாக பணிவாகவே நின்றார்.

“சரி உனக்கு என்ன வேண்டும் கேள்?” போகரிடம் வரசித்தம் தொடங்கியது.

"சாமி… நான் பெரு நோய்க்கு மருந்து தேடி வந்தேன். எந்த ஒரு நோயாளி என்கிட்ட வந்தாலும் உங்க அருளால நான் அந்த வியாதிகளை விரட்டி அடிக்கணும். அதுக்கான வழிகாட்டுதல் வேணும்…"

"அப்பனே. உலகத்துல கோடி வியாதியஸ்தர்கள் இருக்கலாம். அதுக்கெல்லாம் அவங்க கர்மமே காரணம். அவர்கள் எல்லோருக்கும் உன்னால மருந்து தர முடியாது. உனக்கும் வியாதியஸ்தனுக்கும் ஒரு கர்மத் தொடர்பு உண்டு. அந்த தொடர்புடையவன்தான் உங்கிட்ட வருவான்.அவனுக்கும் உங்கிட்டவந்து தான் நீங்கணும்னு அமைப்பு இருக்கும். அப்படிப்பட்ட அமைப்புள்ளவனுக்கே உன்னால மருத்துவம் செய்ய முடியும். ஆகையால உலகத்தையே நாம ஜெயிக்கப் போறோம்கற மமகாரத்தை முதல்ல விடு.

உன்னை நீ முதல்ல வியாதிகள்ள இருந்து பாதுகாத்துக்கோ. நீ வியாதியில விழாம இருக்கறதே கூட சமுதாயத்துக்கு செய்யற ஒரு தொண்டுதான். ஆயிரம் வார்த்தைகளால விளங்க வைக்க முடியாததை ஒரு செயல் விளங்க வைச்சிடும்.

நீ உன்னை திடமான தேகமுள்ளவனா ஆக்கிக்கோ. உன்னைப் பார்த்தே பலர் தானா திடத்துக்கு அர்த்தம் தெரிஞ்சிக்குவாங்க

நானும் எவ்வளவோ எழுதி வெச்சேன்.

ஆனா, அதனால நோயில்லாத ஒரு சமுதாயம் உருவாகலை.நான் எழுதி வெச்சது பாடல்கள் 12000த்துக்கும் பக்கம். ஆனால் இப்ப இருக்கறது

ஏழாயிரம் சொச்சம் தான்! அதையும் தெளிவா விளங்கிக்க யாருமில்லை.

ஒரு வேளை நீ விளங்கிக்கிட்டாலும் உனக்கு கை கொடுக்க சில மூலிகைகள் இந்த மண்ணுல இல்ல. பருவ காலங்கள் ரொம்பவே மாறிப் போச்சு வெளிப்பொழுதுகளோட உஷ்ணம் சமச்சீரா இல்லை.

மனித சமுதாயம் தூரத்தைக் கடக்க கண்டுபிடிச்ச வாகனங்களும் அதோட புகையும் வானவெளியையே அழுக்காக்கிட்டு வருது.

எப்பவும் ஒண்ணை இழந்தாதான் ஒண்ணு கிடைக் கும். விஞ்ஞானம் எங்கல்லாம் விசுவரூபம் எடுக்குதோ அங்க மெய்ஞானமும் நுண்ணுயிர்களும் அரூபமாகும்.

இதுபோகப் போக அதிகமாகுமே தவிர குறையாது. இந்த பூலோக கைலாசமான சதுரகிரி மலையே நூறு வருஷத்துக்கு முந்தி இருந்த மாதிரி இல்லை.

அழுக்கண்ணின்னு ஒரு மூலிகை,

தொழுகண்ணின்னு ஒரு மூலிகை.

இது எப்பவும் சூரியனைப் பார்த்த மாதிரியே இருக்கும்.இதோட பூ நல்ல வெண்மை நிறத்துல இருக்கும். அதை சம அளவுல சப்தமில்லாம இடிச்சு சாறெடுத்து பின் சூரணமாக்கனும் சப்தமில்லாதபடி இடிக்கறது ஒரு கலை. இடிக்கும்போது சப்தம் எழும்பினா அழுகண்ணியும், தொழுகண்ணியும் உள்கட்டமைப்புல சிதைஞ்சு உயிர்ப்பச்சையம் அவ்வளவும் செத்துப் போகும். ஆகையால

சப்தமில்லாம இடிச்சு சாறெடுக்கறதும், சூரணமாக்கறதும் பயிற்சியால்தான் வசப்படும்.

இந்த சூரணத்தை காராம் பசுவோட கறந்த பாலில் கறந்த நொடியில இருந்து அறுபது நொடிக்குள் தினமும் பிரம்ம முகூர்த்த வேளையான சூரியன் உதிக்கற காலத்துல ஐம்பதாவது நிமிஷத்துல இருந்து அறுபது நிமிஷத்துக்குள்ள உள்ள பத்து நிமிஷ கால அளவுல சாப்பிடணும். இப்படி நூத்து எட்டு நாள் தவறாம சாப்பிட்டு வந்தா பெரு நோய் நீங்கும்.

யாருக்கு அது நீங்கணும்னு விதி இருக்கோ அவனுக்குதான் நான் சொன்ன இந்த காலப் பிரமாணம் வசப்படும். அழுகண்ணியும் தொழுகண்ணியும் கிடைக்கும். விதி இல்லாதவனுக்கு கதியும் கிடையாது.

இது உனக்கு புரியணும் புத்திக்கு இது புரியாது.அது கேள்விகளாகத்தான் கேட்கும். ஞானமிருந்தா நான் இதை எல்லாம் எந்த அர்த்தத்துல சொல்றேன்னு உனக்கு புரிஞ்சிடும். அதன் பிறகு நீ கேள்விகள் கேட்க மாட்டே என்கிட்ட மவுனத்துலதான் பேசுவே."

போகரின் அந்த நீண்ட விளக்கதுக்குப் பின் ராமைய்யாவையும் மவுனத்துக்கு மாறி விட்டார். அதன் பிள் கேள்விகளே இல்லை. போகரும் அவர் எதிரிலேயே குளிகை ஒன்றை வாயில் அடக்கிக் கொண்டு ஆகாய மார்க்கத்தில் அப்படியே சஞ்சரிக்கத் தொடங்கி விட்டார்.

எது எப்படியோ ராமைய்யாவின் நம்பிக்கை வீண் போகவில்லை. அவருக்கு அடுக்கடுக்காகச்

சோதனைகள் ஏற்பட்ட போதும் சித்த தரிசனம் இறுதியில் கிடைத்து விட்டது.

தரிசனம் மட்டுமா கிட்டியது? கூடவே நிகரில்லாத உபதேசமும்."யாருக்கு விதி இருக்கிறதோ அவரே வருவர். வராதவர்களைப் பற்றி எதற்கு கவலை? - எல்லாமே ஒரு கணக்குக்கு கட்டுப்பட்டு இருக்கிறது. தான் மனிதனாகப் பிறந்தது. அதிலும் ஒரு சித்த வைத்தியனுக்கு மகனாகப் பிறந்தது, அப்படி எடுத்த பிறப்பை பரந்த இந்த பூ உலகில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட மொழி பேசும் இனத்துக்குள் எடுத்தது, பின் அந்த சூழலில் வளர்ந்தது என்பது வரை எல்லாமே ஒரு கணக்கு கூட்டிக் கழித்து வகுத்துப் பெருக்கி பார்க்கத் தெரிந்தால் எல்லாவற்றிலும் மிகச் சரியான ஒரு காரண காரியம் தெரியும். நள்ளிரவில் ஒருவன் குடித்துவிட்டு வழிப்பறி செய்து பிழைப்பதில் இருந்து, வனாந்திரம் ஒன்றில் சிவனே என்று ஒருவர் தவமியற்றிக் கொண்டு இருப்பது வரை ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணமும், கணக்கும் இருக்கிறது. அதைத் தவறாகவும் சரியாகவும் பார்ப்பது என்பது ஒரு விதம்… அதை ஒரு நிலைப்பாடாக மட்டுமே பார்ப்பதுதான் ஞானம்.

அறிவின் அனுபவப்பட்ட தெளிந்து முதிர்ந்த நிலையே ஞானம். அறிவின் நிலைப்பாடு ஒரு வேகாத அரிசியைப் போன்றதென்றால் ஞானத்தின் நிலைப்பாடு அது வெந்து குழைந்த சாதத்தைப் போன்றது.

ராமைய்யாவும் அந்த மலைக்குள் கால் வைத்த போது, அரிசியாகத்தான் இருந்தார். அங்கிருந்து திரும்பத் தொடங்கிய போது அவர் வெந்து குழைந்த சாதம் போலாகி விட்டார்.

ஊர் திரும்பியவரிடம் பெரிய அளவில் மவுனமே ஆட்சி செய்தது. வலி என்று தேடி வந்தவர்களுக்கு அவர் போகரை மனதில் நினைத்து வணங்கி விட்டு ஒரு பிடி மண்ணை அள்ளிக் கொடுத்தாலும் அது மருந்தாகி வேலை செய்தது.

எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் சத்தமாகவும், ஆக்ரோஷமாகவும் புத்தி பூர்வமாகவும் உரையாடும் ராமைய்யா ஒரு மவுனியாக மாறி கிட்டத்தட்ட அவரே ஒரு சித்த புருஷர் அளவுக்குப் போய் விட்டார்.

'இந்த மாற்றத்திற்கு எது காரணம்? என்று அவரது நண்பர் ஒரு இணக்கமான சூழலில் கேட்ட போது நிதானமாக அவரிடம் மட்டும் தனக்கு கிட்டிய போகர் தரிசனத்தை அவர் சொல்லி மகிழ்ந்தார். வெளியே தம்பட்டம் அடித்துக் கொள்ளவில்லை. தன்னையும் ஒரு ஞானியாகவெல்லாம் காட்டிக் கொள்ளவேயில்லை.அந்த நண்பரே பின்னாளில் இந்த உண்மைகளை உரியவர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

இந்த பிரபஞ்சத்தில் எல்லாமே ஒரு கணக்குக்கு உட்பட்டே நடக்கிறது என்பது அவருக்குரத்த சுத்தமாக புரிந்துவிட்ட நிலையில் அவர் மனதுக்குள் ஒரு சமாதானம் வந்து குடி கொண்டு விட்டது. மனித மனதுக்கு சமாதானம்தான் பெரிய விஷயம்.அது ஏற்பட்டுவிட்டால் அதன் பின் இந்த உலகின் எந்த ஒரு துன்பமும் அவனை எதுவும் செய்யாது.

ரமண மகரிஷியை புற்றுநோய் கொத்தி விழுங்கப் பார்த்தது. அதை அவர் திடமாக எதிர்கொண்டார். ஏன் என்றால், அது எதனால் தனக்கு வந்தது என்ற காரணம் அவருக்கு விளங்கியிருந்தது. அதனால் ஒரு சமாதானம்

அவரிடம் எப்பொழுதும் இருந்தது! எனவே, வலி எடுத்து உடம்பில் துன்பம் பரவிய போதெல்லாம் 'ஆஹா என்னை ஆட்கொண்ட உபாதையின் கணக்கு தீரத் தொடங்கி விட்டது. நான் அனுபவிக்க அனுபவிக்க அதன் அளவு குறையும்.ஒரு கட்டத்தில் அது முற்றாக தீர்ந்து போகும். கணக்கு தீர வேண்டும் என்றால் வலியை வேகமாக அழைக்கும் திராணி. வாவலியே வா. இன்னும் பெரிய அளவில் வா` என்று அழைக்கும் மனோதிடம் வேண்டும் என்றார்.

சொன்னது மட்டுமல்ல, அப்படித்தான் அவர் செய்தார். ஒரு நாள் ஒரு அன்பரோடு பேசிக் கொண்டிருந்தபோது உபாதை அதிகமாகி விட்டது. அதை இசையை கேட்பது போல ரசித்தாராம் அவர்.

"ஆஹா. என்னமா வலிக்குது தெரியுமா? இது அற்புதமான வலி.என் வாழ்நாள்ளயே இப்பதான் பெரிய அளவிலான வலியை அனுபவிக்கிறேன். ஒரு பளுத்தூக்கி பயில்வான் பல மடங்கு எடையை தூக்கி சாதனை செய்ய ஆசைப்படற மாதிரி, நான் அதிக வலியை அனுபவிச்சு அதன் முன்னால சிரிக்க விரும்பறேன்." என்றாராம் சிரிக்கவும் செய்தாராம்.

அதுதான் ஆன்மாவின் வலிமை!

அந்த வலிமை தன்னை அறிந்த சித்த புருஷர்களுக்கே சாத்தியம். அவர்களது ஒவ்வொரு செயலும் நாம் விளங்கிக் கொள்ள இயலாத ஜாலம்தான்... இறவாத வாழ்வு வாழும் அவர்களை தரிசிக்க முடியும் என்று நாம் எந்த புள்ளியில் நம்பத் தொடங்குகிறோமோ, அந்த நொடியே நமது வாழ்வும் சத்யபூர்வமாக மாறத்

தொடங்கி விடுகிறது ராமைய்யாவுக்கும் அப்படித்தான் மாறியது.

இந்த பாரத பூமியில் எவ்வளவோ சித்த புருஷர்கள்... அவர்களில் சிலரைப் பற்றி சிந்திக்க இத்தொடர். வாய்ப்பளித்தது. எதிர்காலத்தில் மேலும் பலரைப் பற்றியும் அவர்களின் உள்ளையும் புறத்தையும் நாம் உணர்ந்து தெளிய அந்த சித்தபுருஷர்களின் ஆசிகளே நமக்கு பலமாகத் திகழ்ந்து வழிகாட்டட்டும்.

வாழ்க சித்தர்களின் புகழ்...

முற்றும்